யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்

பொது சன நூலகம்
25 APR 1998
மாநகராட்சி
யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை12 சனிக்கிழமை (25 – 04 – 1998) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்: 47

# அத்தியாவசிய சேவையாக தபால் சேவை பிரகடனம்!

## தொழிற்சங்கத் தலைவர்களும் கைது

கொழும்பு, ஏப்ரல். 25

அவசரகாலச் சட்டவிதிகளின்கீழ் தபால், தொலைத்தொடர்பு சேவை இன்று காலை 6.00 மணி முதல் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து, சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தில் தற்போது ஈடுபட்டிருக்கும் தபால் ஊழியர்களின் தொழிற்சங்கத் தலைவர்கள் பத்துப்பேர் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர்.

அதே சமயம்,

கொழும்பு டி. ஆர். விஜேவர்த்தனா மாவத்தையில் (மக்கலம் வீதியில்)உள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்குள் இராணுவமும் பொலிஸும் புகுந்து நிலைகொண்டன.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து தபால் சேவையை அத்தியாவசிய சேவைகளுள் ஒன்றாக ஜனாதிபதி பிரகடனம் செய்திருக்கின்றார்.

சட்டப்படி வேலைப் போராட்டத்தில் கடந்த நாற்பது நாள்களாக ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சரவை உப-குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சுக்கள் தோல்வியடைந்ததையடுத்தே இந்த பிரகட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.

## மட்டக்களப்பில் ஐக்கிய மே தினம்

மட்டக்களப்பு, ஏப். 25

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல் எவ். ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து மட்டக்களப்பில் ஐக்கிய மேதினத்தைக் கொண்டாடுகின்றன.

ஐக்கிய மேதின அறைகூவல் என்ற தலைப்பில் அவை விடுத்துள்ள அறிக்கையில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட வலியுறுத்தப்பட்டுள்ளது.

காந்தி சிலையடியில் இருந்து மேதின ஊர்வலம் ஆரம்பமாகும். தேவநாயகம் மண்டபத்தில் மேதினக் கூட்டத்தை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

(உ–3)

## 15 வருடங்களின் பின்னர் மாநகர சபை கூடியது

யாழ்ப்பாணம், ஏப். 25

கடந்த 15 வருட கால இடைவெளியின் பின்னர் யாழ். மாநகரசபை நேற்றுக் கூடியது.

ஜனவரி 29 ஆம் திகதி நடந்த தேர்தலில் தெரிவான மேயர் திருமதி சரோஜினி தேவி யோகேஸ்வரன் தலைமையில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு மாநகரசபை கூடியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களும், புளொட் அமைப்பைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் இரு உறுப்பினர்களும் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

நேற்றைய கூட்டத்தில் நிதிக்குழு, மராமத்துக் குழு, சுகாதாரக் குழு ஆகியவற்றுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துரையப்பா அரங்கு: பெயர் மாற்ற சர்ச்சை!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு தந்தைசெல்வாவின் பெயரைச் சூட்டுவது தொடர்பாக யாழ். மாநகர சபையில் நேற்று சூடான கருத்துப்பரிமாறல் இடம் பெற்றது.

மாநகரசபையின் கூட்டம் நேற்றுக் கூடிய போது அங்கத்தவர்கள் சமர்ப்பித்துள்ள பிரேரணைகள் அக்கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று மேயர் அறிவித்த போதும்–

யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு தந்தை செல்வாவின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று புளொட் உறுப்பினர் செ. கிருபைராசா முன்னறிவித்தல் கொடுத்த பிரேரணை

( 8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் 'எய்ட்ஸ்' நோயாளி!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். குடாநாட்டுப் பகுதியில் 'எய்ட்ஸ்' நோயாளி என சந்தேகிக்கப்படும் மற்றும் ஒருவர் கண்டு பிடிக்கப் பட்டுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வரும் ஒரு நோயாளியே சந்தேகிக்கப்படுபவராவார்.

கடந்த 5 மாதங்களுக்கு மேலாக மாறாத இருமல், சளி என்பவை காரணமாக கடந்த 12 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டார்.

இவரது நோய்க்கு நீண்ட நாள்களாக அளிக்கப்பட்ட பல்வேறு சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் அவர் எய்ட்ஸ் தொடர்பான பூர்வாங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைக் குழுவுக்கு வழங்கும் நிதியை நிறுத்த அமெரிக்கா முடிவு

கொழும்பு, ஏப். 25

ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிவந்த நிதி உதவியை நிறுத்துவதென அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுதல் மற்றும் ஆள்கள் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் முக்கிய சுயாதீன நிறுவனமான ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அமெரிக்கா உதவித்திட்டம் ஒன்றின் கீழ் நிதி வழங்கிவந்தது.

அமெரிக்காவின் நிதி நிறுவனம் தொடர்பான அதிகாரி ஒருவரை அனுப்பி அந்த ஆணைக்குழுவின் அறிக்கைகளைப் பரிசீலிக்க முயற்சி எடுக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டுக்கு இலங்கை அரசு அனுமதிக்காததால் நிதி உதவியை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 3 புலிகள் பலி!

மட்டக்களப்பு, ஏப். 25

அக்கரைப்பற்றில் படையினர் மேற்கொண்ட இரு வேறு தாக்குதல்களில் 3 புலிகள் உயிரிழந்ததாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கோயாவில் பகுதி சுற்றிவளைக்கப்பட்டதில் ஒருவரும், திருக்கோயில் பகுதியில் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் இருவரும் உயிரிழந்ததாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ–21-3)

## கிரனேட் வீச்சு

அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் மீது இளைஞர் ஒருவர் கிரனேட்டை வீசியதாகக் கூறப்பட்டது.

இதனை அடுத்து அந்தப் பகுதி விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப் பட்டு தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (உ–9)

## பிரேமா கொலையின் பின்

## ஐ. தே. க. நடத்தும் முதல் மேதினப் பேரணி!

கொழும்பு, ஏப். 25

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்ட பின்னர்— ஐந்து ஆண்டுகள் கழிந்து— முதல் தடவையாக இம்முறை ஐ.தே.க. மேதின ஊர்வலம் நடத்தவிருக்கிறது.

கண்டியில் ஐ. தே. க. நடத்தவிருக்கும் மேதினத்தையொட்டி பேராதனையில் இருந்து போகம்பரை வரை ஊர்வலம் நடத்தப்படும்.

மேதின ஊர்வலத்தில்

(8 ஆம் பக்கம் பாக்க)

## கிரிக்கெட் வீரர்கள் ஒழுக்கம் பேணினர்

### கப்டன் ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 25

தென்னாபிரிக்காவில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணி வீரர்கள் சிலர் துர்நடத்தையில் ஈடுபட்டதாக வெளி வந்த செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று ஸ்ரீலங்கா அணியின் கப்டன் அர்ஜுன் ரணதுங்க தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'வெற்றி உறுதி' முடியும் வரை

## தளபதி தலுவத்தவுக்கு மேலும் சேவை நீடிப்பு?

கொழும்பு, ஏப். 25

வன்னியில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகும் வரை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தலுவத்தவின் சேவைக் காலம் நீடிக்கப்பட விருப்பதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் நேற்று நள்ளிரவு தெரிவித்தன.

இவ்வாரத்தில் ஓய்வு பெற வேண்டிய அவருக்கு மேலும் 6 மாத காலம் சேவை நீடிப்பு வழங்கப்படலாம் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

(உ–10-3)

புதுமையும் எழி[illegible] [illegible]ல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் வைத்தியநாதக் குருக்கள் அவர்கள் எதிர்பாராத நிலையில் சிவபதம் அடைந்துவிட்டார். இதனால் இவரே முன்னின்று நடத்தவிருந்த புளியந்தீவு நாகேஸ்வரன் தேவஸ்தானம் அனலைதீவு மகா கும்பாபிஷேகம் பின்போடப் பட்டுள்ளது. இதன் மறுதிகதி வெகுவிரைவில் அறிவிக்கப்படும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.

—நன்றி வணக்கம்!

புளியந்தீவு நாகேஸ்வரன் பரிபாலனசபை,
அனலைதீவு.

(55213)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராஜா

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நடராஜா அவர்கள் 22-04-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா (காரைநகர்), மனோன்மணி கந்தையா அவர்களின் அருமை மகனும், காலஞ்சென்ற அப்புக்காத்து A. V. குலசிங்கம் (காரைநகர்), அவர்களின் பேரனாரும் காலஞ்சென்ற வே. தில்லையம்பலம் கனகம்மா தம்பதியரின் அருமை மருமகனும் யசோதராம்பிகையின் அன்புக்கணவரும், பவித்ரா, செந்தில்க்குமார், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும சுந்தரேஸ்வரி பேரம்பலம் (U. K.), சுந்தர்ராஜா (U. K) சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26—04—98 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளவும்.

3/3 A, டி. பொன்சேகா பிளேஸ்
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 4

தகவல்:
சிறிஸ்கந்தராஜா [தம்பி]

47 பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி-3542)

### சுந்தரம்பிள்ளை இராஜநாயகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுந்தரம்பிள்ளை இராஜநாயகம் நேற்று (24. 04. 98) தெகிவளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை பறுவதம் தம்பதிகளின் அன்பு மகனும், சிவயோகத்தின் அன்புக்கணவரும், பரதன் (லண்டன்), பாரதி (தெகிவளை), சுரபி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். வினோதினி, தேவகி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற செல்வநாயகம், சிவமணி, தேவமணி, சாவித்திரி ஆகியோரின் பாசமிகுசகோதரனும். காலஞ்சென்ற புஸ்பராணி, கோபாலகிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, அத்துவிதானந்தன் ஆகியோரின் மைத்துனரும், தனுபார்கவி. அபிமன்யு ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிறு(26.04.98) தெகிவளையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி நவநீலயோகராசா,
2/4/5 இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

24/B பரகும்மாவத்தை,
தெகிவளை.

(55210)

### இரத்தினசபாபதிக் குருக்கள் புவனேஸ்வரிஅம்மா

(அரியாலை)

அரியாலையைச் சேர்ந்த இரத்தினசபாபதிக் குருக்கள் புவனேஸ்வரிஅம்மா நேற்று (24-04-98) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதிக் குருக்களின் அன்பு மனைவியும், இ. சுப்பிரமணியக் குருக்கள் (சித்தி விநாயகர் கோயில் பிரதமகுரு), காலஞ்சென்ற சரஸ்வதி அம்மா - சாம்பசிவசர்மா, காலஞ்சென்ற அம்பிகை - சிவராசாஐயர், சௌந்தராதேவி - கணேசசர்மா காலஞ்சென்ற நடேசசர்மா, ஜகதீஸ்வரி - வரதராஜசர்மா, காலஞ்சென்ற கணேசசர்மா, குமாரசாமிக்குருக்கள் (இந்தியா) ஆகியோரின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 77/2 ஆனந்தம் வடலி வீதி, கொழும்புத்துறையில் 24-04-98 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

77/2, ஆனந்தம்வடலி வீதி,
கொழும்புத்துறை.

(55207)

## வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஏப். 25

ஐந்து நாட்களாக இரவு வேளை தொடர்ந்து தன் வீடு மீது கல் வீச்சு இடம்பெற்றதை அடுத்து ஐந்தாவது நாள், இரவு கல்லெறிபவர்களைக் கண்டு பிடிப்பதற்காக வீட்டுக்காரர் வெளியே வந்து பார்த்த போது வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

கோண்டாவில் வடக்கில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் மயில்வாகனம் குணரட்ணம் (வயது 35) என்பவரே காயமடைந்தார்.

இவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வளவின் பூக்கன்றுகளுக்கிடையில் மறைந்திருந்தவர்களே வாளால் வெட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-139)

## தடகளப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 25

வலி - வடக்குப் பிரதேச செயலகர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா இன்றும், நாளையும் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(உ-3)


ஸ்ரீ செல்வா திரையரங்கு
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
விஜய், ரம்பா, தேவயாணி நடித்த
நினைத்தேன் வந்தாய்
நேரடி CD யில் காண்பிக்கப்படுகின்றது.
பெண்களுக்கு ஆசனப் பகுதி உண்டு.
தினசரி
10-30, 2-30 மணிக்கு
(பழைய நேரம்)
(55212)

சுன்னாகம்
நாகம்ஸ்
சினிமா
அகல வெண்திரையில்
25-04-98 சனி
சிவாஜி, வாணிஸ்ரீ நடித்த
150 நாள்களுக்கு மேல் ஓடிவெற்றி வாகை சூடிய காதல் காவியம்
வசந்த மாளிகை
(CD வெளியீடு)
10- 30 — 2-30
(பழைய நேரம்)
(55214)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
சனி, ஞாயிறு
சிவாஜி கணேசன், ஜெயலலிதா, முத்துராமன், நம்பியார், நாகேஷ் நடித்த
சவாலே சமாளி
நேரம்:- 10-30, 2-30
தொலைபேசி இல:
070 212223
(55008)


## வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

அச்சுவேலி வாதரவத்தை இரட்டைக் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள 16 இராணுவத்தினரும் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நேற்று யாழ். நீதிமன்றில் வழக்கை விசாரித்தநீதிவான் பி. பாலசந்திரன்விசாரணைகள் முடிவடையாமையால் வழக்கை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா செல்லத்துரை

(ஓய்வுபெற்ற Chief Designer
புடைவைக் கைத்தொழில் அமைச்சு)

உரும்பிராயைச் சேர்ந்தவரும், தற்போது Australiaவில் வசித்தவருமாகிய தம்பையா செல்லத்துரை ஆஸ்திரேலியாவில் 17-4-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சரவணையைச் சேர்ந்த தம்பையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், இந்திராணி (U.K.), சட்டத்தரணி இரவீந்திரன் (Australia), செல்வராணி (Australia), புவீந்திரன் (Australia), சத்தியராணி (Austrelia), விஜயராணி (Australia), விக்கினேஸ்வரன் (Australia) ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன் (U.K ), Australiaவில் இருப்பவர்களாகிய நளாயினி, பொறியியலாளர் இராசரெத்தினம், பொறியியலாளர், அரசரெத்தினம், திருமதி புவீந்திரன் அருணகிரி, தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், தாமோதரம்பிள்ளை, இராசம்மா, கனகரெத்தினம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகநாதன், மருதயினார் (Germany), காலஞ்சென்ற றகுநாதன், சத்தியபாலதேவி (பேபி), காலஞ்சென்ற ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புத் தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20 - 4 - 98 இல் Australiaவில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
தாமோதரம்பிள்ளை இராசம்மா
(சகோதரி)
ஆறுமுகம் பாலசிங்கம்
(மருமகளின் கணவன்)

74, இந்துக் கல்லூரி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(55220)

### சின்னத்துரை மகேந்திரம்

(V. S. மகேந்திரம்)

(இளைப்பாறிய W. S. நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி)

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், ஆடியம்பிட்டி ஒழுங்கை, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட V. S. மகேந்திரம் நேற்று 24-4-98 அன்று பிற்பகலில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுபத்திராதேவியின் (குடிநீர்வாய்க்கால் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், சுகன்யா (உயர்தர கணித பிரிவு மாணவி 95), கண்ணன் (உயர்தர கணித பிரிவு மாணவன், டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி), ஜெகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வைரவநாதன் சின்னத்துரை- பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சி. கமலேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), யோகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ந. சிவலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), யோ. விஜயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-4-98) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
திருமதி ம. சுபத்திராதேவி
(மனைவி)

14/7, ஆடியம்பிட்டி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(சி/3549)

### திருமதி அற்புததேவமலர் இராமலிங்கம்

அரியாலை மேற்கு, கலைமகள் வீதியைச் சேர்ந்த திருமதி அற்புததேவமலர் இராமலிங்கம் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு இராமலிங்கம் (முன்னாள் A. G. A., மன்னார்) அவர்களின் அன்பு மனைவியும், சகோதரி சுபந்தினி (இலங்கை பெந்தக்கோஸ் சபை, நாவலப்பிட்டி), திருமதி இரஞ்சினி மகேந்திரன் (ஆசிரியை, யா/நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்), செல்வி சாந்தினி (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற எபிரோன் ஆறுமுகம், நாத் ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், திருமதி செல்லமுத்து நேசமலர் (கொழும்பு), திருமதி நடராஜா கிறிஸ்துமலர் (ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும், திரு. இராமலிங்கம் மகேந்திரனின் அன்பு மாமியாரும், தாரகா, தேணுகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 25-4-98 (புதிய நேரம்) மு. ப. 10.00 மணியளவில் யாழ். கொட்டடி பெந்தக்கோஸ் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. மகேந்திரன்
(மருமகன்)

இல: 58, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(55216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# காலவரையறை இல்லாமலேயே

# 'வெற்றி உறுதி' தொடர்வது உறுதி!

'வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து இன்னும் பதினைந்து நாள்களில் ஒரு வருடம் பூர்த்தியாகப் போகின்றது. ஸ்ரீலங்காவின் சரித்திரத்தில் மிக நீண்ட கால இராணுவ நடவடிக்கையான 'வெற்றி உறுதி' மேலும் பல காலத்துக்கு நீடிக்கப்படும் என்பது மட்டும் இப்போது உறுதியாகியுள்ளது.

'வெற்றி உறுதி' நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வன்னிக்களத்தில் இடம்பெறும் ஒவ்வொரு சமரும் இதைத் தெளிவுபடுத்துகின்றன.

ஒலுமடு, மூன்று முறிப்புப் பகுதிகளில் இருந்து கடந்த திங்களன்று படைகள் மேற்கொள்ள முயற்சித்த நகர்வை அடுத்து அங்கு வெடித்த பெருஞ்சமரும் இதையே தெளிவுபடுத்தி நிற்கின்றது.

கடந்த திங்களன்று பெருத்த எடுப்பில் நகர்வதற்கு — பல நூற்றுக்கணக்கான படையினர் — கவச வாகனங்கள்— பீரங்கி, ஷெல் முழக்கங்கள் — விமானக் குண்டு வீச்சுக்கள் — ஆகியவற்றுடன் எடுத்த முயற்சியை முளையிலேயே கிள்ளித்தூக்கி வீசுவது போல முறியடித்தார்கள் புலிகள்.

தாம் நிலை கொண்ட இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் கூட நகர்வதற்கு முன்னரே புலிகளின் பெரும் தாக்குதலை படைகள் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அத்தாக்குதல்களில் நான்கு அதிகாரிகள் உட்பட ஐம்பதுக்கும் அதிக படையினர் உயிரிழந்தனர்; பத்து அதிகாரிகள் உட்பட முந்நூறுக்கும் அதிக படையினர் படுகாயமடைந்தனர். அவர்களில் நூற்றுப் பத்துப் பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஒரு சேணல், ஒரு மேஜர் உட்பட சில படையினர் காணாமற் போயினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சமரில் புலிகள் தரப்பில் அறுபது பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அரசுத்தரப்புச் செய்திகள் தகவல் வெளியிட்ட போதிலும் தங்கள் தரப்பில் 11 பேரே உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். புலிகள் தரப்பில் காயப்பட்டோர் எண்ணிக்கை என்னவென்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

படையினரின் இந்த நகர்வு முயற்சியைப் புலிகள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர் என்பது நகர்வின் ஆரம்பத்திலேயே அந்த முயற்சியை முறியடித்த புலிகளின் நடவடிக்கைகளில் இருந்து ஓரளவு உணரமுடிகின்றது. புலிகளின் வேவுப் படைப் பிரிவு இந்த நகர்வு குறித்து முன்கூட்டியே புலிகளின் தலைமைப்பீடத்துக்கு அறிவித்து, அவர்களை உஷார் படுத்தியிருக்கக் கூடும்.




## ஒலுமடுத் தாக்குதல் தரும் பாடம்

எது, எப்படியோ படை நகர்வு பற்றிய தகவல்கள் ஏற்கனவே தமக்கு கிடைத்திருந்ததால் — தங்கள் தரப்பில் அதிக சேதம் ஏற்படாத வகையில்— நகர்வை முறியடிப்பதற்கான பதில் தாக்குதல் திட்டத்தை புலிகள் செயற்படுத்தியிருக்கின்றார்கள் எனக் கருதப்படுகின்றது.

படை முன்னேற முயன்றால் ஆரம்ப இடத்திலேயே படையினர் மீது மோட்டார், பீரங்கி மாரிபொழிய புலிகள் ஏற்பாடு செய்திருந்ததாகவும்—

அதற்கு ஏற்ப தமது ஆட்லறி, மோட்டார் நிலைகளை இடம் எடுத்து அவர்கள் நிறுத்தியிருந்ததாகவும்— கூட கூறப்படுகின்றது.

என்றாலும், இத்தகைய பதில்தாக்குதல்கள் நடக்கும் போது, புலிகளின் ஏவுதளம் எங்கிருந்து செயற்படுகின்றது என்பதைக் கண்டு பிடித்து அறிவதற்கும்—

அதனையடுத்து அந்த ஏவுதள இடங்களை இலக்கு வைத்துதாக்குதல் நடத்தக் கூடியதாக தமது ஆட்லறி, பீரங்கிகளைவழி நடத்தவும்— உதவக்கூடிய 'ராடர்' கருவிகளை படையினர் அண்மையில்தான் அமெரிக்காவிலிருந்து தருவித்து வன்னிக் களத்துக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

படைக்கு அத்தகைய உயர் தொழில்நுட்ப உதவிகள், வசதிகள் இருந்தும்கூட புலிகளின் பீரங்கி, ஆட்லறித் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

கடந்த இருபதாம் திகதி நடந்த சண்டையில் உயிரிழப்புக் காரணமாகவோ அல்லது காயம் காரணமாகவோ அல்லது காணாமல் போனதாலோ யுத்த களத்திலிருந்து முந்நூற்றைம்பது முதல் நானூறு படையினர் வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள். வன்னிப் படை நடவடிக்கைகளுக்கு பெரும் ஆள்பற்றாக்குறையை எதிர்நோக்கும் அரசுப் படைகளுக்கு இது பெரும் பின்னடைவாகவே இருக்கும்.

முன்னேற முயன்ற படைகளுடன் நேரடியாகச் சமர் புரியாமல் பீரங்கி மற்றும் மோட்டார் மூலம் தாக்குதல் நடத்தியதாலேயே புலிகள் தரப்பில் சேதம் அதிகம் இருக்கவில்லை எனத் தெரிய வருகின்றது.

முன்னேற முயன்ற படைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக பீரங்கி, மோட்டார் ஷெல் போன்றவற்றை புலிகள் மழை போல் பொழிந்து ஒரு திரையை ஏற்படுத்தியதாகவும் —

அத் திரையை ஊடறுக்க முடியாமல் போனதால் படைகள் தமது நகர்வு முயற்சியைக் கைவிட்டதாகவும் —

அதே சமயம் இந்த மோட்டார், பீரங்கி ஷெல் மழைகளால் படைத்தரப்புக்கு பேரிழப்பு ஏற்பட்டதாகவும் —

யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினரின் சில யுத்த டாங்கிகள் புலிகளின் பீரங்கி, மோட்டார் ஷெல்களுக்கு ஈடுகொடுத்து அதனை முறியடித்து வெகு வேகமாக முன்னேறின.

ஆனால், யுத்த டாங்கிகளை வழிநடத்திய அதிகாரிகளுக்கோ, படையினருக்கோ —

படையினரின் முன்னேற்ற நகர்வை எதிர்பார்த்து, அந்த நகர்வுப் பிரதேசம் வரை நிலத்தடியில் புலிகள் காப்பரண்களை அமைத்திருந்தது தெரியவில்லை.

முன்னோக்கி வந்த யுத்த டாங்கிகளை நோக்கி இக் காப்பரண்கள் வழியாக நகர்ந்து முன்னோக்கிச் சென்ற புலிகள், நெருங்கி ஆர். பி. ஜி. கொண்டு தாக்கினர்.

இவ்வாறு நெருங்கி புலிகள் நடத்திய தாக்குதலினாலேயே படையினரின் இரு யுத்த டாங்கிகள் நாசமாகின.

யுத்த டாங்கிகளை வழிநடத்தியவர்களில் ஒருவரான கப்டன் சிதுமின தர்மரத்தின இத்தாக்குதலில் கொல்லப்பட்டார். மற்றொரு மூத்த அதிகாரியான மேஜர் சந்திக குணரத்தின படுகாயம் அடைந்தார்.

காயமுற்ற மேஜர் குணரத்தின பின்னர் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் —

புலிகளின் தொலைத் தொடர்புகளை ஒட்டுக் கேட்டதில் இதனை அறிந்து கொள்ள முடிந்தது எனவும் —

கொழும்பில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார்.

இச் சண்டையில் உயிரிழந்த படையினரின் சடலங்களும் புலிகளின் கைகளில் சிக்குண்டதாகவும் தகவல்.

சுமார் 5 அல்லது 6 மணி நேரம் நீடித்த இந்த இராணுவ நடவடிக்கையின் போது படையினர் சற்று முன்னேறி கனகராயன் ஆற்றைக் கடந்து ஒலுமடுச் சந்தியைக் கைப்பற்றியதாக ஆரம்பத்தில் செய்திகள் வந்த போதும் —

அது தவறு என்பது பின்னர் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

முன்னேற முயன்ற முனைகளில் தமக்கு ஏற்பட்ட இழப்புக் காரணமாக 750 மீற்றர் முதல் ஒரு கிலோ மீற்றர் வரை படைகள் பின் நகர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நகர்வு முயற்சியில் அரசுப் படைகளின் நிலைமை ''பிச்சை வேண்டாம்; நாயைப்பிடி!'' என்றவாறு அமைந்து விட்டது என்றார் ஓர் இராணுவ விமர்சகர்.

''ஒரு முழு அளவிலான — பெருத்த எடுப்பிலான — ஏற்பாடுகளுடன் அரசுப் படையணிகள் ஆரம்பித்த இந்த நகர்வைத் தடுத்து நிறுத்தியதன் மூலம் மரபுப் போர் முனையில் தாங்கள் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்திருக்கிறார்கள் என்பதனைப் புலிகள் நிரூபித்துள்ளார்கள்'' — என்றார் அவர்.


இந்த நகர்வு முயற்சியும் அதைத் தடுத்த புலிகளின் பதில் நடவடிக்கையும் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் இலக்கை சுலபமாக அடைந்து விடமுடியாது என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்

இந்த நடவடிக்கையின் போது புலிகளின் தாக்குதலில் சிக்கி எம். ஐ. 24 ரகக் ஹெலிக்கொப்டர் ஒன்றும் சேதமடைந்தது. அதன் உதவி விமானி இடக்கையில் காயம் அடைந்தார்.

இந்தக் ஹெலியை பாதுகாப்பாக வவுனியாவில் தரையிறக்கி விட்டதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்ட போதிலும் —

அதைத் திருத்துவதற்கு காலம் எடுக்கும் என்று கூறப்பட்டது.

★ ★ ★



பாவனைக்கு உரிய நிலையில் இல்லாத காரணத்தால் கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தில் தரித்து நிற்கும் இரண்டு எம்.ஐ 24 ரக ஹெலிகள். இந்த வகையைச் சேர்ந்த ஹெலி ஒன்றே கடந்த திங்களன்று புலிகளின் தாக்குதலில் சேதம் அடைந்தது.

### பேச்சுக்கு வாய்ப்பு?

பாசுபதன்

ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர் இலங்கை விடயத்தில் ஏனோ தானோ என்ற போக்கைக் கடைப்பிடித்து வந்த இந்திய அரசின் நிலைப்பாட்டில் புதிய வாஜ்பாய் அரசு பதவியேற்றதும் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நரசிம்மராவ், தேவகௌடா, குஜ்ரால் ஆகியோரின் அரசுகள் போலல்லாது இலங்கைப்பிரச்சினையில் தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை பூர்த்தி செய்யும் ஒரு தீர்வை புதிய வாஜ்பாய் அரசு வற்புறுத்தி நிற்கும் என்பதை பாக்குநீரிணைக்கு அப்பால் இருந்து கிடைக்கும் சமிக்ஞைகள் ருசுப்படுத்துகின்றன.

பிரதமர் வாஜ்பாய் பதவியேற்ற கையோடு விழுந்தடித்துக் கொண்டு சென்று, அவரைச் சந்தித்தவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் சதிர்காமர். அவரைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்று திரும்பியுள்ளார்.

அவர்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட சமிக்ஞைகளும், முன்னாள் இலங்கையின் இந்தியத் தூதரும், இந்திய வெளிவிவகார கொள்கை வகுப்பு ஆலோசகருமான நாகேந்திரநாத்ஜா கொழும்பில் வெளியிட்ட தகவல்களும் இலங்கை விவகாரத்தில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருப்பதைக் காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றனர்

வன்னிக்கள யுத்த பெறுபேறுகள் தந்த பின்னடைவுகள், இலங்கை தொடர்பான இந்திய போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தொடரும் யுத்தத்தினால் கடும் பொருளாதார நெருக்கடிகள் போன்றவை புலிகளுடனான யுத்தத்தை நிறுத்தி சமரசப்போக்கைக் கடைப்பிடித்தால் என்ன என்ற எண்ணத்தை அரச உயர் மட்டத்துக்கு ஏற்படுத்தியுள்ளதாக சம்பந்தப்பட்ட சில வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க அரசின் நிலைப்பாடு, இலங்கை அரசாங்கத்தின் யுத்தப் போக்கை பின்னடைய வைப்பதாக இல்லாத போதிலும்— மற்றைய சூழ்நிலை, சந்தர்ப்பங்கள் காரணமாக பேச்சுவார்த்தைப் பக்கத்தை நாடுவதற்கு அரசைத் தூண்டுவதாகத் தகவல்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் உருவாகி வருவதை கொழும்பில் சில வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

இம்முறை இப்பேச்சுக்களில் அரசுடன் ஐ.தே.க. வும் பங்குபற்றக்கூடும் என ஊகிக்கப்படுகிறது.

இலங்கைக்கான தனது விஜயத்தை ஒத்திவைத்த பிரிட்டிஷ் உயர்குழு ஒன்று விரைவில் அந்த விஜயத்தை மேற் கொள்ளவிருப்பதாகத் தெரியவந்தது.

அக் குழுவின் வருகையின் போதுபேச்சுக்கு கால்கோள் இடப்படக்கூடும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடுத்த $2\frac{1}{2}$ வருடங்களுக்கு திருக்கணிதப்படி உங்களுக்கு எப்படி? அறியப் படியுங்கள். 17 - 4 - 98 இல் நிகழ்ந்த சனிமாற்றப் பலன்கள் விற்பனையாகிறது. [55134]

வீட்டுத் தளபாடங்கள், மின் விசிறிகள், எவசில்வர் பொருள்கள் இன்னும் உங்கள் தேவைக்குரிய பல பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு 71/9, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை. [55099]

''A'' பிரிவில் சவாரி செய்யும் காளைகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம. றஞ்சன், கனகரட்ணம் வீதி, வட்டுக்கோட்டை. [55197]

அன்ரனா அலுமினியப் பைப் (நிப்போன்), வயர், U கிளிப், கப் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு S. P. இராசலிங்கம் 681, பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம். [55165[

கல்வளை சண்டிலிப்பாயில் நல்ல விளைச்சல் தரும் வயற்காணி $15\frac{1}{2}$ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு. தர்மராசா, (ஆச்சா), உடுவில் வீதி. மானிப்பாய். [55203]

40 அடி நீளமான சொக் கட்டான் பந்தலும் 200 கதிரைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. தேவராசா, நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி. [சி/3530]

### O/L கணிதம்

ஒரு வருடத்தில் 5 Batch மாணவர்களிற்கு ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் கற்பிக்கும் அனுபவமுடைய ஆசிரியரினால் சகல அலகுகளையும் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [55117]

### தவறிவிட்டது

சிவஞானம் சம்யுத்தா (ஊறணி, வல்வெட்டித்துறை) என்பவரது விசேட அடையாள அட்டை பருத்தித்துறை பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சிவகுமரன் புடைவை மாளிகை, பிரதான வீதி, பருத்தித்துறை. [சி/3534[

### திருத்த வேண்டுமா?

ரி.வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B. Sc. Ceylon Dip in Electronic Engineering London; 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3294]

### வாடகைக்கு

அரசாங்க திணைக்களத்துக்கு அல்லது அரசசார்பற்ற நிறுவனத்திற்கு (N.GO) பாரிய தனியார் கல்விக்கூடத்திற்கு அல்லது தனியார் வைத்தியசாலைக்கு (Western) உகந்த மேல்மாடியும், கீழ்மாடியும் உள்ள கட்டடம் இரு வாகனங்கள் நிறுத்தும் வசதியுடனும், குளியலறைகளுடனும் குத்தகைக்கு அல்லதுவாடகைக்கு, கொடுக்கப்படும். 201/1, 3 ஆம் குறுக்குத்தெரு, அரசடி ஒழுங்கை.யாழ்ப்பாணம். [55193]

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி தாழையடி ஒழுங்கையில் $2\frac{1}{2}$ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நாகேஸ்வரநாதன் (நாதன்), தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி. [55142]

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் சிறு குறுாப்பாக ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, இல. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (யாழ். வண்ணை சிவன் கோயில், அருகில்). [55156]

### தேவை

ஆழ்குளிருட்டிகள், குளிர்சாதனப்பெட்டிகள் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். [சி/3516]

### வீடு உடன் விற்பனைக்கு

எஸ்.ரவீந்திரன் அவர்களுடைய $1\frac{1}{2}$ பரப்புடன் கூடிய வீடு இல. 11, சோமசுந்தரம் அவன்யூ சுண்டுக்குளியில் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு. லோகேந்திரம், 29. சோமசுந்தரம், அவன்யூ சுண்டுக்குளி. [55205]

### தையல் வகுப்பு

கடந்த ஆண்டுகள் செட்டித் தெருவில் நடைபெற்ற தையல் வகுப்பு (Cutting Class) தற்போது இல. 29/1. செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம், என்னும் முகவரியில் நடைபெறுகின்றது. சி. கமலா. [55173]

### மீட்டல் வகுப்பு

மேற்படி Dec. 98 பரீட்சைக்கான கணிதம், விஞ்ஞானம், English வகுப்புகள் சிறு குழுக்களாக அல்லது தனிப்பட வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: ஞானம் விற்பனை நிலையம், K.K.S. வீதி, கொக்குவில்ச் சந்தி, கொக்குவில். [55136]

### ENGLISH

6 ஆம், 9 ஆம் ஆண்டுகளுக்கு வாரம் 3 வகுப்புக்கள். மாதாந்தப் பரீட்சைகளுடன் விசேட வகுப்புக்களும், ஏனைய ஆண்டுகளுக்குமுரிய ஆங்கில விசேட வகுப்புக்களும், வழமை போல் நடைபெறுகின்றன, விவரங்கள் நேரில். ஆசிரியர்: T, Sagathevan B.A. London, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [55096]

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்குகந்த சேவல் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்). [55200]

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும், சாவகச்சேரி மயூரன் தேநீரக உரிமையாளரும், மன்றத்தின் முன்னாள் கணக்காய்வாளர் அமரர் ஆ. தெய்வேந்திரம் அவர்களின் மனைவியுமாகிய

### திருமதி தெய்வேந்திரன் சகுந்தலாதேவி

அவர்கள் கடந்த புதனன்று (22 - 4 - 98) இரவு 7-45 மணிக்கு கடையை பூட்டிவிட்டு வீடு திரும்பிய வேளையில் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி அகால மரணமெய்தியதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

(சி/3538)

## 31 ஆம் நாள் நினைவலை



மலர்வு: 05' — 01 — 1923

உதிர்வு: 26 — 03 — 1998

அமரர்

### முருகேசு சுப்பிரமணியம்

(தொல்புரம் கிழக்கு)

75 ஆண்டுகள் வையம்தனில் வாழ்ந்த அன்புத்தந்தையே! பப்பாவே ஆறாது உங்கள் கவலை பண் அழுதாலும் தீராது. பாசத்தின் பிறப்பிடமாய். பின் இருப்பிடமாய் அள்ளி அணைத்திட்ட உங்கள் அன்பு உருவத்தினை என்றென்றும் நாங்கள் மறவோம் பப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மடத்தடி விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள், பேரன்.

தகவல்:
திரு. சு. சந்திரராஜா (கண்ணன்) மகன்
தொல்புரம். (54733)

# வாடகைக் கார்களை நிறுத்த இடம் ஒதுக்குக

## ஆணையாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். நகரில் உள்ள வாடகைக் கார் உரிமையாளர்கள் தமது கார்களை நிறுத்துவதற்கு இடம் ஒன்றினை நகரப் பகுதியில் ஒதுக்கித் தருமாறு மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கத்திடம் மகஜர் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளனர்.

தற்பொழுது வாடகைக் கார் உரிமையாளர்கள் தமது கார்களை நிறுத்துவதற்கு இடம் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் பிரதான வீதிகளிலேயே தமது வாகனங்களை நிறுத்தி வருகின்றனர். இதனால் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டே தமக்கு ஒரு தனியான தரிப்பிடத்தை ஒதுக்கித் தருமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (ஐ-139-9)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 24

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதிபர் மா. குலசேகரம் தலைமையில் நடைபெறும். (இ-4)


# பவர்ஸ்

# Baurs

1897 - 1997

## விவசாய மேம்பாட்டுக்கு 100 ஆண்டுகால அர்ப்பணிப்பு

**1) பவர்ஸ் பசளை:**

உங்கள் பயிர்களின் தேவைக்கேற்பவும், அவற்றின் செழிப்பான வளர்ச்சிக்காகவும் விசேடமாகக் கலக்கப்பட்ட உரவகைகள். இது உங்கள் அறுவடையை நிச்சயம் அதிகப்படுத்தும்.

**2) பவர்ஸ் விவசாய இரசாயனங்கள்:**

விவசாய இரசாயனத்தின் தரம் விவசாயிகளின் மனதில் என்றும் நிலைத்திருக்கும். அன்தியோ 33%, தயோவிட் 80% கலப்பு மிளகாய்ச் செய்கையில் இலைச்சுருள் நோயைக் கட்டுப்படுத்த மிகச் சிறந்தது. பாவனைக்கு முன் லேபலை வாசிக்கவும்.

**எக்கலக்ஸ் EC25**

மிக விரைவாக பூச்சிகளின் உடலினுள் உட்புகுந்து தாக்கும் பூச்சிநாசனி. வெண்காய மயிர்கொட்டிப்புழுக்கள் மற்றும் இலையுண்ணும் மயிர்கொட்டிகளை கட்டுப்படுத்த வல்லது.

**3) பவர்ஸ் தெளிகருவிகள், மண்வெட்டிகள்**

தரமான, யாழ்.குடாவிவசாயிகளின் தர சிறப்பிற்குப் பாத்திரமான பவர்ஸ்ப்ளோக்ஸ் (3 கலன்) பவர்ஸ் சுபடொப் (4 கலன்) பவர்ஸ் சுபமினி (1 கலன்) மற்றும் ஜேர்மனிய இயந்திர தெளி கருவிகள்.

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உருக்கினால் உற்பத்தி செய்து இறக்குமதி செய்யும் பவர்ஸ் மண்வெட்டிகள்.

எமது தெளிகருவிகள் அனைத்தும் துருப்பிடிக்காத தாங்கிகளைக் கொண்டவை.

### ஏ. பவர் அன் கம்பனி லிமிட்டட்

விற்பனைக் காரியாலயம்
260, பியகம வீதி, களனிய.
தொலைபேசி:-
01 - 914067, 914134. 914135

### ஏ. பவர் அன் கம்பனி

கிளை காரியாலயம்
51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3509)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரம் பல துறைகளில் வளர்ச்சி பெற வேண்டும்

## நகரப்படைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். நகரப் பகுதி மேலும் பல துறைகளில் முன்னேற்றம் அடைய வேண்டியுள்ளது.

யாழ். நகர படைத்தளபதி பிரிகேடியர் சுஸந்த மென்டிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிங்கள — தமிழ் புத்தாண்டை ஒட்டி விடுத்த விசேட செய்தி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். நகரத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் கடந்த 8 மாத காலப் பகுதியில் தனதுபொறுப்பின் கீழ் உள்ள பிரதேச மக்களது முன்னேற்றத்துக்காக தன்னால் எடுக்கப்பட்ட முயற்சிகளை அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் விளக்கியுள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். நகரப் படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற கடந்த எட்டு மாதங்களில் எனது பொறுப்பிலுள்ள பகுதி மக்களுக்கு முன்னேற்றகரமான வாழ்க்கையை உருவாக்குவதற்கு என்னாலான முயற்சிகளை மேற்கொண்டேன்.

★ அரசினதும், பாதுகாப்புப்படைத் தளபதியினதும் உதவியுடன் மினி நூலகம் இயங்க வசதி செய்யப்பட்டது.

★ தொலைத் தொடர்பு அமைச்சு மற்றும் அதிகாரிகளின உதவியுடன் தொலைபேசிசேவை மேலும் சீர் செய்யப்பட்டது.

★ துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்புச் செய்யப்பட்டது.

★ சுகாதார அமைச்சின் உதவியுடன் யாழ். போதனா ஆஸ்பத்திரி புதுக்கி அமைக்கப்பட்டது.

★ வீதி அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் திணைக்களத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளில் வீதிகள் பல மீள அமைக்கப்பட்டன.

★ மக்கள் வங்கி, யாழ். அரச அதிபரின் உதவியுடன் யாழ். பஸ் நிலையத்தின் வசதிகள் அதிகரிக்கப்பட்டன.

★ கல்வியமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சின் உதவியுடன் 6 லட்சம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்தியங்கள் வலயம் 1 இல் 4 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

★ நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 97 ஆம் ஆண்டு உற்சவம், நத்தார் பண்டிகை ஆகியன விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டன.

★ விளையாட்டுத் துறையில் வலயம்— 2 பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டம். யாழ். கிரிக்கெட் கழகம் மீள அமைத்து தென்பகுதி சென்று போட்டிகளில் பங்குபற்றியமை. யாழ். வலைபந்தாட்ட சங்கம் மீள அமைக்கப்பட்டு தென்பகுதியில் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டமை.

★ யாழ். பல்கலை மாணவரின் தென்பகுதி விஜயம் ஏற்பாடு.

★ சங்கிலியன் சிலை புனரமைப்பு.

★ சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்துக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்பு.

★ நல்லெண்ணத்திட்டத்தின் கீழ் கைத்தொழில் பொருள்காட்சி ஏற்பாடு.

★ வலயம் — 1 இல் 50 பாடசாலைகள் பங்குபற்றிய கலாசார நிகழ்ச்சி. ஓவியக் கண்காட்சி. துரையப்பா அரங்கில் இசை நிகழ்ச்சி — ஆகியன இக்காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

எனது குறுகிய பதவிக் காலத்தில் என்னால் செய்ய முடிந்த பணிகள் இவையாகும். எங்களுடைய பிரதேசம் இன்னும் பல துறைகளில் முன்னேற்றம் காண வேண்டி உள்ளது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ—8)

# காரைநகர் திருவிழாவுக்கு செல்வதற்கு பெயர் பதிவு

யாழ்ப்பாணம், ஏப். 25

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் மே 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10–30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆலய உற்சவங்களில் கலந்து கொள்ள விரும்பும் பக்தர்களை அங்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகி உள்ளது.

உற்சவங்களில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே தமது பெயர் விவரங்களை 'இலக்கம் 50, பெரியகடை, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

தேர்த்திருவிழா மே 10 ஆம் திகதி முற்பகல் 10–30 மணிக்கு இடம்பெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழா காலை 6 மணி முதல் நடைபெறும். (ஐ)

## மலர் வெளியீடு

உடுப்பிட்டி வீதி, செருடாவில் தெற்கு தொண்டமானாறு கலையரசி சன சமூக நிலையத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும், நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சமூக நிலைய முன்றலில் நடைபெறும். (ஐ-4-173)

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

### ஊனமுற்றோருக்கான தையல் பயிற்சி

ஊனமுற்றவர்களுக்கான தையல் பயிற்சி வகுப்புகள் மேற்படி சங்கக் கட்டடத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி 3 மாதங்களுக்கு நடைபெறும். பயிற்சியின் இறுதியில் பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தையல் இயந்திரம் ஒன்று மாதக் கட்டண அடிப்படையில் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி விண்ணப்பப் படிவத்தைப் பெறவும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 08 – 05 – 1998.

செயலாளர்
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
15, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(55802)

## ST. John's College Jaffna Old Boys' Association

175th Anniversary Celebration LUNCH
on Thursday 7th May 1998
Tickets - Single RS. 250/-
Couple RS. 400/-

Those who Wish to buy tickets please Contact The Hony Treasurer Mr. T. NANTHAKUMARAN AT COLLEGE, Before 5th May 1998

Hony Secrtary
O. B. A/ S. J. C

## பயிற்சி ஒத்திவைப்பு

கொழும்புத்துறை. ஏப். 25

சனசமூக நிலைய சம்மேளனம் சமாசங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு இன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருந்த தலைமைத்துவப் பயிற்சி மற்றும் சம்மேளன ஆட்சிக் குழுக் கூட்டம் என்பன தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-30-17)

## கண்ணீர் அஞ்சலி

தொழில்மேம்பட எமக்கு பல்வேறு வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய சகோதரி

**திருமதி தெய்வேந்திரன் சகுந்தலாதேவி**

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நவம் தேநீர்ச்சாலை,
சந்தை உட்புறம், சாவகச்சேரி.

[சி/8536]


# புரோட்டினெக்ஸ்

புத்துணர்ச்சியை அளிக்கும்

★ தாவரப்புரதம்
★ விட்டமின்கள்
★ கனிப்பொருள்கள்

அடங்கிய போஷாக்குப் பானம்

புரோட்டினெக்ஸ் அன்றாடம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருவது!

(சி/3358)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 02 — 12 — 1948



மறைவு: 16 — 04 — 1996

திரு. பொன்னையா பாலகிருஸ்னேஸ்வரன்
(லங்கா சிமெந்து லிமிட்டெட்)

திதி: 25 — 04 — 1998

''சென்ற இடம் யாவும்
நிழல் போலத் தோன்றுதே
அன்று சொன்ன வார்த்தை
அலை போல மோதுதே''

தங்கள் கனவுகள் எங்கள் நினைவுகளில்

அன்பின்
மனைவி, மகள், பெற்றோர்,
சகோதரர்கள், மைத்துனர்,
மைத்துனி, பெறாமக்கள்,
மருமக்கள்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு.

(50040)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ மாணவரின் கற்கைநெறி
# காலவிரயத்தைக் குறைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப், 25

யாழ். மருத்துவ பீடத்தில் 17 ஆவது அணியில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் கற்கை நெறிக்காலத்தைக் குறைப்பதற்கு யாழ். பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மருத்துவபீட மாணவர்கள் தமது சற்கை நெறியைக் குறிப்பிட்ட காலத்தில் முடித்துக் கொள்ள முடியாமல் உள்ளது. இதனால் அவர்கள் நீண்டகாலம் பல்கலைக் கழகத்திலேயே தமது காலத்தைக் கழிக்க வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் மாணவர்களின் கற்கை நெறி முடிக்கப்படாமல் வருடாந்தம் நீடித்து வருவதால் புதிதாக வரும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் இட நெருக்கடிகளையும்வேறுபல நெருக்கடிகளையும் எதிர்நோக்குகின்றனர்.

அது மட்டுமன்றி மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வைத்தியர்களும் காலதாமதமாகவே வெளியேறுகின்றனர். இவற்றைக் கருத்திற் கொண்டே கற்கை நெறிக் காலத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின் படி மருத்துவ பீடத்தில் தற்சமயம் கல்வி கற்கும் 16 ஆவது அணியையும் 17 ஆவது அணியையும் இணைத்து ஒரே அணியாக கற்கை நெறி போதிக்கப்படுகிறது. இதன் மூலம் 16 ஆவது அணி தனது கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் போது 17 ஆவது அணியும் தனது கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும். இதன் மூலம் 17 ஆவது அணி தனது கற்கைக் காலத்தை ஒரு வருடத்தால் குறைத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என அவர் தெரிவித்தார். (ஐ-9)

## வேலணை இளைஞர் விமான நிலையத்தில் கைதானார்

கொழும்பு, ஏப். 25

ஹொங்கொங்கில் வீஸா இல்லாமல் தங்கியிருந்ததாக கூறப்படும் யாழ், வேலணையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்ட போது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சிறி ராமலிங்கம் சத்தியசீலன் என்பவரே கைதானவர் ஆவார்,

இவர் தற்பொழுது நீர் கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-5)

## கலந்துரையாடல்

குருநகர். ஏப், 25

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்த உள்ள இசை, நாடக, நாட்டுக் கூத்துப் போட்டியில் பங்கு பற்ற உள்ள 47 மன்றங்கள். பாடசாலைகளைச் சேர்ந்தோரையும் மற்றும் தனிநபர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ், மத்திய கல்லூரியில் நடைபெற உள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் செ. மெட்றாஸ் மயில் கேட்டுள்ளார். (ஐ-51)

# தந்தை செல்வாவின் சிரார்த்த தினம் நாளை

யாழ்ப்பாணம், ஏப். 25

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் உயிர் நீத்த நாள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகும். இதனை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்து முகமாக நகரில் உள்ள செல்வா நினைவிடத்தில் நாளை காலை9மணிக்கு ஒன்றுகூடுமாறு செல்வநாயகம் நூற்றாண்டு நினைவுத் தேசிய அவையின் இணைச் செயலாளர் மாவை சோ. சேனாதிராஜா பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தந்தை செல்வா இவ்வுலகை விட்டுப் பிரிந்த நாள் நாளை ஆகும்.

தந்தை செல்வா தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து இருபத்தைந்து ஆண்டுகள் ஓயாது, தலைசாயாது உழைத்தார்.

1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமைக்காக அரசினால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தந்தை செல்வா 'பாகிஸ்ரன்' எனும் நரம்பைத் தாக்கும் நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார். அன்றிலிருந்து அந்த நோயிலிருந்து இறுதி வரை அவர் விடுபடவில்லை. ஆனாலும் தந்தை செல்வா அந்தக் கொடிய நோயையும் தாங்கிக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு உழைத்து ஓடாகிப் போய் ஒரு நாள் தடுக்கி விழுந்து நினைவிழந்து போனார். அவர் பிரிந்து இருபதாண்டுகள் மறைந்து விட்ட போதும் தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல. அடக்கி ஒடுக்கப்படுகின்ற விடுதலைக்குப் போராடுகின்ற மக்கள் அனைவரிடத்திலும் என்றென்றும் நீங்காத நினைவோடு, உயிர் ஓட்டமுள்ள சக்தியாகத் திகழ்கின்றார்.

தந்தை செல்வாவின் முழு அளவிலான உருவச்சிலையை வடிவமைக்கும் சிற்பி சில நாள் உடல் நலம் குன்றியிருந்ததால் முழு வேலைகளும் முடியவில்லை. இப்பொழுது சிலை உருவமைப்பு நிறைவேறுகின்றது. சிலை நிறுவுவதற்கான பீட வேலைகளும் முடிவுற்றுள்ளன. சிலையின் மெருகூட்டும் வேலைகள் முடிவுற்றதும் 1998 ஆனித் திங்களில் தந்தை செல்வா சிலைத் திறப்பு விழா சிறப்புற நிகழும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காலவரையறை....

(மூன்றாம் பக்கத் தொடர்)

பேச்சுக்கான சூழ்நிலையை இலங்கை அரசு ஏற்படுத்த முயன்றாலும் கூட—

பேச்சுவார்த்தையில் தன்னுடைய பேரம் பேசும் ஆற்றலை உயர்வாகப் பேணக் கூடியதான யுத்த வெற்றிகளை ஈட்டும்வரை, புலிகள் பேச்சுக்கு இணங்குவார்களா என்பதே கேள்விக்குறி.

★ ★ ★

## தளுவத்தவுக்கு பதவி நீடிப்பு

இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் றோஹான் தளுவத்தவின் பதவிக்காலம் நாளை மறுதினம் முடிவடைகிறது.

அவருக்கு மேலும் ஓராண்டுக்கு பதவி நீடிப்பு வழங்கப்படுமா? இதுதான் பாதுகாப்பு வட்டாரங்களில் தற்போது எழுப்பப்படும் கேள்வி.

நேற்றுப் பிற்பகல் வரை இதுகுறித்துஉத்தியோகபூர்வ தகவல் எதனையும் இராணுவ தலைமைப்பீடம் வெளியிடவில்லை.

இராணுவத்தளபதி தளுவத்தவுக்கு கடந்த வருடம் ஜூன்மாதம் முதலாம் திகதி முதல் ஒருவருட கால பதவி நீடிப்பை அரசு வழங்கியிருந்தது.

அது நாளை மறுதினம் முடிவடைகிறது.

லெப்டினன்ட்ஜெனரல்தளுவத்தவுக்கு மேலும் ஒருவருட கால பதவி நீடிப்பு வழங்கப்பட்டால், தற்போது இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாகவும், கூட்டு நடவடிக்கைகளுக்கான தளபதியாகவும் பணிபுரியும் மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய இராணுவத் தளபதியாகப் பதவி உயர்வு பெறாமலேயே எதிர்வரும் டிசம்பரில் ஒய்வு பெற்றுச் செல்ல வேண்டி நேரிடும்.

அதற்கு மாறாக, தளுவத்த இப்போது ஓய்வு பெற்று, அவரது இடத்துக்கு புதிய இராணுவத் தளபதியாக லெப்டினன்ட்ஜெனரல் என்ற பதவிஉயர்வுடன் ஸ்ரீலால் வீரசூரிய இப்போது நியமிக்கப்பட்டால், இராணுவத்தளபதி [illegible] சேவையில்— அவர் மேலும் சில ஆண்டுகள் நீடிக்க முடியும். ★

# மன்னார் அகதிகளுக்கே கப்பலில் முன்னுரிமை

## ஆணையாளர் உத்தரவு

திருகோணமலை, ஏப். 25

திருகோணமலைக்கும்-காங்கேசன்துறைக்கும் இடையில் இரு தடவைகள் சேவையில் ஈடுபடவிருக்கும் ''லங்கா முடித'' கப்பலில் மன்னாரில் இருந்து வரும் அகதிகளை மட்டுமே அனுப்புமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வி.வேலும் மயிலுக்கு கண்டிப்பான உத்தரவை விடுத்துள்ளார்.

மன்னாரில் இருத்து வரும 2 ஆயிரம் அகதிகளை இக் கப்பல் சேவை மூலம் யாழ்ப்பாணம் அனுப்புவதெனபாதுகாப்பு அமைச்சில் நடந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.

இதன்படி தற்சமயம் திருகோணமலையில் தங்கியுள்ள 301 மன்னார் அகதிகளும் மேலும்அங்கிருந்து அழைத்து வரப்படவிருக்கும் ஆயிரத்து 700 அகதிகளுமே இக் கப்பலில் செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. இக்கப்பலில் செல்ல பதிவு செல்துள்ள தனியார் பயணிகள் 157 பேரும் திருமலையில் தங்கியுள்ள 529 வவுனியா அகதிகளும் இந்த முடிவால் ஏமாற்றம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அதிரடி அரங்கு

யாழ்ப்பாணத்தில் சமுதாயச் சீரழிவுகள் குறித்து தொடர்ந்து இப்பகுதியில் குறிப்பிட்டு வருகின்றோம். அந்த வரிசையில் இது மற்றொன்று.

கடந்த கால இடப்பெயர்வுகள், அரசியல் சூழ்நிலைகள் காரணமாக பலர் இடம்பெயர்ந்து விட்டனர். அவர்களின் காணி, வீடு, நிலங்களை அவர்களின் அனுமதியின்றியே அனுபவித்து வந்தவர்கள் இப்போது அவற்றை உரியவர்களிடம் கொடுக்க மறுக்கின்றார்கள்; சொந்தக்காரரோ அல்லது அவரின தத்துவக்காரரோ வந்தால் சண்டித்தனத்துக்குப் போய் மிரட்டுகின்றார்கள்.

இது மட்டுமல்ல. காணி, வளவுகளில் ஆள்கள் இல்லாதவிடத்து அடுத்த காணிக்காரரின் எல்லைகள், வேலிகள்— உரிமையாளர் இங்கு இல்லாத காணிக்குள் நடந்து முன்னேறுவதாகவும் தகவல்.

இத்தகைய அடாத்துச் செயல்களைத் தடுப்பதற்காக பொலீஸாரிடமும், இராணுவத்திடமும் போக வேண்டியிருக்கின்றதே என விசனப்படுகின்றார் அண்மையில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த பின்னர் தமது வீட்டையும் காணியையும் மீட்கப் பாடுபடும் ஓர் அப்பாவி வீட்டுக்காரர்.

காணி, வீடுகளை மீட்பதற்காக மற்றொரு தொகுதியினர் நீதிமன்றங்களுக்கும் படையெடுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

★ ★ ★

மனைவியின் 'தொடாதே' சபதம் காரணமாக மனைவியைத் தொடாமல் வாழ்ந்த திருநீலகண்டர் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம்.

அது போன்ற வித்தியாசமான ஒரு மனைவி பற்றிய தகவல். இவர் யாழ்ப்பாணம் கச்சேரி — நல்லூர் வீதியில் வசிப்பவர். இவரும் சமய ஆராதனைகளில் அதிக ஈடுபாடு காட்டுபவர்.

ஒரு நாள் உணவு பரிமாறும்போது கணவனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக சபதம் ஒன்றை எடுத்தார். என்ன சபதம் தெரியுமா? உணவு உண்பதில்லை என்பதுதான் அது. அதன்படி கடந்த பதினொரு வருடங்களாக 'லக்ஸ்பிறே'மாவை மட்டும் கரைத்துக்குடித்து வாழ்கின்றார் இந்த அம்மா. பசுப் பால்கூட அருந்துவதில்லையாம்!

★ ★ ★

மூத்த அதிகாரிகள் பலர் யதார்த்தத்தையும், தள நிலைமைகளையும் புரியாமல் பணியாற்றுவதாக பொதுவான குற்றச்சாட்டு நிலவுவது தெரிந்தது தான். அதற்கு ஓர் உதாரணம் இது.

மாகாணசபையின் கீழ் யாழ்ப்பாணத்தில் பல்வேறு திணைக்களங்களிலும் பணியாற்றும் அதிகாரிகளுக்கு இந்த மாதச்சம்பளப் பணம் வந்து சேரவில்லை. என்ன விடயம் என்று மாகாணசபை அதிகாரிகளிடம் கேட்டால் சம்பளக் காசோலையை அனுப்பி விட்டோம் என்று பதில் வருகின்றது, எப்படி அனுப்பினார்கள்? தபாலில்.

தபால் திணைக்கள ஊழியர்கள் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதும், அதனால் தபால் சேவை சீர்குலைந்திருப்பதும் இந்த அதிகாரிகளுக்குத் தெரியாது போலும். அல்லது ஊழியரின் சம்பளத்தை அவர்களுக்கு நேரத்துக்கு சேர்ப்பிக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வு இல்லையோ தெரியவில்லை.

திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தினசரி பல அதிகாரிகள் வந்து போகின்றார்கள். சம்பளக் காசோலையையாவது யாரிடமாவது கொடுத்து சேர்ப்பிக்கச் செய்யலாமே! இன்னும் எத்தனை நாள்களுக்கு சிவப்பு நாடா பாணியைத் தொடரப் போகின்றார்கள்?

★ ★ ★

இது சீதன 'பிஸ்னெஸ்' பற்றிய தகவல். கோப்பாயில் ஓர் இளைஞர் வேலை வெட்டி இல்லாதவர். அவருக்கு கலியாணம் பேசினார்கள், ஓரிடத்தில் சாதகம் பொருந்தி வந்தது. மாப்பிள்ளை வீட்டார் பல லட்சங்கள் சீதனம் கேட்டனர். எப்படியாவது பிள்ளையைக் கரை சேர்க்க வேண்டும் என்பதற்காக வேலைவெட்டி இல்லாத மாப்பிள்ளைக்கு கஷ்டத்துக்கு மத்தியில் ஐந்து லட்சம் ரூபா சீதனம் தருவதற்கு பெண் வீட்டார் இணங்கினர். திருமணத் திகதி குறிக்கப்பட்டது. திருமணம் நடக்கவிருந்த வேளையில் திடீரென வந்து இறங்கியது மாப்பிள்ளைக்கு வேலைவாய்ப்புக் கடிதம். 1996 இல் நடந்த ஆசிரியர் பதவிக்கான தெரிவுப் பரீட்சையில் குறைந்த புள்ளிகளை எடுத்த அந்த மாப்பிள்ளைக்கு, மூன்றாவது 'லிஸ்டில்' நியமனம் பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைக் கடிதமே அது. அவ்வளவுதான்! சீதன 'ரேட்டை' பத்து லட்சமாக உயர்த்தி விட்டனர் மாப்பிள்ளை வீட்டார்கள். பெண் வீட்டார் கதறி அழுதும் சீதனத்தில் விட்டுக் கொடுக்க மாப்பிள்ளை வீட்டார் தயாரில்லை. இப்போது எட்டு லட்சம் ரூபாவுக்கு இணக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல்.

இப்படியும் ஒரு வாழ்வு தேவையா? எல்லாம் சீதனத்தடைச் சட்டம் செயற்படுத்த முடியாமல் போனதால் வந்த வினை.

★ ★ ★

சிவில் நிர்வாகம் வந்ததென்ற பெயர்தான்! குடாநாட்டில் உள்ள பல வீதிகள் மக்களையும், வாகனங்களையும் நோயாளர்களாக்குவனவாகவே இன்னும் விளங்குகின்றன. எமது மூதாதையர் வீதிகள் இல்லாத காலத்தில் மலையையும், மடுவையும் தாண்டிச் சென்றது போலவே இப்போது, நாங்களும் விழுந்து எழுந்து தாண்ட வேண்டியுள்ளது.

இதற்கு அசல் உதாரணம் வேண்டுமானால் பண்டத்தரிப்பு — சித்தன்கேணி — வட்டுக்கோட்டை பிரதான வீதியால் ஒரு முறை பயணம் செய்து பாருங்கள்!

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை நடப்பவை

தந்தை செல்வாவின் 21 ஆவது சிரார்த்த தினத்தை யொட்டி நாளை காலை 11.30 மணியளவில் தந்தை செல்வா நினைவாலயத்தில் தந்தை செல்வா நினைவுக் குழுவின் சார்பில் மலரஞ்சலி இடம்பெறவிருக்கிறது. (உ-3)

★ ★ ★

பேராசிரியர் தில்லைநாதனின் கலை, இலக்கிய, சமூக மற்றும் பன்முகப் பணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா நாளை காலை 9.30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (உ-27)

★ ★ ★

மானிப்பாய் கோயிற்பற்று லயன்ஸ் கழகத்தினர் நவாலி வடக்கு முரசொலி சனசமூக நிலையத்துடன் இணைந்து கண்பரிசோதனை முகாம் ஒன்றை நாளை காலை 10.00 மணிக்கு அந்த நிலையத்தில் நடத்த விருக்கிறது.

பிரபல சண்பரிசோதனை நிறுவனத்தினரான எஸ். எம். பெர்னாண்டோ ஸ்தாபனத்தாரினால் மேற்கொள்ளப்படும் இந்தப் பரிசோதனைக்கு முரசொலி சனசமூக நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

★ ★ ★

அச்சுவேலி, புத்தூர் வடக்கு பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் விவசாயச்சங்கங்கள், சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 3.00 மணிக்கு அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது என்று ஈ.பி.டி.பி. அச்சுவேலிப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ-3)

## சிறுகதை முன்னோடி காலமானார்

ஈழத்தின் முன்னோடி சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான சு. இராசநாயகம் நேற்றுக் கொழும்பில் காலமானார்.

ஈழத்தில் சிறுகதை இலக்கியம் வளர்வதற்கு அடி எடுத்துக் கொடுத்த மிக மூத்த எழுத்தாளர் பரம்பரையைச் சேர்ந்த இவரின் சொந்த இடம் திருநெல்வேலியாகும்.

அண்மையில் வெளியான ''மறுமலர்ச்சிக் கதைகள்'' தொகுதியில் இவரது இரு கதைகளும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் இலக்கிய விமர்சனக் கட்டுரைகளையும் பிற்காலத்தில் எழுதிவந்தார்.

இவரது இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளன. (அ-5)

## மாதாந்த இசைநிகழ்வு நாளையதினம்

யாழ்ப்பாணம், ஏப். 25

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் இடம் பெறும்.

எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார்.

மகாவித்துவான் பட்டம் பெற்ற இணுவில் பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, கோண்டாவில் வி. கே. கானமூர்த்தி குழுவினரின் மங்கள இசை, செல்வி பரமாகணேசனின் கர்நாடக இசை ஆகியவையும் இடம் பெறும். (உ-3)

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு ஆதீனகலா மண்டபத்தில் மாத இசை அரங்கு யாழ். இந்துத் தமிழ் பெண்கள் பாடசாலை அதிபர் திருமதி கமலா குணராசா தலைமையில் நடைபெறும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி நடன ஆசிரியர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் மங்கள விளக்கேற்றி வைப்பார். (30)

## பாதை திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 25

இருபாலை தனிப்பனை வீரபத்திரர் ஆலயத்துக்குச் செல்லும் பாதை நேற்று பாவனைக்குத் திறக்கப்பட்டது.

இந்தப்பாதையில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததால் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

511 ஆவது படையணியினரும், ஈ. பி. டி. பி. அமைப்பினரும் இணைந்து கண்ணிவெடிகளை அகற்றினர். அதையடுத்து நேற்று 511 ஆவது படையணி பிரிகேடியர் ஜி. எம். றொச்வூட்டின் சார்பாக கோப்பாய் முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் சில்வா அந்தப்பாதையைத் திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன், வட்டுக்கோட்டை அமைப்பாளர் ந. லோகன், கோப்பாய் தொகுதி அமைப்பாளர் வி. ரவி, வைத்திய கலாநிதி வை. தியாகராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வட மா. க. தொ. கூ. ச. சமாசத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய இ. ச. உறுப்பினருமாகிய

திரு. ஐ. சவுந்தரராசா
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி ஐயாத்துரை மீனாட்சியம்மா

அவர்கள் 26-3-98இல் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
இயக்குநர்சபை உறுப்பினர்களும் ஊழியர்களும்

வடமாகாணம் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இல. 100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/3546)



# போஸ்கோ BOSECO

SET. SQUARE, DRAWING BOARD CLIPS
DRAWING PAPER
DRAWING PENCIL – BOOK MARKER
WATER PROOF PENS

இன்னும் தங்கள் காகிதாதி உபகரண தேவைகளை தரமானதாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ள

'போஸ்கோ'

இல. 3, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/3548)


## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை, ஏப். 25

யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோயிலின் வருடாந்தக் குளிர்த்தி அபிஷேகம் இன்று முற்பகல் 10. 00 மணிக்கு நடைபெறும். (உ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 24

நல்லூர் கொண்டலடி ஞானவைரவ சுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும், (ஐ-103)

★ ★ ★

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை நண்பகல் 11. 00 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். (உ-30)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை அருள்மிகு ஸ்ரீ சிவன் கோயில் மகாகும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் நாளை மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.

எண்ணெய்க்காப்புச்சாத்துதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

மகா கும்பாபிஷேகம் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (உ-30)


# சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி
ஸ்ரீலங்கா

பிராந்தியம் 8 இல் நடைபெறவுள்ள
"லியோ கருத்தரங்கு"
நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால் நடத்தப்படும்
பாடசாலை மாணவர்களுக்கான

## சித்திரப் போட்டி

யாழ் நகரில் முன்னணி வகிக்கும்
எஸ்.எம். பெர்ணான்டோ
நிறுவனத்தின் அனுசரணையுடன்
நடத்தப்படும் இப்போட்டியின் தலைப்பு
"கண் பார்வைக்கு முதலிடம்"

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | – | ரூபா 1,500- 00 |
| 2 ஆம் பரிசு | – | ரூபா 1,000- 00 |
| 3 ஆம் பரிசு | – | ரூபா 750- 00 |

சான்றிதழ்களுடன் கூடிய
ஆறுதல் பரிசில்கள் பத்து

போட்டி தொடர்பான சகல நிபந்தனைகளும், விவரங்களும் 01 – 05 – 1998 உதயன் பத்திரிகையில் பிரசுரமாகும்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி,
ஸ்ரீலங்கா.

# லியோ கழகங்களுக்கான விசேட அறிவித்தல்

பிராந்தியம் 08 இல் உள்ள லியோ கழக

- தலைவர்கள்
- செயலாளர்கள்
- லியோ ஆலோசகர்கள்
- லியோ ஆசிரிய ஆலோசகர்கள்

மாவட்ட லியோ தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட கலந்துரையடலில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர்.

காலம்: 27-04-1998 திங்கட்கிழமை
நேரம்: பிற்பகல் 3.30 மணி
(பழைய நேரம்)
இடம்: மாவட்ட லியோ தலைவர் இல்லம்
82/5, நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர்.

லியோ கழகத் தலைவர்கள் 1997 / 1998 ஆம் ஆண்டுக்கான கழகச் செயற்பாட்டு அறிக்கைகளின் பிரதிகள் 5 ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து கொண்டு வரும்படி வேண்டப்படுகின்றனர்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்
சர்வதேச லயன்ஸ் கழகம்
306 பி. ஸ்ரீலங்கா

விளம்பர உதவி:
யாழ். நகரில் முன்னணி வகிக்கும்
மூக்குக் கண்ணாடி நிபுணர்கள்
எஸ். எம். பெர்ணான்டோ
இல: 580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அண்மையில்)
யாழ்ப்பாணம். (சி/3547)



# விற்பனையாகிறது

## தாவரவியல் பகுதி !

10 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்

ஆசிரியர்:
V. குகாதரன் B. Sc.
சென். தோமஸ் கல்லூரி, கல்கிசை.

ஏகவிநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு: சோதி பப்ளிகேஷன்ஸ் (55222)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 வருடங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்)
குப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

நேற்றைய கூட்டத்தில் அங்கத்தவர்களின் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாநகரசபையின் கூட்டம் நடைபெறும் மண்டபத்தில் தந்தை செல்வாவின் படத்தை வைப்பதென சகலரும் ஏகமனதாக முடிவு செய்தனர். (உ-3-5-ரீ-103)

## யாழ். ஆஸ்பத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்)
பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுக்கூடத்தில் நேற்று இவரது இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. பூர்வாங்கப் பரிசோதனை அறிக்கையின்படி 'எய்ட்ஸ்' நோய்க்கான அறிகுறி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்த கொழும்பில் மேலதிக பரிசோதனையை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை இவரது மனைவி, பிள்ளைகளையும் பரிசோதனைக்குட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேற்படி நோயாளியான இவர் திருமணமாகி ஒரு குழந்தை பிறந்த பின் 1985 ஆம் ஆண்டு வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் பணிபுரியச் சென்றதாகவும்—

கப்பல் கடமையில் தொடர்ந்து பல நாடுகளுக்கும் சென்று வந்த இந்நபர் அவ்வப்போது விடுமுறையில் ஊருக்கு வந்து சென்றதாகவும்—

அக்கால வேளையில் மேலும் மூன்று பிள்ளைகள் அவருக்குப் பிறந்ததாகவும்—

பத்து வருடங்களுக்கு மேல் கப்பலில் கடமை புரிந்த பின்னர் அவர் வேலையில் இருந்து விலகி ஊரோடு வந்து விட்டதாகவும் — கூறப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் இதுவரை இவருடன் சேர்த்து சிலர் எய்ட்ஸ் நோயின் தாக்கத்திற்குள்ளாகி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (உ.)


# குமார் ஏஜென்ட்

367, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எம் அன்புக்கினிய தமிழ் நெஞ்சங்களே!

தற்கால சூழ்நிலையால் தாய், தந்தை, சகோதர, சகோதரிகளைப் பிரிந்து உலகின் மூலை முடுக்கெல்லாம் வாழுகின்ற எமது அன்புள்ளங்களே!!

உங்களை எல்லாம் நொடிப்பொழுதில் நேரிடையாகப் பார்க்க முடியாவிட்டாலும் இனிய வார்த்தைகளால் பரிமாறிக்கொள்ளவே நாங்கள் தொலைத் தொடர்புச் சேவையை ஆரம்பித்துள்ளோம்.

வெளிநாட்டில் இருந்து இல. 0094—21—2999 ஐயும், உள்நாட்டிலிருந்து 021—2999 ஐயும் சுழற்றியவுடன் நீங்கள் தரும் விலாசத்தில் உள்ள விரும்பியவர்களை உடனே அழைத்து வந்து உங்களுடன் கலந்துரையாடச் செய்வோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**குமார் ஏஜென்ட்**

(வண்ணை சிவன் கோயிலுக்கு அருகாமையில் கதிரேசன் கோயிலுக்குப் பக்கத்தில்)

367, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:

இங்கு வரும் அழைப்புகளுக்கு ஒரு நிமிடத்துக்கு ஐந்து ரூபா மட்டுமே.

வெளிநாட்டுத் தொடர்புகளும் கணிசமான அளவு குறைத்துள்ளோம்.


## மனித..

(முதலாம் பக்கத் தொடர்)
நிறுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தேர்தல்கள் நியாயமான, நேர்மையான முறையில் நடக்கின்றதா என்பது பற்றி ஆராய முன்னர் இலங்கை வந்த அமெரிக்க அதிகாரியான ஜீம்றோஸ் என்பவரே இலங்கை வரவிருந்தார்.

மனித உரிமை ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை கொழும்புக்குள் மட்டுப்படுத்தாமல் வெளிமாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாடு இலங்கைக்குத் தெரியப்படுத்தப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா அரசு ஏற்கவில்லை என்றும் —

இது தொடர்பாக ஆராய வரவிருந்த அதிகாரிக்கு அனுமதி வெளிவிவகார அமைச்சால் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10-3)

## துரையப்பா...

(முதலாம் பக்கத் தொடர்)
தொடர்பாக அங்கத்தவர்களிடையே கருத்துப் பரிமாற்றம் சூடாக அமைந்தது

தமிழர் விடுதலைகூட்டணி உறுப்பினர்கள் எஸ். பரமசிவம், ரி. திருநாவுக்கரசு ஆகியோர் இந்த யோசனையைக் கண்டித்தனர்.

''கடவுளுக்குச் சமமான தந்தை செல்வாவின் பெயரைக் களங்கப் படுத்தக் கூடாது. 30 வருடகாலம் யாழ். நகருக்கு சேவைசெய்த துரையப்பாவின் பெயரில் இயங்கும் விளையாட்டரங்குக்கு செல்வாவின் பெயர் சூட்டுவதை தந்தை செல்வாவும் விரும்பமாட்டார் என்று பரமசிவம் கூறினார்.

''துரையப்பா விளையாட்டரங்கின் பெயரை மாற்றுவது தவறானது. துரையப்பா யாழ். நகரத்தின் நலனுக்குப் பணியாற்றியவர். அவரது நினைவாக அமைக்கப்பட்ட விளையாட்டரங்கின் பெயரை மாற்றுவதுசரியல்ல நல்லதல்ல'' என்றுகூறினார்.

புளொட் பிரமுகர் செ. கிருபைராசா இந்த கருத்தை மறுத்து பல வித காரணங்களை முன் வைத்து உரையாற்றினார்.

இது தொடர்பாக அடுத்த கூட்டத்தில் ஆராய்வது என தெரிவிக்கப்பட்டது. (உ-3-5-ரீ-103)

## சதுரங்க முடிவுகள்

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் பாடசாலைகளிடையே சதுரங்கச் சுற்றுப் போட்டி ஒன்றை இவ் வாரம் நடத்தியது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 51அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

★ 16 வயதுக்கு மேல்(ஆண்கள்):- முதலாம் இடம்—தெல்லிப்பழை மகாஜனா ''ஏ'' அணி, இரண்டாம் இடம்—யாழ். இந்து ''ஏ'' அணி (இப் போட்டியில் 12 அணிகள் பங்குபற்றின.)

★ 16 வயதுக்கு கீழ்(பெண்கள்) :- முதலாம் இடம்—தெல்லிப்பளை மகாஜனா ''ஏ'' அணி, இரண்டாம் இடம் — வேம்படி மகளிர் ''ஏ'' அணி (இப் போட்டியில் 12 அணிகள் பங்குபற்றின)

★ 16 வயதுக்கு மேல் (ஆண்கள்) :-முதலாம் இடம் —யாழ். இந்து ''பி'' அணி, இரண்டாம் இடம்—தெல்லிப்பழை மகாஜனா ''ஏ'' அணி (இப் போட்டியில் 14அணிகள் பங்குபற்றின.)

★ 16 வயதுக்கு மேல் (பெண்கள்) :- முதலாம் இடம்—தெல்லிப்பழை மகாஜனா ''ஏ'' அணி, இரண்டாம் இடம்—வேம்படி மகளிர் மற்றும் தெல்லிப்பழை யூனியன் ''பி'' அணி (இப் போட்டியில் 13 அணிகள் பங்குபற்றின.) (உ-3)

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்)
னம் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சகல தபால் ஊழியர்களையும் இன்று முதல் வேலைக்குத் திரும்புமாறு பிரதியமைச்சர் பிரியதர்ஷன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தபால் ஊழியர்கள் 18 கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தபோதும், தபால் மா அதிபரை நீக்குமாறு முன்வைத்த கோரிக்கைக்கே அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்தியாவசிய சேவைகள் பற்றிய பிரகடனம் நேற்று மாலை வெளியிடப்பட்டதும் இரவு 7.15 மணியளவில் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு வந்த படையினர், அங்கு பி. பி. ஸிக்கு பேட்டியளித்துக் கொண்டிருந்த தபால் சேவைச் சங்கச் செயலாளர் ஹெட்டியாராச்சியை மேல் சட்டையில் பிடித்து இழுத்து, ஜீப்புக்குள் தள்ளி, கைது செய்து கொண்டு சென்றதாகக் கூறப்பட்டது.

பரிவர்த்தனை நிலையத்தில் இருந்த ஊழியர்களும் பலவந்தமாக வெளியேற்றப் பட்டனர்- (உ-3-7-21)

## கண்காட்சி

சுன்னாகம், ஏப். 25

இணுவில் மத்திய கல்லூரியில் ஆரம்பப் பிரிவின் கல்விக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. இன்று மாலை 4.00 மணி வரை இக் கண்காட்சியைப் பார்வையிட முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-27)

## இிரிக்கெட்...

(முதலாம் பக்கத் தொடர்)
வித்துள்ளார்.

தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பிய அவர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா வீரர்கள் உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி கடுமையான ஒழுக்க விதிகளைப் பேணி வருகின்றார்கள்,

முன்னணி வீரர்களான அரவிந்த டி சில்வாவும், சனத் ஜயசூரியாவும் தமது திறமையை தொடர்ந்து வெளிப்படுத்த முடியாததாலேயே அணிக்கு தோல்வி ஏற்பட்டது.

அதே நேரம் அத்தபத்து, ருமேஸ் களுவிதாரண, பிரமோதய, விக்கிரமசிங்க ஆகியோர் சிறப்பாக ஆடினர்.

எமது அணி தோல்வியைத் தழுவிய போதும் ஒழுக்கம் தவறவில்லை — என்று தெரிவித்தார்.

அணியின் முகாமையாளர் துலிப் மெண்டிஸும் இதே கருத்தைத் தெரிவித்தார். (உ-10-3)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்)
பங்குபற்றச் சென்றசமயமே ஆமர் வீதியில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் ஜனாதிபதி பிரேமதாஸா கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-21-3)


யாழ். நகர மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் ஒரு சேவையாக...

# நேற்று குதூகலமான ஆரம்பம்!!!

# "சுப்ப ஸோ" கலர் படச் சேவை

பதினைந்து நிமிட நேரத்தில் உங்கள் கலர் படச் சுருள்களை நவீன கொம்பியூட்டர் மூலம் உரிய தரம்வாய்ந்த படப்பிரதியாகக் கழுவிப் பெற்றிட இன்றே நாடுங்கள்

**சுப்ப ஸோ கலர் படச் சேவை,**

இல. 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- **சுப்ப ஸோ வீடியோ ரவி ஒளி கானம்,**
100A, ஸ்ரான்லி -வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25 – 04 – 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி

# சஞ்சிகை

25 — 04 — 1998 சஞ்சீவி

கொக்குவில் தபாலகம் முன்

மகானந்தவாசா
தொலைபேசிச்
சேவை



உள்ளூர், வெளியூர் நேரடித் தொலைபேசிச் சேவையை தினமும் 6-45 a.m. — 6-45 p.m. வரை பெற்றுக்கொள்ளலாம்.

''உங்கள் தேவையே எங்கள் சேவை''

ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டி. (55103)

## கருத்துக் கலசம்

### மன இணக்கம்

மிக அண்மைக் காலமாக எமது பண்பாடுகள், மரபுகள் தேய்ந்தும் நலிந்தும் வருவதைக் காணமுடிகிறது. அது மட்டுமன்றி, புதிது புதிதான சமூகச் சீரழிவுகளும் தலை தூக்கி வருகின்றன. இவற்றில் பெரிய அளவில் திடீரெனப் பெருகிக் காணப்படுவதில் மண முறிவுகளும் அடங்கும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களில் நானூறுக்கும் மேற்பட்ட விவாகரத்து வழக்குகள் விசாரணைக்காகக் காத்துக் கிடக்கின்றன என்ற தகவல் அதிர்ச்சி தருவதாகும்; கவலைக்குரியதும் ஆகும்.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் மன இணக்கம் குன்றிப் போனால் மண முறிவு உண்டாவது இயல்புதான். ஆனால் அதனை மணநீக்கமாக்கிவிடும் தன்மை வரவேற்கத் தக்கதல்ல. குன்றிப் போன மன இணக்கத்தை வளர்த்து குடும்பக் கூட்டை இறுக்கமாக்கிப் பேணுவதற்கு முயற்சி செய்யப்பட வேண்டும்.

அற்ப காரணங்களுக்காக, எடுத்த எடுப்பிலேயே நீதிமன்றம் சென்று விவாகரத்துப் பெற முனையும் போக்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். தற்காலிக நலன்களுக்காக, ஆசைகளுக்காக ஒன்று சேர்க்கப்படும் அல்லது ஒன்று சேரும் தம்பதியர் மண முறிவை நாடுகின்றனர்.

இதற்கு முன்னர் எங்கள் சமூகத்தில் மண முறிவுகள் இல்லாமல் இல்லை. ஆனால் அவை மணநீக்கங்களாக — விவாகரத்துக்களாக — மாறாமல், முற்றிப் போகாமல் பெரியோரின் அறிவுரைகள், சமரசங்கள் மூலம் பெரிய அளவில் தடுக்கப்பட்டன; தவிர்க்கப்பட்டன.

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் — என்றார் ஔவையார். காதல், திருமணத்துக்கு முந்தியதாகவே இருக்க வேண்டும் என்பது நியதியல்ல. திருமணத்துக்குப் பிந்திய கணவன் — மனைவி காதலும், மன ஒற்றுமையுமே நிச்சயம் அவசியம்.

எமது நேற்றைய சமூகச் சூழலில், முன்னர் பழகியிராத, தெரிந்திராத கணவன்—மனைவியர் இடையேகூட மன இணக்கம், மனஇசைவு, கருத்தொற்றுமையை உருவாகக்கூடிய பின்புலமும், வரன்முறைகளும் இருந்தன. இப்போது அவை பெரிதும் அருகிப் போனமையே புதிய பாதகமான போக்குக்குக் காரணம் எனலாம்.

திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்; குடும்பம் ஒரு கோவில்; என்ற சாதாரண வழக்குகள் குடும்பத்தின் மகிமையை எடுத்துக் கூறுவனவே. வள்ளுவனோ இல்வாழ்க்கையே உலகத்து அறம் என்று மேலும் ஏற்றிப் புகழ்கின்றான்.

இவை சமூக வாழ்வின் பின்புலங்களாக அமைந்தால் மண முறிவுகள், விவாகரத்துகள் பெருக மாட்டா. ஆனால் படித்தவர்களிடையேயும் மண முறிவுகள் உண்டாகின்றன என்றால் எமது பழைய பண்புகளை, அறங்களை நெறிமுறைகளை நாம் மறந்து வருகிறோம் என்பதுதானே அர்த்தம்?

# விரைந்துவரும் வீரிய விண்கல்! தப்பிப் பிழைக்குமா பூமிப்பந்து?

பூமியின் முடிவு நெருங்கி விட்டதா?

சில வாரங்களுக்கு முன்பு இந்தத் திடுக்கிடும் தகவல் வெளியான போது உலகமே கலங்கிப்போனது.

''பூமியை 'எக்ஸ். எவ். 11' (X F 11) என்ற வடிவில் காலன் நெருங்குகின்றான்'' என்ற தகவலை அலறி அடித்துக் கொண்டு கணனிகள் அறிவித்தபோது அடிவயிற்றில் புளி கரைக்கும் தலைப்புச் செய்தியாக உலகெங்கும் அது பரவியது.

அண்டவெளியில் சுற்றிச் சுழன்றடிக்கும் பலஆயிரக் கணக்கான விண் கற்களில் (Asteroid) ஒன்றுதான் இந்த 'எக்ஸ். எவ். 11'. அந்த வீரிய விண்கல்லுக்கு விஞ்ஞானிகள் இட்ட பெயர் அது.

...2028ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி இந்த விண்கல் பூமிக்கு மிக சமீபமாக—26 ஆயிரம் மைல்கள் தொலைவில் — நெருங்கி வருகிறது......இதனால் நம் பூமிப்பந்து தப்பிப் பிழைப்பது சாத்தியமல்ல; மாபெரும் மலையை ஒத்த இந்த விண்கல்லின் வேகமும், வெப்பமும் சீற்றமும் பூமியை கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் இட்ட பணியாரத்தைப்போல் பொரித்து எடுத்துவிடும் (Toast) என்று விண்ணியல்நிபுணர்கள் பதற்றத்துடன் அறிவிக்க அது உலக நாடுகளை ஒரு கலக்குக் கலக்கியது.

பூமியின் முடிவு நெருங்கி விட்டது. பூமிக்கு ''குட்பை'' சொல்லிவிட்டு மனிதர்கள் எங்கேபோவது? ஆக நம் ஒவ்வொருவரின் கதையும், முடிவும் நெருங்கிவிட்டதா?

தத்தமது தொலைக் காட்டிகள் முன்னால் விண்ணியல் நிபுணர்கள் துவண்டு போய் நின்றனர்.

என்ன செய்வது?

கலியுகத்துக்கு இவ்வளவு சீக்கிரம் முடிவா? என்று பிரபல சோதிட நிபுணர்களும் விழித்துக்கொண்டனர்.

கலியுகம் இவ்வளவுசீக்கிரம் முடிந்துவிடாது என்று அவர்கள் அடித்துச் சொன்ன ஆருடங்களை பத்திரிகைகள் வெளியிட்டபோதும் கலக்கம் குறையவில்லை.

மணித்தியாலத்துக்கு 45 ஆயிரம் மைல்கள் என்ற வேகத்தில் சுழலும் ''எக்ஸ். எவ். 11'' பூமியுடன் மோத நேர்ந்தால் துப்பாக்கியில் இருந்து புறப்படும் ரவையின் வேகத்தைப் போல் 100 மடங்கு வேகத்தில் பூமியை அது தாக்கும் என்றும்—

**நல்லூர் தாஸ்**

ஐந்துலட்சம் மெகாதொன் ரீ. என். ரீ. வெடிமருந்து வெடிக்கும்போது ஏற்படும் தாக்கத்தை பூமியில் அது உண்டுபண்ணும் என்றும் நிபுணர்கள் வெளியிட்ட மேலதிக தகவல்கள் பீதியைப் பெருக்கின.

ஹிரோஷிமாவில் வெடித்த அணுகுண்டால் பேரனர்த்தம் ஏற்பட்டது தெரிந்ததே; அங்கு ஆக 0.015 மெகாதொன் அளவு வெடிப்பொருளே வெடித்தது என்றால், இந்த ஐந்து லட்சம் மெகா தொன் ரீ. என். ரீ வெடிமருந்து சக்தி ஏற்படுத்தக் கூடிய அனர்த்தம் எப்படியிருக்கும் என்று ஒரு தடவை கற்பனை செய்து பாருங்களேன்.

''எக்ஸ். எவ் 11'' விண்கல்லின் சுற்றுப்பாதை மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வே அது பூமியை நெருங்கும் காலத்தை நிர்ணயித்தது.



அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் வீழ்ந்த சிறிய எரிகல் ஒன்றினால் கற்பாறைகளில் ஏற்பட்ட — பல கிலோ மீற்றர் குறுக்களவுள்ள — பெருங்குழி.

பூமியை அது நெருங்கும் போது பூமிக்கும் அதற்கும் இடையேயான தூரத்தைக் கணிக்கவும் அந்த ஆய்வே உதவியது.

பதற்றமான சூழ்நிலையிலும் இந்த விண்கல்லின் சுற்றுப்பாதை மீது மேலும் துல்லியமான ஆய்வை மேற்கொள்ள விண்ணியல் நிபுணர் குழு ஒன்று தீவிரமாக ஈடுபடத் தொடங்கியது. அதன் பலனாக இந்த விபரீத விவகாரத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

1990 ஆம் ஆண்டில் ''எக்ஸ். எவ் 11'' ஒரு தடவை பூமியை நெருங்கி வந்தது என்ற தகவலே இந்தத் திருப்பம் ஏற்பட வழி வகுத்தது.

1990 இல் விண்கல் பூமியை நெருங்கிய காலத்தில் விண்கற்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட எவராவது விண்கல் தொகுதிகளைப் புகைப்படம் எடுத்திருந்தால் இந்த ''எக்ஸ். எவ். 11'' அதனுள் சிக்கியிருக்கும் என நம்பிய விண்ணியல் நிபுணரான எலினொர் ஹெலின் (Eleanor Helin) என்றபெண் நிபுணர் அத்தகைய புகைப் படங்களைத் தேடும் தீவிர வேட்டையில் இறங்கினார்.

பூமியை நெருங்கும் விண்கற்கள் தொடர்பான ஆய்வுக்காக உலகளாவிய ரீதியில் இயங்கும் ''நீற்'' (NEAT) ஒன்று அமைப்புடன் தொடர்பு கொண்டு 1973 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை பூமியை நெருங்கி வந்த விண்கற் தொகுதிகளின் படங்களின் பட்டியல் பெறப்பட்டது.


விண்ணியல் துறையில் 50 ஆண்டுகால அனுபவம் மிக்கவரான பொறியியலாளரான பிறியன் மார்ஸ்டென் (Brian Marsden) என்பவர் ஹெலினுடன் இணைந்து இந்தப் படத் தொகுதிகளை, அவை தொடர்பான தரவுகளை நவீன கணனிகளின் துணையுடன் ஆய்வு செய்தார்.

தீவிர ஆய்வின் பின் 1990 இல் பூமியை நெருங்கிய ''எக்ஸ். எவ். 11'' இன் படம் சிக்கியது. பின்னர் அந்தப் படம் துல்லியமான ஆய்வுக்காக கணனிகளில் செலுத்தப்பட்டது. அவ்வளவுதான் அந்த விண்கல் தொடர்பான சகல விவரங்களையும் கணனிகள் வெளியிடத் தொடங்கின.

அதன்படி—

1990 ஆம் ஆண்டு இந்த விண்கல் பூமியை நெருங்கிய போது அதற்கும் பூமிக்கும் இடையிலான இடைத்தூரம்

(XI ஆம் பக்கம் பார்க்க)



'விண்கல்' என்ற அமெரிக்க ரி. வி. படத்தில் ஒரு காட்சி.

### மே தினமே!

உழைக்கும் வர்க்கத்தின்
உரிமைக் குரலாய்,
முளைக்கும் புரட்சிகளின்
முத்துப் பந்தலாய்
வருகின்ற மேதினமே!
வசந்தத்தை வாழ்த்திடு.

வியர்வையின் நதியில்
வெற்றிக்கனியைநீராட்டு,
துயரத்தின் பிடியிலிருந்து
தொழிலாளிகளைமீட்டிடு
புயலாகிப் போரிடு —
புல்லர்களைத் தீயிடு.

— நல்லை அமிழ்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்ட விதிகளும் அவற்றை கண்மூடி ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளும்!

## உள்ளும் புறமும்

குறமுனி

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் அவசரகாலச் சட்டவிதிகளில் குற்றங்களாக்கப்பட்டுள்ள செயல்கள் குறித்து அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய குற்றங்களைப் புரிவோருக்கு எதிராக ஆகக் குறைந்தது ஏழு வருடச் சிறைத்தண்டனையும் ஆகக் கூடியது 15வருடத்துக்குமேற் படாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட முடியும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் 1998 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இந்த விடயங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சட்ட விதிகளின் படி —

புலிகள் இயக்கத்துக்கு எனப் பயன்படுத்துவதற்காக — அல்லது அந்த நோக்கத்துக்காக— ஒருவரின் பாதுகாப்பில் பணமோ அல்லது வேறு ஏதேனும் உடைமைகளோ உள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் தமக்கு ஏற்புடைய முறையில் விசாரணைகளை நடத்தி திருப்திப்படுமிடத்து அத்தகைய பணத்தையோ உடைமையையோ பறிமுதல் செய்யும் உத்தரவை அமைச்சர் விடுக்கலாம்.

அவ்வாறு பறிமுதல் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சர் எடுக்கும் தீர்மானத்தை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்பட முடியாது. அதாவது அவரின் அத்தகைய தீர்மானத்தில் எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது.

— இவ்வாறு அந்த அவசரகாலச் சட்ட விதி தெரிவிக்கின்றது.

நீதிமன்றங்களுக்கு இருக்கும் சட்ட அதிகாரத்தை— அவசரகால நிலைமை என்ற காரணத்தைக் காட்டி பறிமுதல் செய்து — சட்ட அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கும் விதத்தில் — உருவாக்கப்பட்டிருக்கும் இந்தச் சட்டவிதிகள் பல்வேறு மட்டத்திலும் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவிக்கத் தவறவில்லை.

மேலோட்டமாகப் பார்த்தால்பயங்கரவாதத்தை—அல்லது தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு இத்தகைய—ஜனநாயக மற்றும் இயற்கை சட்ட விதிகளுக்கு மாறான—சட்டவிதிகள் அத்தியாவசியமானவையே என்று படலாம்.

ஆனால் இந்தச் சட்டவிதிகளை ஆழமாகப் பார்த்தால் ஒரு ஜனநாயகக் குடியரசில், அடிப்படை மனித உரிமைகளுக்கு—முறையான நீதிக்கான ஏற்பாட்டிற்கு— சாவுமணிஅடிக்கும் செயலாக அது காணப்படுவது புலனாகும்.

பயங்கரவாதத்தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் பின்னர் பயங்கரவாதத் தடுப்பு (நிரந்தர ஏற்பாடுகள்) சட்டமாக மாற்றப்பட்ட சமயத்திலும் இதே போன்ற சில சட்டச் சிக்கல்களும் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் எவரையும்—நீதிமன்றத்தில் ஆஜராக்காமல்—தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைத்திருக்க முடியும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

இத்தகைய தடுப்புக்காவல் உத்தரவை — கைதி எங்கு, எத்தகைய நிலையின் கீழ் தடுத்து வைத்திருக்கப்பட வேண்டும் என்ற விவரத்தோடு—பிறப்பிக்கும் அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கும் விதத்தில் சட்ட மூலத்தை அப்போதைய ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் கொண்டு வந்திருந்தது.

ஆனால் அப்போதிருந்த உயர்நீதி மன்றம் அத்தகைய சட்டமூலத்தை நிராகரித்து விட்டது. ஒருவரைக் கைது செய்து, தடுப்புக்காவலில் வைக்கும் உத்தரவை அரசியல்வாதியான பாதுகாப்பு அமைச்சருக்கு எப்படி வழங்குவது என்று உயர் நீதிமன்றம் வினா எழுப்பியது.

உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலை அடுத்து தடுப்புக்காவல் உத்தரவு, தடுப்புக்காவல் விதிமுறைகள் ஆகியவை பற்றிய பணிப்புரையை விடுக்கும் அதிகாரம் அரசியல்வாதியான பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து பறிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும் விதத்தில் சட்ட மூலத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது.

## தாம் ஆதரிக்கும் சட்டத்தில் தாமே தடுக்கியும் விழலாம்

அன்று முதல் தடுப்புக் காவல் உத்தரவுகளை விடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் மீண்டும் அத்தகைய அதிகாரம் — அதுவும் நீதிமன்றத்தினால் கூட கேள்விக்கு உட்படுத்தப்பட முடியாத அதிகாரம் — அரசியல்வாதியான பாதுகாப்பு அமைச்சரின் கைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரத்தில் இரண்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

அதாவது —

ஒன்று:- அமைச்சரின் அத்தகைய உத்தரவு ஒன்றினால் பாதிக்கப்படும் ஒருவர் தமக்கு நிவாரணம் தேடி நீதிமன்றம் எதனிடமும் செல்ல முடியாது. சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்படும் வரை எவரும் அப்பாவியாகவே (Innocent) கருதப்பட வேண்டும்; தண்டிக்கப்படக்கூடாது என்று அரசமைப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கும் அடிப்படை உரிமையை இந்த அவசரகாலச் சட்டவிதி மீறுகின்றது.

இரண்டாவது:- நீதிமன்றத்தின் சட்ட அதிகாரம், நீதிமன்றத்தால் கூட கேள்விக்கு உட்படுத்தப்பட முடியாத வகையில் அரசியல்வாதி ஒருவரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இரு பிற்போக்குத்தனமான — பின்னடைவான — சட்டவிதிகளைக் கொண்ட அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளை அரசுகொண்டு வந்துள்ள போதிலும் —

அரசுத் தரப்பினரோ எதிர்க்கட்சியினரோ, தமிழ்க் கட்சியினரோ — ஏன் பத்திரிகைகள் கூட — அது குறித்து கருத்துத் தெரிவிக்காமல் — பெரிய பரபரப்பை ஏற்படுத்தாமல் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றார்கள்; மௌனம் சாதிக்கின்றார்கள்.

இத்தகைய சட்டவிதிகளை இத்தரப்புகள் எதிர்க்காமல் இருந்ததற்கு — அல்லது 'அமுக்கி' வாசித்ததற்கு — காரணம் என்ன?

சிங்களக் கட்சிகளைப் பொறுத்தவரை சிங்கள தேசியவாதமே அவற்றுக்கு முக்கியமானது; தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் அவசரகாலச் சட்ட விதிகளை எதிர்ப்பதல்ல அவற்றின் நோக்கம். தமிழர்களின் இத்தகைய உரிமைகளைப் பறிப்பதன் மூலமே தமது கடந்த கால அரசியல் ஸ்திரத்தைப் பேணி வந்த அக்கட்சிகள் இத்தகைய சட்டவிதிகளை ஒரு போதும் எதிர்க்கமாட்டா.

அடுத்தது பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்கள். இத்தகைய அவசரகாலச் சட்டவிதிகள் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியானதைச் அறிந்ததுமேபத்திரிகையாளர்களுடன் பத்திரிகைகளும் அதிர்ந்து போயின என்பது உண்மைதான். ஆனால் பத்திரிகையாளர்களின் பார்வையும் குறுகிய சுய நல வட்டத்துக்குள் இருந்து விட்டதால் — மேற்படி அவசரகாலச்சட்ட விதிகளில் பத்திரிகையாளர்களுக்கு விலக்களிக்கப்படுகின்றது; அவர்களுக்கு எதிராக இச்சட்டம் பிரயோகிக்கப் படமாட்டாது என்ற — நாய்க்கு எலும்புத் துண்டு வீசுவது போன்ற — அறிவிப்பு வெளிவந்ததும் அவர்கள் அடங்கிப் போய்விட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் பத்திரிகையாளருக்கு மேற்படி சட்ட விதிகளில் இருந்து விலக்களிக்கும் விவகாரம் கூட — பல மாதங்களாகியும் — இன்னும் வெறும் அறிவிப்பாக உள்ளதே தவிர, சட்ட அந்தஸ்து (வலிமை) பெறவில்லை.

இத்தகைய — நாய்க்கு எலும்புத் துண்டு வீசுவது போன்ற — அறிவிப்பு வந்ததும் பத்திரிகைகள்கூட ஆபத்தான இந்த அவசரகாலச் சட்ட விதிகள் குறித்து, நமக்கு என்ன என்ற பாணியில் ஒதுங்கி விட்டன.

சரி. இனி இது விடயத்தில் அக்கறை காட்ட வேண்டிய தமிழ்க்கட்சிகள் கூட ஏதேனும் அலட்டிக் கொள்ளுமா என்றால் அதுதான் இல்லை.

நாடாளுமன்றத்தில் நூலிழைப் பெரும்பான்மையில் (ஒரேயொரு அதிகப்படி நாடாளுமன்ற உறுப்பினரின் ஆதரவுடன்) காலத்தை ஓட்டி வரும் சந்திரிகா அரசுக்கு வலிந்து போய் முண்டு கொடுத்துக் கொண்டிருப்பவை தமிழ்க் கட்சிகளே.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.), புளொட் ஆகியவை இதில் முக்கியமானவை.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் —

நீதியான —நீதிமன்ற விசாரணையின்றி — மக்களைத் தண்டிக்கக் கூடிய போக்குக்கு வழி செய்யும் —

நீதிமன்ற அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கும் —

உரிமையை அரசுக்கு தாரை வார்க்கின்ற அவசரகாலச் சட்டத்தை இந்தத் தமிழ்க் கட்சிகள் ஆதரித்து நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும்; அல்லது வாக்களிக்காமல் ஒதுங்குவதன் மூலம் அரசுக்கு முண்டு கொடுக்கும். பின்னர் நாங்கள் ஏன் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தோம் அல்லது வாக்களிப்பில் பங்கு பற்றாமல் விட்டோம் என்பதற்கு பல 'விதண்டாவாதங்களை' முன்வைக்கும்.

தமிழ் மக்களும் இக்கட்சிகள் தொடர்ந்து தமது தலையில் மிளகாய் அரைப்பதை தெரிந்தும் தெரியாத மாதிரி கேட்டுக் கொண்டிருப்பார்கள்.- இதுதான் இப்போதைய தொடர்கதை.

''புலிகள் தண்டிக்கப்பட வேண்டும்; ஒடுக்கப்பட வேண்டும்; அவர்கள் பயங்கரவாதிகள்; வன்செயல்களில் ஈடுபடுபவர்கள்; ஆகவே அழிக்கப்பட வேண்டியவர்!'' — என்றெல்லாம் தமிழ்க் கட்சிகள் உண்மையாகவே கருதலாம். அல்லது அப்படி கருதுவது போல வெளியே அரசுக்கும் மறுபுறத்தில் புலிகளின் போராட்டத்தை ஆதரிப்பது போல தமிழ் மக்களுக்கும் காட்டி இரட்டை வேடம் போடலாம். அது தவறு என்று நாம் கூறவரவில்லை. அது அக்கட்சியின் கொள்கைகளை — சித்தாந்தங்களைப் பொறுத்தது. அது சரியானதா. அவர்களின் இரட்டை வேடப்போக்கை ஏற்கலாமா என்பதையெல்லாம் தீர்மானிக்க வேண்டியவர்கள் மக்களே. தமிழ்க் கட்சிகளின் விடயத்தில் தீர்மானிக்கும் பொறுப்பு தமிழ் மக்களுடையது. அதில் நாம் தலையிட வரவில்லை.

ஆனால் புலிகளை அடக்குவதற்காக அரசுக்கு உதவுகின்றோம் என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படும் ஜனநாயக விரோத சட்ட விதிகளுக்கு முண்டுகொடுப்பது தவறானது என்பதைத் தான் இந்தத் தமிழ்க்கட்சிகளுக்கு விளக்க விரும்புகின்றோம்.

இதே அவசரகாலச்சட்ட ஏற்பாடுகள் தங்களுக்குக்கு எதிராகவே சுலபமாகத் திருப்பப்படக்கூடியவை என்பதையும் அக்கட்சிகளுக்கு நினைவூட்டுவதும் பொருத்தமாகும்.

மேற்படி சட்டவிதிகளின் படி—

பாதுகாப்பு அமைச்சர் தமக்கு ஏற்புடைய முறையில் ஒரு விசாரணையை நடத்தி திருப்திப்படுமிடத்து ஒருவரின் வசமுள்ள பணத்தையோ, உடைமையையோ புலிகளுக்குப் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளது என்று கூறி அவற்றைப் பறிமுதல் செய்யலாம். பாதுகாப்பு அமைச்சர் எப்படி விசாரணை நடத்தினார்? அந்த விசாரணையின் விவரம் என்ன? இந்த விடயத்தில் புலிகளின் தொடர்பு குறித்து திட்டவட்டமான முடிவுக்கு வருவதற்கான— திருப்திகரமான —ஆதாரங்கள் அவருக்கு கிடைத்தனவா?—என்ற விடயத்தை எல்லாம் யாரும் நீதிமன்றம் உட்பட எங்கும் கேள்விக்கு உட்படுத்த முடியாது. அதாவது இவ்விடயத்தில் தன்னிச்சையாக—தான்தோன்றித்தனமாக—பாதுகாப்பு அமைச்சர் முடிவெடுத்தால் கூட அதனை யாரும் நீதிமன்றத்தில் கூட தட்டிக் கேட்க முடியாது.

இத்தகைய வாய்ப்பான சட்ட ஏற்பாட்டை பாதுகாப்பு அமைச்சர் தாம் நினைத்த நேரத்தில் புலிகள் மற்றும் புலிகளின் ஆதரவாளர்கள் மாத்திரமன்றி, தமிழ்க் கட்சிகளுக்கு எதிராகவும் சுலபமாகப் பிரயோகிக்க முடியும் என்பதை அவசரகாலச் சட்டத்துக்கு முண்டு கொடுக்கும் தமிழ்க் கட்சிகள் சற்று கவனத்தில் எடுக்கவேண்டும்.

தமிழ்க் கட்சிகளுக்கு இது விடயத்தில் ஒரு புராணக் கதையை நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கலாம்.

யாருடைய தலையில் தன் கையை வைத்தாலும் அவர்களை எரித்து சாம்பலாக்கி விடும் வரத்தைப் பெற்றுக் கொண்டபத்மாசுரன் என்ற அசுரன்பின்னர் தனதுதலையிலேயே தனது கையைவைத்து எரிந்து சாம்பலாகிப் போக வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதுதான் அந்தப் புராணக் கதை.

தாம் ஆதரித்த சட்டவிதிகளே தமக்கு எதிராகத் திரும்ப வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பதைத் தமிழ்க் கட்சிகள் மறந்து விடக் கூடாது.

கொழும்பில் தமிழர்கள் கைதாவது குறித்தும் இம்சிக்கப்படுவதுகுறித்தும் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் விசேட கவனஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணி கொண்டுவந்தது தெரிந்ததே.

இது குறித்து கடந்த சஞ்சீவியில் இதே பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இந்த விவகாரம் கடந்த புதனன்று மாலை நடாளுமன்றத்துக்கு வந்தபோது நாம் கடந்த வாரம் சந்தேகம் தெரிவித்ததை ஊர்ஜிதப்படுத்துவது போல தமிழர் கூட்டணி தவிர ஏனைய கட்சிகள் மௌனம் சாதித்து சமாளித்துக்கொண்டன.

இந்தப் பிரேரணையை தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் முன்மொழிந்து பேசினார். இரா. சம்பந்தன் வழிமொழிந்து பேசினார். ஐ. தே. கவின் எம். பியான ஏ. ஸி. எஸ். ஹமீத், மகிந்த சமரசிங்க, இ.தொ. காவின் எம்.பியான பி. பி.தேவராஜ் அமைச்சர் அஷ்ரப் ஆகியோரும் உரையாற்றினர்.

அப்போது சபையில் புளொட், ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் உட்பட 35 பேர் இருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவரும் பேசவில்லை.

ஒத்திவைப்புப் பிரேரணையில் பேசி என்ன பயன் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்; அல்லது பேச நேரம் கிடைக்காமல் போயிருக்கலாம்; அல்லது தமக்குத் தெரிந்த தமிழ்மொழியில்பேசி என்ன பயன் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். அப்படியும் இல்லாமல் பேசாமல் இருப்பதன் மூலம் சம்பந்தப்பட்டோரிடம் நல்ல பெயர் எடுக்கவும் அவர்கள் யோசித்திருக்கலாம்,

எது எப்படியோ கொழும்பில் தமிழர்கள் கைதாவது இம்சிக்கப்படுவது ஆகியவை குறித்து உரிய பதில் நடவடிக்கை எடுக்கும் விடயத்தில் தமிழ்க் கட்சிகள் தங்க பங்களிப்பைச் சரிவர வழ

(XI ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையைப் பேணுவோம்!

பாதுகாப்பான தாய்மை. —இதுவே உலக சுகாதார ஸ்தாபனத்தின் (Safe Motherhood) 50ஆம் ஆண்டு நிறைவையொட்டிய உலக சுகாதார தினத்தின் (7 ஏப்ரல் 1998) வாசகமாகும்.

தாய்மை புனிதமானது. ஒரு பெண்ணின் சாதாரண வாழ்க்கையிலிருந்து வேறுபட்டது. தாய்மைக் காலத்தில் ஒரு பெண்ணின் உடலமைப்பில் மட்டுமன்றி உள



அமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ்வுள மாற்றங்கள் கருப்பையில் வளரும் சிசுவின் உடல், உள வளர்ச்சியிலும் தாக்கங்களை ஏற்படுத்தும். கருத்தரித்த மாதர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்களின் மனத்தாக்கங்களை அறிந்து தப்பான எண்ணங்கள் உருவாவதைத் தடுக்கலாம். மேலும் மகப்பேற்றின் பின்னரும் தளர்ச்சியடையாது, சிறந்த முறையில் குழந்தையைப் பராமரிக்கவும் வழிவகுக்கலாம். இதற்கு தாயுடனான தொடர்பு கருத்தரித்த காலத்திலும் குழந்தை பிறந்த பின்னரும் இருத்தல் அவசியம். தாயின் கல்வி அறிவும் தாய்மையின்போது உள மாற்றங்களை ஏற்படுத்துவதில் பங்குவகிக்கின்றது.

இளவயதில் தாய்மையடைவோர் அனுபவமின்மையால் பிரசவத்தை நினைத்துப் பயமடைவர். அதே போல நாற்பது வயதிற்கு மேல் தாய்மையடைவோர் சுகப்பிரசவத்தினை நினைத்தும் குழந்தையின் எதிர்காலத்தை நினைத்தும் பயமடைவர். இவ்விளைவுகளை அவர்களுடன் உரையாடுவதன் மூலம் குறைக்கலாம்.

முதல் தடவையாகத் தாய்மையடைவோரிடம் அதிக ஏக்கம் காணப்படும். வருடத்திற்கு ஒரு முறை தாய்மையடைவோரிடம் பதற்றம் காணப்படும். திருமணத்தின் நெடுநாள்களின் பின் தாய்மையடைவோர் தமது பிரசவத்தைப்பற்றி அதிக அக்கறை கொள்வர். திட்டமிடப்படாதபடி தாய்மையடைவோரிடத்தும் குழந்தை கிடைப்பதனைப் பிற்போட நினைக்காதவிடத்தும் மனத்தாங்கல்கள் காணப்படும். ஒரு சிலர் தாம் தாய்மை அடைந்ததை பிரசவம் நிகழும்வரை உணர மாட்டார்கள். இவர்களிடத்து விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். இவர்களிடத்துக் காணப்படும் அச்ச உணர்வை நீக்கி குழந்தையைச் சிறந்த முறையில் வளர்க்க உதவ வேண்டும்.

திருமணமாகாதோர் தாய்மையடையுமிடத்தும், கருக்கலைப்பு தோல்வியுற்று தாய்மையடையுமிடத்தும் அச்ச உணர்வும் குற்ற உணர்வும் மேலிட்டுக் காணப்படும். இவ்வாறான குழந்தைகள் சமூகத்தின் அவமானச் சின்னமாக எமது இலக்கியங்களில் கூட குறிப்பிடப்படுகின்றனர். மகாபாரதத்தில் குந்தி கன்னியாகவிருந்து பெற்ற கர்ணனை பேழையிலிட்டு ஆற்றில் விட்டமை போல் இன்றும் பல குழந்தைகள் அநாதரவாக விடப்படுகின்றனர்; அல்லது விற்கப்படுகின்றனர். தம் பெற்றோர்கள் யாரெனத் தெரியாது ஏங்கும் குழந்தைகளும், தம் குழந்தைகள் எங்கு எவ்வாறுள்ளனர் என்று ஏங்கும் தாய்மார்களும் எம் சமூகத்தில் உருவாகின்றனர். குந்தி — கர்ணன் சந்திப்பின் போது ஏற்படும் பாசம் இதனையே உணர்த்துகின்றது.

வேண்டப்படாத குழந்தைகள் அமையுமிடத்தும், ஒரே குடும்பத்தில் அதிக குழந்தைகள் அமையுமிடத்தும், பெண் குழந்தைகள் பிறக்குமிடத்தும் அக்குழந்தைகள் மீது காட்டும் அக்கறை குறைவாகக் காணப்படும். இதனால் குழந்தைகளின் தேவைகள் பூரணப்படுத்தப்படுவதில்லை. குழந்தைகள் மீது வெறுப்புணர்ச்சி கூடும். இவை தவிர்க்கப்படல் வேண்டும். இத்தகைய போக்கினால் குழந்தையின் உடல் வளர்ச்சி மட்டுமன்றி உளவிருத்தியும் பாதிக்கப்படும். மேலும் பிற்காலத்தில் சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் குணவியல்புகளை வளர்க்க ஏதுவாக அமையும். எனவே இவற்றினை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடல் வேண்டும்.

வீட்டு வசதியீனங்கள், பொருளாதார தாழ்நிலை என்பன தாய்மையுற்றோரில் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன. பெண் சகோதரர்களிருப்பின் அவர்களுடன் உரையாடுவதன் மூலம் உளத்தாக்கங்களைக் குறைக்கலாம். தம் தாயாரின் அருகாமை தாய்மையடைவோரிடத்து உளத்தாக்கத்தைக் குறைக்கும். மாறாக இளமையில் பெற்றோரை இழந்தவர்களிடம் பாதிப்பு அதிகம் காணப்படும்.

தாயாகும் போது தாங்கள் செய்யும் தொழிலை இழக்க நேரிடலாம் என்ற அச்சமும், தாய்மையினால் சாதாரண மத அனுட்டானங்களில் ஈடுபடமுடியாது என்ற அழுத்தங்களும் நீக்கப்படல் வேண்டும்.

தாய் தன் உடல் நலத்தைப் பற்றிக் கவலைப்படல், குழந்தையின் உடல் நலத்தைப் பற்றிக் கவலைப்படல் ஆகியவை அகற்றப்படல் வேண்டும். தாய் தன் உடற்பருமன் அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளாது விடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். இதனால் உணவைக்குறைக்க முயலுதலும் தவறானது. குழந்தையின் வளர்ச்சிக்குப் போசணை நிறைந்த உணவுகளை உண்ணல் அவசியம் என்பது வலியுறுத்தப்படல் வேண்டும். மேலும் உடற்பருமன் அதிகரிப்பிற்கேற்ப இலகுவான ஆடை அணியப் பழகுதல் வேண்டும். கருத்தரிப்பதனால் உடலின் அழகு குன்றிவிடும் என்ற ஏக்கம் கூடாது. மனைவி தாய்மையுற்றிருக்கும் போது கணவன் மனைவிக்கு சகலவழிகளிலும் உறுதுணையாக ஒத்தாசையாக இருத்தல் வேண்டும். மனைவியின் மன மகிழ்ச்சி, ஆரோக்கியமான மழலையைப் பெற்றெடுக்க வழிவகுக்கும்.

கர்ப்பவதிகளுக்கான வைத்திய நிலையங்கள் உள்ளூர், பொது வைத்தியசாலைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களின் மூலம், தாயாரின் உடல், உளநிலை ஆரோக்கியமான முறையில் பேணப்படுகின்றது; பிரசவத்தின் பிரச்சினைகள், சிக்கல்கள் எதிர்வு கூறப்படுகின்றன. ஆரோக்கியமான குழந்தையின் பிரசவம் உறுதிப்படுத்தப்படுகின்றது. குழந்தையை வளர்ப்பதற்குத் தாயார் தயார்ப் படுத்தப்படுகின்றார்.

நன்றாக நிருவாகப்படுத்தப்பட்ட வைத்தியநிலையங்களில் கர்ப்பவதிக்கும்பிரசவம் பார்க்கும் தாதிமாருக்குமிடையே புரிந்துணர்வு ஏற்படுத்தப்படுகின்றது; சன நெருக்கடியில்லாது, நீண்ட நேரம் காத்திருக்காது வைத்தியரைச் சந்திக்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கும்; கர்ப்பவதியாயின் இரகசியம் பேணப்படும்; வைத்தியருடன் அல்லது தாதியிடம் தம் பிரச்சினைகளை முறையிட போதிய நேர அவகாசம் கிடைக்கும்.

இந்நிலையங்கள் கர்ப்பத்தின் முன்னான காலத்திலும், கர்ப்ப காலத்திலும், குழந்தை பிறந்த பின்னரும் ஆலோசனைகளையும் மருத்துவ உதவிகளையும் வழங்கி வருகின்றன.

### கர்ப்பத்தின் முன்னான ஆலோசனைகள்

ஒவ்வொரு பெண்ணும் தாயாகுமுன் இயன்றளவு சுகதேகியான நிலையிலிருத்தல் வேண்டும். கருத்தரித்த முதலிரு கிழமைகளிலேயே சிசுவின் பிரதான அங்கங்கள் உருவாகிவிடுகின்றன. தாய் தான் கர்ப்பமுற்றிருப்பதனை உணரும்போது குழந்தையின் முக்கியமான பாகங்கள் விருத்தியடைந்து முடிந்திருக்கும். எனவே இக்கால கட்டத்தில் தாயின் போசணைக் குறைவு மற்றும் தாக்கங்கள் குழந்தையில் பிறப்புக்குறைபாடுகளை ஏற்படுத்திவிடும். எனவே போசணையுள்ள



ஐம்பத்தாறு வயதிலும் உடல், உள நலத்துடன் இருந்து குழந்தையைப் பெற்று சாதனை படைத்த பிரிட்டிஷ் பெண்மணி திருமதி கதலீன் கம்பல். 1987 இல் நிகழ்ந்த இந்தப் பிரசவம் குழந்தை பெற்றுக் கொண்ட வயோதிபப் பெண் என்ற வகையில் சாதனையாகின்றது.

உணவுகளை உள்ளெடுத்து உடலை ஆரோக்கியமான நிலையில் பேணுதல் தாயாகப் போகும் ஒவ்வொரு பெண்ணிற்கு அவசியமாகும். புகைத்தல், மதுஅருந்துதல், வேறு சமூகப் பிரச்சினைகள் என்பவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

ஒவ்வொரு கருத்தரிப்பிற்கு முன்னரும் சில பெண்கள் விசேட மருத்துவ ஆலோசனைகளைப் பெறவேண்டியிருக்கும். கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம், பிரசவச் சிக்கல் [illegible] குழந்தைப் பிரசவம் ஏற்கனவே நிகழ்ந்திருப்பின் மறு பிரசவத்தில் முக்கிய கவனங் கொள்ளல் வேண்டும். தாய்க்கோ அல்லது குடும்பத்திலோ நீரிழிவு, குருதி அமுக்கம், இருதய, சிறுநீரகப் பிரச்சனைகள், உளவியல் பிரச்சினைகள், தொய்வு, வலிப்பு என்பன இருக்குமிடத்தும் விசேட வைத்திய ஆலோசனைகளைப் பெறல் வேண்டும்.

### கர்ப்பகாலத்தில் வைத்திய கவனம்

கர்ப்பவதி தான் கர்ப்பமானதை அறிந்தவுடன் கூடிய விரைவில் வைத்திய நிலையத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். இது பிரசவத்திற்கான மருத்துவ வசதிகளை திட்டமிட்டு வழங்க வசதியளிக்கும். கருத்தரித்து குழந்தை பிறக்கும் வரையிலான 40 கிழமைகளில் முதல் 30 கிழமைகளுக்கு மாதமொருமுறை வைத்திய ஆலோசனை பெறவேண்டும். 30—36 கிழமைகளில் இரு கிழமைகளுக்கொரு முறையும் 36 ஆம் கிழமையிலிருந்து பிரசவம் வரை கிழமைக்கொரு முறையும் வைத்தியரை நாடல் வேண்டும். யாதாயினும் சிக்கல்கள் ஏற்படுமிடத்து அடிக்கடி வைத்திய ஆலோசனையைப் பெற்று வருதல் வேண்டும்.

முதலாவது வைத்திய ஆலோசனையை மகப்பேற்று நிபுணரிடம் பெற்ற பின்னர் தொடர்ந்த ஆலோசனைகளை பொது வைத்தியர் அல்லது பிரசவத் தாதிமாரிடம் பெற்று வரலாம். இது தூர இடங்களில் இருப்போரின் பிரயாண வசதியீனங்களைக் குறைக்கின்றது.

சி. கம்சானந்தி
(மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)

முதலாவது வைத்திய ஆலோசனையின்போது கர்ப்பவதியைப் பற்றிய பெயர், வயது, இடம் முதலான பொது விடயங்களும், கர்ப்பவதியின் ஆரோக்கிய நிலை, முந்திய பிரசவம் பற்றிய தகவல்கள், ஏனைய வைத்திய தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. குழந்தை பிறக்கப்போகும் திகதியும் எதிர்வு கூறப்படுகின்றது. நிறை, உயரம், முதலிய பொதுவான பரிசோதனைகளும், வயிற்றினுள் கருப்பை—குழந்தையின் அமைவு என்பனவும் சோதிக்கப்படுகின்றன. மற்றும் கர்ப்பவதியின் இரத்தம், சலம் என்பனவும் சோதிக்கப்படுகின்றனர். இதனைவிட கழி ஒலிக்கதிர் மூலம் (Scan) கர்ப்பகாலம், சிசுவின் ஆரோக்கியமான நிலை என்பன உறுதிப்படுத்தப்படுகின்றது.

தொடர்ந்து வரும் வைத்திய ஆலோசனைகளின் போது நிறை, இரத்தம், சலம், குருதியமுக்கம் என்பன சோதிக்கப்படும்.

உடல் நிறையானது முதல் 12 கிழமைகளில் அதிகளவில் கூடிக் காணப்படாது. 16-28 கிழமைகளில் 6கிலோ நிறையினால் உடல் நிறை அதிகரிக்கும். அடுத்து வரும் நான்கு — நான்கு கிழமைகளில் 2கிலோ நிறையினால் கூடிச்சென்று பிரசவத்தின் போது மொத்தமாக 12 கிலோ நிறையதிகரிப்பு காணப்படும். இதனை விடக் கூடிய நிறையதிகரிப்பு, குருதியமுக்கம் போன்ற நோய்களினால் அல்லது கூடியமாச்சத்துணவை உள்ளெடுப்பதனால் ஏற்படுகின்றது.

30-36 கிழமைகளில் குருதியின் ஈமோகுளோபினின் அளவு, குருதியின் சீனிச்சத்தினளவு ஆகியவை அளக்கப்படுகின்றன.

கருப்பையினுள் வளரும் குழந்தையின் வளர்ச்சி, துடிப்பு, ஆரோக்கிய நிலை என்பனவும் வைத்திய ஆலோசனையினால் உறுதிப்படுத்தப்படுகின்றன.

### கர்ப்ப காலத்திலான ஆலோசனைகள்

பிரசவம்பற்றிய—குழந்தை வளர்த்தல் பற்றிய—விஷேட வழிகாட்டல்களை தாய், தந்தை இருபாலாருக்கும் வழங்குவதன் மூலம் முக்கிய விடயங்களை கவனத்திற் கொள்ளச் செய்யலாம்.



சத்துள்ள உணவுகளை உள்ளெடுத்தல் வேண்டும். கடுமையான வேலைகள் செய்வதனைத் தவிர்த்தல் வேண்டும். இல்லையேல் குறைப்பிரவசம் அல்லது பிறக்கும்போது குழந்தை இறக்க நேரிடலாம். வழமையான உணவில் மீன், முட்டை, பால், இறைச்சி ஆகிய புரத உணவு வகைகளைக் கூட்டி மாப்பொருள் உணவுகளைக் குறைத்தல் வேண்டும். இரும்புச்சத்து, கல்சியம், பொசுபரசு ஆகியவையுள்ள பால், இறைச்சி, பச்சைக்காய்கறிவகை, மீன், முட்டை என்பனவற்றை உள்ளெடுத்தல் வேண்டும்.

கர்ப்பவதி நாளாந்த சாதாரண வேலைகளைச் செய்யலாம். ஆயின் போதிய நித்திரையும் அவசியம். குழந்தைக்குரிய குருதிச் சுற்றோட்டம் நன்கு தொழிற்பட படுக்கையில் நீண்ட நேரம் ஆறுதலாக இருத்தல் வேண்டும். நித்திரையின்மை ஏற்படின் தகுந்த மாத்திரையை வைத்திய ஆலோசனைப்படி பெறுதல் வேண்டும்.

கருச்சிதைவு, இரத்தப் போக்கு போன்ற அசாதாரண நிலைமைகளில்லாதவிடத்து கர்ப்ப காலத்திலான பாலுறவு தீமை பயப்பதில்லை.

கர்ப்ப காலத்தின் போதே பிரசவத்திற்கும் அதன் பின் குழந்தைக்குப் பாலூட்டுதலுக்கும் தாய் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பிரசவத்தில் பங்கெடுக்கும் தசைகளுக்கு தளர்ச்சிப் பயிற்சி கொடுப்பதன் மூலம் பிரசவத்தை இலகுவாக்கலாம்.

கர்ப்ப காலத்தில் 6 – 12 கிழமைகளில் அதிகாலையில் வயிற்றுப் பிரட்டல், வாந்தி என்பன காணப்படும். இது சாதாரணமான கர்ப்ப அறிகுறியாகும். 14 ஆம் கிழமையின் பின் இது மறைந்துவிடும். தொடர்ந்திருப்பின் வைத்திய உதவியை நாடல் வேண்டும்.

புகைத்தல், மது அருந்துதல் கர்ப்ப காலத்தில் தவிர்க்கப்படல் வேண்டும். மாத்திரைகளை வைத்திய ஆலோசனைப்படியே எடுத்தல் வேண்டும்.

குழந்தை பிறந்த பின்னரும் தாய் - சேய் நலன் உறுதிப்படுத்தப்படும் வரை வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும்.

✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடியுங்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| னா | ளி | ன் | லி | க | ம் |
| க | றா | ய் | சி | ப | கு |
| யி | ஆ | து | மை | டி | பு |
| ங் | மா | த் | கி | வா | க |
| ர | ம் | தை | ல் | மா | கா |
| றி | பு | ன் | நா | டு | ந் |

மேலேயுள்ள அட்டவணையில் 36 எழுத்துக்கள் உள்ளன. இந்த 36 எழுத்துக்களையும் பயன்படுத்தி ஏழு மிருகங்களினது பெயர்களையும், ஏழு பறவைகளினது பெயர்களையும் உருவாக்குங்கள் பார்க்கலாம்.

தெ. வத்சலா
(ஆண்டு 9, புலோலி மெ. மி. த. கல்லூரி)
விடை XI ஆம் பக்கத்தில்)

# பட்டம்

சிறகில்லாத பறவை வானில்
சிங்கார மாய்ப் பறக்குது
குறுகுறென்று காற்றடிக்க
கூவிக் கொண்டு பறக்குது

கையும் காலும் இல்லாமலே
கரகங் கூட ஆடுது
கையை தட்டி நாம்குதிக்க
கண்ணில் மறைந்து போகுது

வாலை வீசி வேகமாக
வானத் திலே தாவுது
நூலை இங்கே பிடித்திழுக்க
நொடியில் கீழே இறங்குது.

ம. அச்சுதன்
(ஏழாலை மேற்கு)

# இப்படி நடந்திடு!

ஊக்கமுடன் கற்றிடு
உயர்ந்த வேலை தேடிடு
பாட்டி சொல்லு கேட்டிடு
பாத்திரம் அறிந்து நடந்திடு

விட்டுக் கொடுத்து வாழ்ந்திடு
வீரமுடன் இருந்திடு
கற்றுக் கொடுக்கும் ஆசிரியரை
கடவுள் என்று போற்றிடு

கெட்ட நட்பை விட்டு விட்டு
கேண்மை நட்பை பெற்றிடு
உற்ற நண்பன் என்றாலே
உயிரே கொடுக்க முனைந்திடு

ஒழுக்கமுடன் வாழ்ந்திடு
ஒன்றே குலம் என்று ஏத்திடு
சண்டை சாதிப் பிரச்சினைகளை
ஒழித்தே வாழ்ந்து காட்டிடு

வி. உதேஸ்
(யா / நாவற்குழி மகா வித்தியாலயம்)

# விடுகதைகள்

1. ஆனை படுக்க நிழலுண்டு; மிளகு சுருட்ட இடமில்லை. அது என்ன?
2. அடுக்கடுக்காய் இருக்கும் ராணி. அவள் யார்?
3. பக்கம் எல்லாம் பட்டையுண்டு; மரமுமல்ல. பெயர்த்தெடுத்தால் முத்துண்டு; சிப்பியல்ல. அது என்ன?
4. நன்னுவார்; தின்னமாட்டார். அவர் யார்?
5. ஆயிரம் தச்சர் கூடி அமைத்த ஒரு மண்டபம். ஒருவன் கண்பட்டு உடைந்தது. அந்த மண்டபம் எது?

செல்வரத்தினம் பிரசாந்த்
(ஆண்டு 7, பரியோவான் கல்லூரி)

## விடை

1. கள்ளி. 2. ரோஜா. 3. சோளம். 4. பாக்குவெட்டி. 5. தேன்கூடு.

# உங்களால் இயலுமா?


கீழே வரும் தகவல்களை வைத்துக் கொண்டு ஒவ்வொரு குறிப்பிலும் குறிக்கப்படும் சொல்லைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. பொருளைக் குறிக்கும் நான்கு எழுத்துச் சொல் இது. முதல் இரண்டு எழுத்தும் தேவாரம் இசைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை. இரண்டாவது எழுத்தை நீக்கினால் திரையில் பார்ப்பது வந்து விடும். பொருளைக் குறிக்கும் அச்சொல் எது?
2. மாணவர்கள் செல்லும் இடம். நான்கு எழுத்தால் ஆனது. நடு இரண்டு எழுத்தும் நீக்கினால் மணம் மிகுந்த இடம் வரும். கடைசி இரு எழுத்தும் வீதியைக் குறிக்கும். முதலெழுத்துத் தனியாக கவிதையைக் குறிக்கும். மாணவர் செல்லும் அந்த இடம் யாது?
3. அரசுக்கும் அரசனுக்கும் முக்கியமான இவர் நாலெழுத்து பெயரைக் கொண்டவர். கடைசி எழுத்தை நீக்கிவிட்டால் குரங்காவார். நடு இரண்டு எழுத்தும் நீங்க 'சா' என்றாகும். கடைசி இரண்டு எழுத்தும் சேர்ந்து விளக்கு ஏற்ற உதவும். முதலெழுத்தும் மூன்றாம் எழுத்தும் சேர்ந்து சந்திரனாகும். அரசுக்கு முக்கியமான அந்த நபர் யார்?
4. தலைமுறை, தலைமுறையாய் வருவது இந்த நாலெழுத்துச் சொல்லில் அடங்கியுள்ளது. முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர மறைவில் திட்டுவது வரும். மூன்றாம் எழுத்து அகல, விதிகள் இணையும் இடம் உருவாகும். தலைமுறையாய் வரும் நாலெழுத்துச் சொல் எது?
5. துன்பத்தைக் குறிக்கும் நாலெழுத்துச் சொல் இது. முதலெழுத்து நீங்க 'இடம்' என்பதற்கு எதிராகும். மூன்றாம் எழுத்து நீங்க வீண் என்று பொருள்படும். துன்பத்தைக் குறிக்கும் அந்தச் சொல் யாது?

க. சுந்தரேஸ்வரன்
(ஆண்டு 10, ஹாட்லிக் கல்லூரி)
(விடை XI ஆம் பக்கத்தில்)

# காற்றாய்ப் பறக்கும் குதிரை

பிராணிகள் உலகம்



குதிரையும், கழுதையும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. ஆனால், கழுதையை விடக் குதிரை பெரியது; மிக்க அழகானது.

குதிரையின் குளம்புகள் பிளவுபடாத ஒற்றைக் குளம்புகளாகும். அதன் வாலில் அடர்ந்து நீண்ட மயிர் அழகாகத் தொங்கும். குதிரையின் கழுத்தில் பிடரிமயிர் உண்டு.

குதிரைக்கு கொம்புகள் இல்லை. அதன் காதுகள் எப்பொழுதும் நிமிர்ந்தே இருக்கும். அதன் முகம் நீண்டிருக்கும். குதிரைக்கு மேல் வாயிலும் கீழ்வாயிலும் பற்கள் உண்டு.

வெள்ளை, கருப்பு, மண் நிறங்களில் குதிரைகள் உண்டு. வண்டிக் குதிரை, ஏறுகுதிரை, பந்தயக் குதிரை எனப் பல வகைகளும் உண்டு.

சில நாடுகளில் குதிரைகளைக் கட்டி ஏர் உழுகின்றனர். ஆசிய நாடுகளில் வண்டி இழுக்கவும், ஏறிச் செல்லவும், பந்தயங்களில் ஓடவும், வேட்டைக்கு ஏறிச் செல்லவும் குதிரைகள் பயன்படுகின்றன. குதிரை காற்றைக் கிழித்துக்கொண்டு மிக விரைவாக ஓடும். குதிரையேற்றம் நல்ல உடற் பயிற்சியாகும்.

முன்னைய காலத்தின் நால்வகைப் படைகளில் குதிரைப்படையும் ஒன்று. ஒவ்வொரு வீரனுக்கும் அவன் குதிரை உயிர்த்தோழனைப் போன்றது. இது நன்றியறிதலுள்ளது. வளர்ப்போனிடம் அன்பாக இருக்கும்.

இலங்கையில் போக்குவரத்துப் பொலிஸார் குதிரையில் சென்று பணிபுரியும் வகையில் குதிரைப் படை அணி ஒன்றை வைத்துள்ளனர்.


அரேபியாவில் குதிரைகள் அதிகம். அரேபியக் குதிரைகள் முதல்தரமானவை; பெரிதாயும் அழகாகவும் விளங்குபவை.

குதிரைகள் புல் தின்னும்; கொள் என்றால் அதற்கு மிகவும் விருப்பம். கடிவாளத்தைக் கண்டால் வெறுப்படையும். குதிரையைச் சேணம் முதலியவற்றால் அழகுபடுத்துவர்.

கு[illegible] காலால் உதைக்கும்; [illegible] பெற்ற குதிரை வேடிக்கை செய்யும்; நாட்டியமும் ஆடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை விளையாட்டு





சிறுவர், சிறுமியரே;... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபது வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

# உங்களால் முடியுமா?




குறுகலான ஒரு படகுக் கால்வாயில் இவ்வாறு நான்கு படகுகள் சந்தித்துக் கொண்டன. இரண்டு ஒரு திசையிலும், மற்றைய இரண்டு எதிர்த்திசையிலும் போக வேண்டும். கால்வாய் மிகவும் குறுகலாக இருப்பதால் ஒன்றைத் தாண்டிக்கொண்டு ஒன்று செல்வது சாத்தியமில்லை. இருந்தாலும் பொறியியலாளர்கள் ஒரேயொரு படகு ஒதுங்குவதற்கான இடத்தைப் பக்கத்தில் அமைத்திருக்கிறார்கள். இந்த இடத்தைப் பயன்படுத்திக்கொண்டு படகுகள் எதிரில் வருபவற்றைக் கடந்து செல்ல வேண்டும். இது ஆறு நகர்வுகளில் முடியும். (கவனிக்க:- படகுகள் முன்னும் பின்னுமாய் போகக் கூடியன.) எங்கே உங்களால் முடியுமா? பாருங்கள்.

கவிதா சிவராசா
(ஆண்டு 9, சாவகச்சேரி இந்துக்கல்லூரி)
(விடை XI ஆம் பக்கத்தில்)




# பூனைக் குட்டியார்

மியாவ் மியாவ் பாடுகின்ற
பூனைக்குட்டியார்
மீசை ஆட்டிப் பாடுகின்ற
பூனைக்குட்டியார்

வாலை ஆட்டிக் காலில் முட்டும்
பூனைக்குட்டியார்
வந்து பாயும் எலியைப் பிடிக்கும்
பூனைக்குட்டியார்

பாலை வைத்தால் கண்ணைமூடிப்
பருகும் பூனையார்
காலை ஆட்டத் துள்ளிப்பாயும்
பூனைக்குட்டியார்

கு. ஜெயதாரிணி
(ஓடக்கரை, பருத்தித்துறை.)

# நல்லவை

வீட்டுக்கு நல்லது வேம்பு — அதை
விரும்பி வையுங்கள் ஓங்கும்
நாட்டுக்கு நல்லது அன்பு — அதை
நாடியே குழந்தைகள் ஏங்கும்
பாட்டுக்கு நல்லது பக்தி — அதைப்
பற்றிட நிம்மதி தேங்கும்
போட்டிக்கு நல்லது நீதி — அதைப்
போற்றிடுவோம் புவி எங்கும்.

— செல்வி சி. வலஜி —
(ஆண்டு 5, உடுவில் அ. மி. த. க. பாடசாலை)
உடுவில்.

# அப்புக்குட்டியின் மகன் தருமுவும் மைக்கல் ஜக்சனும்...

சில நாள்களுக்கு முன்பு அந்த வீதியால் நான் போன பொழுது, எனக்குக் கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முன்பு நான் அந்த வீதியால் பாடசாலை மாணவனாகச் சென்ற பொழுது கண்ட காட்சிகள் ஞாபகத்திற்கு வந்தன.

எண்ணெயையே கண்டிராத பரட்டை அடித்த தலைமயிர். வெற்றிலைக் காவியேறிய பற்கள். இரண்டு மூன்று கிழமைகளாகத் தோய்க்கப்படாத உடுப்போடு அந்த றெயில் தண்டவாளத்தில் அப்புக்குட்டி குந்திக் கொண்டிருந்து கொண்டு,—

''டேய் தறுமு... தறுமு... எடியே லெட்சி...எங்கையடி உவன் தறுமன்போனவன்...''

''அவன் பள்ளிக்கூடத்துக்குப்போக வெளிக்கிடுறான்... இண்டைக்கு இஞ்சிப்பெற்றர் வாறாராம்...''

''...என்னடி...இந்த அப்புக்குட்டியனுக்குத் தெரியாத இஞ்சிப்பெற்றரோடி... எனக்குத் தெரியாத பள்ளிக்கூடமோடி... அவளின்ரை மோன் படிச்சுக் கிழிச்சு இஞ்சை கவுண்மேந்து ஏச்சண்டராய் எல்லே வரப்போறார்... அவனை வரச் சொல்லடி... இந்த மாடுகளை அவிட்டுக் கொண்டு குளத்தடியிலை கட்டச் சொல்லடி...''

''இண்டைக்கு நேரத்துக்குப் போகாட்டி, டாப்புச் சிஸ்ரர் ஏசுவாராம்...''

''நீ உதிலை குந்திப்பிடிச்சுக் கொண்டிருக்கிற நேரம் உந்த மாடுகளை ஒவ்வொண்டாய் அவிட்டுக் கொண்டுபோய் குளத்தங் கரையிலை கட்டலாமே...''

''...எடியேய்...நான்தானே இந்தக் கொடிகாமம் ராச்சியத்திலையிருந்து உந்த மாடுகளை வாங்கி அவிட்டுச்சாச்சுக்கொண்டு நடைநடையாக உந்த உச்சாரி வெய்யிலுக்காலை வந்திருக்கிறன்... அவனாலை உதுகளை அவிட்டுக் கட்டேலாதோடி...''

''...நீ விடியக்காத்தாலை வாயுக்கை கசிப்பை ஊத்திப் போட்டு வந்து அவன் பள்ளிக்கூடத்துக்குப் போறவனோடை பாய்ஞ்சு கொண்டிருக்கிறாய்...''

''எடியே...எடியே அவளின்ரை கதையைப் பார். உவளின்ரை உழைப்பிலை தான் நான் வாயுக்கை ஊத்தினனான்...வந்தனெண்டால் தெரியுமே... மிதிமிதியெண்டு மிதிச்சுப் போடுவன்...ஏதோ மோனை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி இஞ்சை கிழிச்சு விடப் போறா...அப்ப நீ கொண்டுபோய் கட்டனடி வே...எனக்கேன் வருகுது விடியக் காத்தாலை...''

''ஓ...நீ சும்மா, இரு நான் கொண்டுபோய் கட்டுவன் தானே...அந்தப் பொடிக்கு ஆன உடுப்போ சிலேற்றுப் புத்தகமோ ஒண்டும் கிடையாது...இந்தக் கறுமியின்ரை வயிற்றிலை வந்து பிறந்துது...''

''அவளுக்கு எப்பன் எண்ட உடனை முட்டைக் கண்ணீர் மாத்திரம் வந்திடும்...'' என்று சொல்லிக் கொண்டு வாயிற்குள் வைத்திருந்த வெற்றிலையைத் துப்பி விட்டு தண்டவாளத்திலிருந்து எழுந்து வீட்டுப் பக்கமாக நடந்தான் அப்புக்குட்டி.

அந்த நாளில் அலுப்பாந்திக்குச் சாமான் ஏற்றிக் கொண்டு போகும் றெயிலுக்காகத்தான் அந்தத் தண்டவாளம் போடப்பட்டிருந்தது. சாமான்களை ஏற்றிக்கொண்டு நாலைந்து பெட்டிகளைத் தொடுத்துக் கொண்டு அந்தத் தண்டவாளத்தில் றெயில் ஓடியது எனக்கு இப்பொழுதும் ஞாபகம். நானும் எனது நண்பன் நீக்கிலசும் சோடாமூடிகளைத் தண்டவாளத்தில் வைத்துவிட்டு றெயில் போகுமட்டும் காத்திருந்து றெயில் போனதும், சப்பையான சோடா மூடிக்கு ஓட்டை துளைச்சு, நூலைப்போட்டு கையில் வைத்து ''கிர் கிர்'' என்று ஆட்டுவோம்.

நான் அந்தத் தண்டவாளத்துச் சிலிப்பர் கட்டையில் பாய்ந்து பாய்ந்து ஓடுவேன். சிலவேளைகளில் பந்தயம் பிடித்து, நானும் நண்பன் நீக்கிலாசும் ஒன்றைவிட்டொரு சிலிப்பர் கட்டையைப் பாய்வோம். அந்தச் சிலிப்பர் கட்டைகளிலெல்லாம் மலம் கழிக்கப்பட்டிருக்கும். இடப்பக்கத்துப் பள்ளத்திலிருந்து நாற்றம்வரும். நாம் மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடுவோம். தண்டவாளத்திற்கப்பாலுள்ள பள்ளத்தில் சிறுசிறு மண்குடிசைகள் தெரியும். அந்தக் குடிசைகளைச் சுற்றி குளத்து நீர் நிற்கும். அந்தக் குளத்தங்கரைச் சேற்றில் புரண்டு உருண்டு சேற்றை உறிஞ்சிக் குடிக்கும் பன்றிகளும் பன்றிக்குட்டிகளும் கூட்டம் கூட்டமாய் அந்தச் சிறிய குடிசைகளைச் சுற்றித்திரியும். இவற்றால் ஏற்படும் துர்நாற்றம் அவர்களுக்குத் தினமும் பழகிப் போன ஒன்று. அந்தப்பள்ளக் காணியில் இருப்பவர்கள் எல்லோரும் அனேகமாக அப்புக்குட்டியின் உறவினர்களே.

அப்புக்குட்டியின் மகன் தர்மலிங்கம் என்னோடு தான் படித்தான். அவனை நாங்கள் தறுமு என்றுதான் கூப்பிடுவோம். அவனை நாங்கள் எங்கள் கூட்டத்தில் சேர்ப்பதில்லை. எந்தநேரமும் அவனுக்கு மூக்கால் சளி வழிந்து கொண்டிருக்கும். காற்சட்டைக்கு ஒழுங்காகப் பொத்தான் போடமாட்டான். காற்சட்டையை இழுத்துச் சுருக்கி, வரிந்து கட்டுவான். அவனது காற்சட்டை எப்ப பரார்த்தாலும் 'பாணி'யாகவே இருக்கும். எப்பவாகிலும் இருந்து விட்டுத்தான் தோய்த்த காற்சட்டையும் சேட்டும் போடுவான். தறுமு படிப்பிலும் அவ்வளவு கெட்டிக்காரன் என்று சொல்ல முடியாது. பாடசாலைக்கருகில் இருந்தும், மணி அடித்து செபம் மூடிந்தபின்பே ஓடிஓடி வருவான். தலைக்கு எண்ணை தடவி ஒழுங்காகச் சீவ மாட்டான்.

★ ★ ★

நான் அன்று அவ்வழியால் போன பொழுது வழி தவறி வேறொரு வீதியால் நடந்து கொண்டிருக்கின்றேனோ என்ற உணர்வு எனக்குத் தலைப்பட்டது. தறுமுவின் வீட்டிற்குக் கிட்ட வந்ததும் அந்தப் பள்ளத்திற்குள் பல அன்ரனாக்கள் தெரிந்தன. முன்பு தறுமுவின் தகப்பனார் அப்புக்குட்டி குந்தியிருக்கும் தண்டவாளம் இருந்த இடத்தில் ஒரு சனசமூக நிலையம் இருந்தது. அந்த சனசமூகநிலையத்திற்கு முன்னால் ஒருவர் நின்று கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தார். அவர் கழுத்தில் மொத்தமான தங்கச் சங்கிலியொன்று போட்டிருந்தார். அவர் அணிந்திருந்த ரீசேட்டில் மைக்கல் ஜக்சனின் படம் போடப்பட்டு அதில் 'மைக்கல் ஜக்சன்' என எழுதப்பட்டிருந்தது. எனக்கு அவரை பார்க்க தறுமுவின் முகச்சாயல் தெரிந்தது. அவர் உடனேயே, ''ஐயா நான் தான் தறுமு, உங்களோடை மூண்டாம் வகுப்புப் படிச்சனே...'' என்றார்.

''ஓ... ஞாபகம் இருக்கு...'' என்றேன் நான்.

''என்னுடைய அப்புதான் இந்தத் தண்டவாளத்திலையிருந்து சத்தம் போட்டுக் கொண்டிருப்பாரே...''

''ஓ... அப்புக்குட்டியெண்டு சொல்லுவினம்...''

''...ஓமய்யா, அவர் செத்து பதினைஞ்சு வருடங்களாய் போச்சு... அம்மாவும் அப்பு செத்த கையோடை அடுத்தடுத்த வருஷத்திலை போயிட்டா... அப்புவின்ரை ஞாபகத்திற்குத் தான் உந்த சன சமூக நிலையத்தையும் அம்மாவின்ரை ஞாபகத்திற்கு அந்த இராப்பள்ளிக் கூடத்தையும் கட்டிக் குடுத்திருக்கிறன்... வாருங்கோ ஐயா வீட்டுக்கு... அருகிலை தான் இருக்கு...''

அந்த அன்பான அழைப்பை ஏற்காமல் விட என்னால் முடியவில்லை. அவரோடு வீட்டிற்குச் சென்றேன். அது ஒரு மேல் வீடு. நான் மேல் வீட்டுப்படிகளில் ஏறி அவரோடு போகும் பொழுது அவர் பூசியிருந்த ஒடிக்கொலோனின் வாசம் எதிர் காற்றில் ''கமகம'' என்று அடித்தது.

அவர் தனது அறை வாசலில் தனது தகப்பனார் அப்புக்குட்டியின் படத்தைத் தூக்கியிருந்தார். அதற்குத் தினமும் பூவும் வைத்து சந்தனக்குச்சியும் கொளுத்துவதற்கான சான்றுகள் தெரிந்தன. அவர் என்னை ஒரு செற்றிக் கதிரையில் அமரும்படி சொன்னார். அது மிகவும் விலையுயர்ந்த செற்றியாகத் தெரிந்தது. அவர் எனக்கருகில்நின்றுகொண்டே பேசினார்.

(X ஆம் பக்கம் பார்க்க)

**- துரை. சுப்பிரமணியன் -**

**சஞ்சீவி சிறுகதைகள்**

# அர்த்தமுள்ள அர்த்தங்கள்...

சிவசுந்தரத்துக்கு இன்று மீன் வியாபாரம் பரவாயில்லை. போட்ட முதலின் அளவுக்கு சமமாய் இலாபம் கிடைத்தது. காசை எண்ணிப் பார்த்துக் கொண்டான். மனம் சந்தோஷமாக இருந்தது. வீட்டுக்குத் தேவையான சாமான்கள் பிள்ளைகளுக்கு பிஸ்கட், பால்மா எல்லாம் வாங்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். மீன் பெட்டியை சைக்கிளில் கட்டிக் கொண்டு புறப்பட ஆயத்தமானான்.

வன்னிக்கு இடம் பெயர்ந்து போய் பலவித கஷ்ரங்கள் பட்டு, ஊருக்குத் திரும்பி வந்தபோது, வீடு இருந்த இடத்தில் ஒரு மேடுதான் இருந்தது. என்ன செய்வது அவனுக்கு மட்டுமா? அப்படி இன்னும் எத்தனை பேருக்கு வீடில்லை; சொத்துக்கள் இல்லை. இதற்காக கவலைப் பட்டு என்ன பிரயோசனம்? கவலைப்பட்டால் திரும்பி வரவா போகின்றன போனவை?

சில நாள்கள் தங்குவதற்கு உறவினர் சிலர் வீடுகளில் இடம் கேட்டான். எல்லோரும் அது, இது என்று சொல்லி கையை விரிக்க கடைசியில் மனைவி, இரண்டு பிள்ளைகள், ஒரு கைக் குழந்தையுடன் கோவில் மடத்தில் வந்து தங்கினான்.

சே... என்ன மனிதர்கள்...? அந்தமித்து வந்தவனுக்கு இடம் கொடாதவர்கள் வசதி இருந்தால் வளைய, வளைய வருவார்கள்... கொஞ்சம் நொந்துபோனால் எட்டி உதைப்பார்கள். உதவி செய்யும் எண்ணம் அறவேவராது. இதைச்சொல்லி என்ன பயன்? எனது விதி என நொந்து கொண்டான்.

சிவசுந்தரம் வன்னிக்கு போகுமுன் பெரிய தோட்டம் செய்தவன். அதனால் நிம்மதியாய் வாழ்ந்தவன். இங்கிருந்தவையை எல்லாம் விட்டு வன்னிக்குப் போன போது கஷ்ரங்கள் ஆரம்பித்தன. கொண்டுபோன காசெல்லாம் செலவழித்து நகையெல்லாம் விற்றுச் சாப்பிட்டாயிற்று. போதாக் குறைக்கு மலேரியா வேறு ஏழெட்டுத்தரம் வந்து தொல்லை கொடுத்தது. இதனால் வன்னியில் ஒரு தொழிலும் செய்ய முடியவில்லை.

சரி ஊருக்கு போய் தோட்டம் செய்யலாம் என்று வந்தால், தோட்டத்துக்கு நடுவால் பாதுகாப்பு அரண் போடப்பட்டிருந்தது. தோட்டப் பக்கம் போக முடியாது. போனால் கை, கால் இழக்க வேண்டி வரும். உறவினர் சிலரிடம் காணி கேட்டான். பிரயோசனம் இல்லை. தோட்டம் செய்வதற்கு வோட்டர் பம்மும் இல்லை. வீடு காணாமல் போன போது ''பம்மும்'' காணாமற் போய்விட்டது. கட்டிய இடத்தில் வீடு இல்லை. வைத்த இடத்தில் ''பம்'' இருக்குமா?

கோவில் அருகில் இருந்த காணி ஒன்றில் கொட்டில் போட்டுத் தங்கிக் கொண்டான். இனி தொழில் கூலிக்கு போகலாம் என்றால் நொந்த உடம்பு மலேரியா உடனே வரும். குடும்ப நிலமை மோசமாகியது. பிள்ளைகளுக்கு ஒரு நேரச் சாப்பாடு போடுவதே பெரும்பாடாக இருந்தது. உறவினர்களிடம் போயிரக்க சிவசுந்தரத்துக்கு மனம் வரவில்லை. போனாலும் அவர்கள் எடுத்து நீட்டப் போவதில்லை.

கையில் இருந்த கொஞ்சக் காசில் ஒரு பழம் சைக்கிள் வாங்கிக் கொண்டான். சாவகச்சேரி, பளைப் பக்கம் போய் தேங்காய் கட்டலாம் என்றால் உடம்பு ஏலாது என்றது. மனைவியும் தடை போட்டாள்.

''இனியும் சைக்கிள் ஓடினால் நானும் பிள்ளைகளும் நடுத் தெருவில் தான் நிக்க வேணும்''

அதுவும் சிவசுந்தரத்துக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

''[illegible] செய்யஇறைவா ஏன் என்னை இப்படிச் சோதிக்கின்றாய்?'' என மனதில் வேதனைப்பட்டான்.

மறுநாள் கறி ஏதும் வாங்கலாம் என்று சந்தைப் பக்கம் போனவன், மீனின் விலையைக் கேட்டு திடுக்கிட்டான். எப்படியும் வியாபாரிக்கு கிலோவிற்கு ஐம்பது ரூபாய்க்கு குறையாமல் கிடைக்கும்—என்பதை அவனால்திட்டவட்டமாக உணர முடிந்தது.

சிவசுந்தரத்துக்கு ஒரு பொறி தட்டியது. மீன்வியாபாரம் செய்தால் என்ன? அவன் வேறு எதையும் உடன் யோசிக்கவில்லை. மூன்று பிள்ளைகளினதும் மெலிந்த தோற்றமே மனதில் வந்தது. சாப்பிடவேண்டிய வயதில் அவர்கள் செத்துக் கொண்டல்லவா இருக்கின்றார்கள்.

அடுத்த நாள்கடைக்குட்டி மனோவைக் குளிப்பாட்டும் வாத்து வாளியைச் சைக்கிளில் கட்டிக் கொண்டு கரையூரை நோக்கி விரைந்தான். மனைவி எதுவும் கேட்கவில்லை. தன் கணவன் எதைச் செய்தாலும் சரியாகச் செய்வான் என்பதால் அவள் எதுவும் பேசவில்லை. மூன்றும் போட்ட முதலுக்கு நல்ல இலாபம் கிடைத்தது. வீட்டுச் சமான்கள், பிள்ளைகளுக்கு. பால்மா வாங்கி, அடுத்தநாளுக்கு முதலும் மிஞ்சியது. 'அன்று தான் சிவசுந்தரம் நிம்மதியாக காணப்பட்டான். நிம்மதியாக சாப்பிட்டான், நித்திரை கொண்டான். நாள்கள் நகர்ந்தன. சிவசுந்தரத்தின் வாழ்க்கை கடினமின்றி நகர்ந்தது.

★ ★

கோவில் மண்டபத்தில் மூன்று பேர் இருந்து ஊர் வம்பளந்து கொண்டிருந்தார்கள். ஒழுங்கான பென்சன். இரண்டு பிள்ளைகள் வெளிநாடு, ஊரில் காணி புலம் என்றால் ஊர் வம்பு தானே பொழுதுபோக்கு! இந்தப் பொழுதுபோக்காளர்கள் யார் யார் என்று பார்ப்போம். ஒருவர் பழைய வாத்தியார் சிங்காரமூர்த்தி, மற்றவர் பழைய விதானை செல்லக்கோன். அடுத்தவர் பரம்பரைப் பணக்காரர் அன்புத்துரை.

இவர்களின் வம்பளப்பின் நடுவில் சிவசுந்தரத்தைப் பற்றிய கதையும் வந்தது.

''இவன் சிவசுந்தரம் செய்பிற வேலையைப் பாருங்கோ. ...குலத்தில் பிறந்து குரங்காட்டம் ஆடுறான். ஒரு சாதி வெள்ளாளன் மீன் வியாபாரம் செய்யிறான் என்றால் எவ்வளவு மரியாதை கேடு...?''

''ஓம் பாரும் அன்புத்துரை எங்கடை ஊருக்குள் ஒரு கேடு கெட்டவனை இப்பத்தான் பார்க்கிறன்''— வாத்தியார்.

(X ஆம் பக்கம் பார்க்க)

**கோகுலராகவன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாளை முளைக்கும்...

### பழமை

பழையவர்கள் அலுத்துக் கொள்கிறார்கள். காலம் கெட்டுப்போச்சு என்கிறார்கள். தாத்தா பாட்டிகளுக்கு பேரப் — பூட்டப் பிள்ளைகளின் போக்கு அறவே பிடிக்கவில்லை. காலப்போக்கில் ஏற்படும் புரட்சியான மாற்றங்களை வயதானவர்களால் ஜீரணிக்க இயலவில்லை.

பெற்றவர்களோ, பேரன் — பேர்த்திகளோ பிள்ளைகளின் போக்குக் கண்டு திகைக்கிறார்கள்: கட்டுப்படுத்த முனைகிறார்கள். ஆனால் திமிறிக்கொண்டு எழும் பிள்ளைகளின் துடிப்பு அடங்குவதில்லை.

கோடு சிழித்து — அப்பால் நிறுத்திக் கேள்வி கேட்டு — தீர்ப்பளித்து — அடிகொடுத்து — தண்டிக்கும் பழைய பாணி இப்போது எடுபடாது; ஏற்கப்படாது.

### புதுமை

பிள்ளைகள் இன்று பெற்றவர்களுடன் நெருங்கி உரிமையுடன் நண்பர்கள் போலப் பழகும்பாணி நிறையவே வளர்ந்து வருகிறது. இந்த நிலையில் பிள்ளைகளுக்கு நாசூக்காகவே சரியான நெறிப்படுத்தலைத் தந்திரமாகச் செய்யவேண்டிய தேவை பெற்றோரிடம் எழுகிறது.

பிள்ளைகளை எப்படிக் கையாள வேண்டும் என்ற தந்திரம் — மந்திரம் — புரியாமல் பல பெற்றோர் திணறுகிறார்கள்; குட்டையைக் குழப்பிக் குடும்ப நிம்மதியைக் கெடுத்து விடுகிறார்கள்.

சூழ இருக்கும் உலகம் பொல்லாப்பு நிறைந்தது. அதைத் திருத்தி பிள்ளையைச் சரிக்கட்டி விடலாம் என நினைத்து அடுத்த வீட்டோடு வம்புக்குப் போனால் பழிதான் எஞ்சும்.

அன்று துலாமிதித்து, தோட்ட வேலை முடித்து, மணி கேட்கவும் வீட்டுக்கு ஓடோடி வந்து புத்தகத்தை எடுத்துக் கொண்டுதான் பாடசாலைக்கு ஓடவேண்டி இருந்தது. இன்று பாடசாலையால் வரும் பிள்ளைக்கு பெற்றோரே கால் பிடித்து விடவேண்டிய நிலைமை. இது காலத்தின் மாறுதல். இதை ஏற்காமல் தவிர்க்க முடியாது.

இடத்துக்கும், வசதிக்கும் சூழலுக்கும் ஏற்ப பலசோலிகள் இன்று பிள்ளைகளை வம்புக்கு இழுக்கின்றன. எந்தப்பக்கம் மனதை அலைபாய விடலாம் எனத் தெரியாது தவிக்கிறார்கள் அவர்கள்.

பாடசாலையும் ரியூஷனும் பாடச்சுமைகளும் ஒரு பக்கம். காற்றடிக்கவே நேரமில்லாத சைக்கிளோட்டம். பாடசாலைக்கு முன்னர் காலை ஆறு மணிக்கே ஒரு வகுப்புக்கு போய்விடவேண்டும். இப்படி ஓடத்தொடங்கினால வீடுவந்து ஓய இருட்டிவிடும்.

கல்வி என்றால் வெறும் புத்தகப்படிப்பு என்ற நிலைகூட மாறி ஒரே 'நோட்ஸ்' எடுப்பும் — படிப்பும் என்ற நிலைமை, அரசியல்கட்சிகள் போல் பல ரியூட்டரிகள். ஒரே பாடத்துக்கு பலரிடம் ஓடவேண்டிய தேவை. ஆரம்பக் கல்விக்கே ரியூஷன் தேவை என்கிற நிலமை.

### பிள்ளைகளின் பிரச்சினைகள்

இரவு களைத்து வீடுவரும் பிள்ளையை படி என்பதா படு என்பதா? அவ்வேளை கண் விழிக்கும் தொலைக்காட்சித்திரைகள் பல இடங்களில் கவனத்தைக் கவரும். பிள்ளைகளின் பிரச்சினைகளை ஆழமாக அறிய, அணு அணுவாக அணுகப் பெற்றோர்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. பிள்ளைகளின் மனம் உணர்ந்து புரிந்துணர்வுடன் செயற்படாதபோது அவர்களின் விரக்தி வளர்வது தவிர்க்க முடியாததாகிறது.

பிள்ளைகளின் போக்கில் மாறுதல்களோ, தவறுகளோ இருப்பின் அவற்றை அவசரயுகத்தில் வாழும் பெற்றோர்களால் சுலபமாக உணர முடிவதில்லை, வேலைக்குப் போகும் கணவனும் மனைவியும் ஆலாய்ப் பறப்பதில் ஒருவரை ஒருவர் புரியவும் பழககவும் அவகாசம் கிட்டாத போது பிள்ளைகளின் நிலைமை என்னாகும்?

பிள்ளைகளின் எதிர்பார்ப்பு பொதுவாக எப்படி இருக்கும்? எதற்கு விட்டுக் கொடுக்கலாம்? எதைத் தந்திரமாக வெட்டி விடலாம்? — என்றெல்லாம்பெற்றோர் கணிக்கத் தவறக்கூடாது. இதற்கு அவகாசம் அவர்களுக்கு கிட்டுமா என்பதே முதல் கேள்வி.

அடுத்து பிள்ளை வளருகின்ற சூழல் எப்படிப்பட்டது? அதை மாற்ற முடியுமா? முடியாத போது ஒடும் புளியம்பழமும் போல சூழலோடு உறவு வைக்க பிள்ளைக்குப் பக்குவம் போதுமா? அதை ஊட்ட வேண்டுமா? — என்றெல்லாம் பெற்றவர்கள் ஆழச் சிந்திக்க வேண்டிய காலம் இது.

சிந்தித்தால் மட்டும் போதுமா? சிந்தனை செயல் வடிவம் பெறல் வேண்டும். செயல் திட்டம் உருப்படியான பலனைத்தரல் வேண்டும். ஓரேவிதமான அணுகுமுறை எல்லா இடங்களிலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயனைத்தராது.

### அறிவுடைமை

சூழலில் இன்று நல்லதும் கெட்டதுமாக அசுர வேகத்தில் நடைபெறும் மாற்றங்கள் பற்றிப் பெரியவர்கள் அறியமுன்னரே பிள்ளைகள் அவற்றைச் சந்திக்கிறார்கள். அத்தகைய நவீன யுகத்தில் பிள்ளைகளின் அனுபவங்களுக்கும் கேள்விகளுக்கும் பெற்றவர்களால் துரிதமாகப் பதில்தர இயல்வதில்லை,

பிள்ளைகளின் அறிவு மட்டம் ஒருபடி மேலேயும் முன்னோக்கியும் செல்லத் துடிக்கிறது. அவர்களைக் கேட்டே பல நுட்பமான விடயங்களை பெரியவர்கள் அறியும் காலமிது!

இந்த நிலமையில் தவறு செய்யும் பிள்ளைகளை எப்படித் திருத்தலாம்? எப்படிக் கண்காணிக்கலாம்? எப்படி அணுகலாம்?—என்பதே கேள்வி.

பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் திடீரென ஒரு நாளில் தடம்புரண்டு விடுவதில்லை. தினம் தினம் சிறுகச்சிறுக அவர்கள் செய்யும் தவறுகளைத் தூக்கிப் பிடித்து சீறிச்சினக்கும் பெற்றோர் அவர்களின் விரக்தியையே சம்பாதிக்கிறார்கள்.

இவ்வாறான போக்குகளையிட்டு பெரிதுபடுத்தாமல் அலட்சியப்படுத்துவது காலப்போக்கில் பிள்ளைகளைப் பிழையான பாதைக்கே இட்டுச் செல்லும். எனவே இவ்வாறான நாளாந்தப் பிரச்சினைகளைக் கையாள்வதில் மிகுந்த மதிநுட்பம் தேவைப்படுகிறது.

பெற்றோர்தமக்குத்தான் பிரச்சினைகளும், பொறுப்புக்களும் இருப்பதாக நினைக்கிறார்கள். குழந்தைகளுக்கோ, பிள்ளைகளுக்கோ தேவையான எல்லாம் தாமே தருவதாகவும் கணித்து விடுகிறார்கள். எனவே இத்தவறான கணிப்பு — அவர்களை பிள்ளைகளின் பிரச்சினைகளைப் பற்றிக் கவனிக்க இடம் கொடுக்கவில்லை.

என்னதான் அறிவாகவும் சுழியாகவும் இருந்தாலும் எடுத்த எடுப்பில் பிள்ளைகளிடம் முதிர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. அவர்களின் சிறுபிள்ளைத் தனத்தை ஒரு மட்டம்வரை சுதந்திரமாகவே அனுமதிக்கத்தான் வேண்டும்.

### சூழல்

தனது பிள்ளை நூறு வீதம் திருத்தமாக — எத்தவறும் இழைக்காமல் — எதிலும் சாயாமல் வளர வேண்டும் என எதிர்பார்க்கும் பெற்றோர் அதற்காகப் போடும் சட்ட திட்டங்களைச்சமாளிக்க பிஞ்சு மனங்கள் போராடவேண்டியிருக்கும். அது தேவையற்ற மனச்சுமையைப் பிள்ளையிடம் வளர்க்கும்; விரக்தி வளரத் தொடங்கும்.

பொல்லாத சூழலைத் திருத்த முடியாது. சூழலில் இருந்து பிரித்து கூண்டில் வைத்துப் பிள்ளையை வளர்க்கவும் முடியாது; பிள்ளைகெட்டுப் போவதை அனுமதிக்கவும் முடியாது. இப்படியான மனப்போராட்டங்களால் அதிகம் கற்பனை பண்ணி பிள்ளையின் மனநிலையைச் சிதறடிக்கவும் கூடாது.

பெற்றோரின் கெடுபிடி அழுத்தத்திற்குப் பயந்து பிள்ளை வளரக்கூடாது. அது ஆரோக்கியமான சூழலைத் தராது. எனவே எடுத்ததுக்கெல்லாம் 'வள்சுள்' ளென்று பிள்ளைமீது பாயக்கூடாது. இதமாகக் குறைகளை விளங்கச்சொல்லலாம்.

### வெற்றி-தோல்வி

அடுத்த பிள்ளையோடு ஒப்பிட்டுக் குறைகளைச் சுட்டிக்காட்டி மனதை நோகடிக்கக்கூடாது. முயற்சிஎடுக்கும் தேவையை விளங்கவைத்தல் அவசியம். முடிவு வெற்றியோ, தோல்வியோ இரண்டையும் ஒன்றாகவே ஏற்கும் மனப்பக்குவத்தை வளர்க்க வேண்டும்.

தோல்வி கண்ட பிள்ளை மீது துள்ளி விழுந்து குறைபாடக்கூடாது. தட்டிக் கொடுத்து, காரணங்களைத் தேடி நிவர்த்தி செய்து, அடுத்த முறை வெற்றிக்கான வழிவகைகளை இதமாகச் சொல்லிக் கொள்ளலாம்; மனம் தெம்பாக இருக்கும்.

தோல்வியை நையாண்டி பண்ணி உணரவைக்க முயலக் கூடாது. பிள்ளையின் நண்பர்களோ சகோதரர்களோ கூட பகிடிபண்ணி நோகடிக்க அனுமதிக்கக் கூடாது.

சுட்டிப் பிள்ளையின் இயல்பான துடிப்பை இவை அடக்கிவிடக்கூடும். பரீட்சைப் பெறுபேறுகளுடன்வீடு வரும் பிள்ளையை கூண்டில் நிறுத்திப் பிரம்படி கொடுத்துத் தண்டிக்கும் அறியாமை இப்போது அருகி வருகிறது என்றே சொல்லலாம்.

பெற்றோர் பற்றிய அச்சத்தை நீக்கி நட்புடன் அவர்களுடன் பழகும்வகை பிள்ளை வளர—உணரத் தொடங்கி விட்டால் அதை முதற்படி வெற்றிஎனலாம்.

### பொய்

பிள்ளைகள் பொய்சொன்னால் பெற்றோர்களுக்குப் பத்திக்கொண்டு வருகிறது. எல்லாப் பிள்ளைக்கும் பொய் சொல்ல ஓர் இயல்பான ஆசை வரும். அவை பகிடிக்காகவோ, தண்டனையைத் தவிர்க்கவோ, பயத்தின் நிமித்தமோ, சண்டை காரணமாகவோ பொய்யை நாடலாம்.

காரணத்தைப் புரிந்து கொண்டு அதைத்தான் இல்லாமற் செய்யவேண்டுமே தவிர, பிள்ளைக்குத் தாங்களே 'பொய்யன்' பட்டம் சூட்டக்கூடாது. தண்டித்துப் பொய்யை ஒழிப்பிக்கப் போனால் வன்மம் வளர்வதைத் தடுக்கவே இயலாது. பொய் சொல்லும் பெரியவர்கள் உள்ள வீட்டில் குழந்தையைத் தண்டித்துத் திருத்தவே இயலாது.

சண்டை பிடிக்கும் சகோதரர்களிடையே பிரம்போடு பெற்றோர் புகுந்தால் பிள்ளைகள் ஒன்றையொன்று குற்றம் சாட்டும். இதில் எது பொய் எது மெய் எனக் கண்டுபிடிக்க பெரிய விசாரணையே நடத்த வேண்டி வரும். அதை விடுத்து சமரசம் செய்து வைத்தால் போகிறது.

பொய், சொல்லக்கூடாது என்பதை இதமான பல கதைகள் மூலம் பிள்ளைகளுக்குத் தெரிவிக்கலாம். பொய் என்றோ ஒருநாள் வெளிப்பட்டே தீரும் எனவும் தெரிவிக்கலாம். உணர்ந்து திருந்தும் பிள்ளை உருப்படியாக வளரும்.

சிறுவர்களுக்கான கதைகளில் உள்ள தத்துவங்களைத் தெளிவாக விளக்கினால் போகிறது. எல்லாம் தானாகவே புரிந்துவிடும்.

எதையும் பெரிதுபடுத்திப் புளுகுவதில் பிள்ளைகளுக்கு இன்பம் தென்படுவது இயல்புதான்.

### களவு

பிள்ளை களவு எடுக்கத் தான் பார்க்கும். பெரியவர்களே குழந்தையை ஏவி களவு எடுப்பிக்கும் வழக்கம் பல இடங்களில் உண்டு. ஆனந்தமாக திருடிவரும் பிள்ளை நாளை பிரபல கேடி ஆகிவிடுவான்.

அடுத்தவர்களிடம் உள்ளது தன்னிடம் இல்லையே என்ற ஆசை—ஏக்கம்—பிள்ளையைத் திருடத் தூண்டலாம். வேண்டிய பொருளை வீட்டில் கேட்கும் உரிமை கூட சில பிள்ளைகளுக்கு இருக்காது. பயம் ஒருபுறம், ஆசை மறுபுறம் எனப் போராடும் பிள்ளை சுலபமாகப் பொருளை அடைய வழி தேடும்.

எதையும் மனம் திறந்து பெற்றோருடன் கேட்டுப் பேசும் நிலைமையில் பிள்ளையை வளர்த்தால் போகிறது. கேட்டதை வாங்கிக் கொடுக்கலாம். அல்லது இயலாதபோது காரணங்களைத் தெளிவிக்கலாம்:

பிள்ளையிடம் களவுக் குணத்தைக் கண்டுபிடித்தால் மனம் கூசிக் குறுகும்படி தண்டிக்கக்கூடாது. இதமாகப் பேசி பொருளை திருப்பியளித்து மன்னிப்புக் கேட்கும் சுபாவத்தை வளர்த்துவிடல் வேண்டும். அப்போது களவு எடுப்பது பிழை என்பதை பிள்ளை உணரும். மீண்டும் மன்னிப்புக் கேட்க அது தயாரில்லை என்ற மனப்பக்குவம் வந்துவிடும்.

### பயம்

பிள்ளைகளைப் பயம் காட்டிக் கோழைகளாக வளர்க்கக்கூடாது, சிறு பராயத்திலே சாப்பாட்டை ஊட்டும்போதே 'உம்மாண்டி' காட்டி அடக்கப் பார்க்கிறார்களே. பிள்ளை ஆசையாகப் பசியெடுத்துச் சாப்பிடுவதே சிறந்தது.

உம்மாண்டி, பேய், பிசாசு, நொண்டி என்றெல்லாம் பிள்ளைகளை மிரட்டிவைத்தால் அவர்கள் தனித்த நேரங்களில் இவற்றையிட்டுத் தவிக்க நேரிடும்.



இல்லாதவற்றைச் சொல்லி தேவையற்ற வீண் பயங்களை பிள்ளை மனதிலே வளர்க்கக்கூடாது. அத்துடன் அங்கவீனர், பிச்சைக்காரர் போன்றவர்களை இரக்கமாக அணுகும் மனப்பான்மையையே வளர்த்துவிடல் வேண்டும்.

அதேவேளை சூழலில் உள்ள ஆபத்துக்களை அறியவும் எச்சரிக்கையுடன் வாழவும் பிள்ளைக்குக் கற்றுத்தரல் வேண்டும்.

### வெட்கம், கூச்சம்

கூச்சமான சுபாவம் பிள்ளைகளிடம் பொதுவாகக் காணப்படும். அதைப்படிப் படியாக அகற்ற முனைதல் வேண்டும். கவனிக்காதுபோனால் எல்லா விடயங்களிலுமே ஒதுங்கி நிற்கப் பிள்ளை பழகிவிடும்.

எல்லாப் பிள்ளைகளும் வீட்டிலோ — விருந்தினர் வந்த வேளையோ—பாடச் சொன்னால் பாடாது; ஆடச்சொன்னால் ஆடாது; அரங்கத்தில் ஏறாது.

பாடசாலையிலும் வீட்டிலும் விளையாட்டாக மேடையேறப் பிள்ளையைத் தயார்ப்படுத்துவது நல்லது. அதற்காக அதிகப் பிரசங்கித்தனமான சுபாவத்தையும் வளர விடக்கூடாது.

புதியவர்கள் வந்துவிட்டால் ஒதுங்கிப் போகத்... தான் பிள்ளைகள் நினைப்... பார்கள். அப்படியானநேரங்... களில் பலரின் முன்னிலை... யில் அவர்களைக் கேலி... செய்தோ மனதை உடை... யச் செய்தோ விடக்... கூடாது.

வருபவர்களை வரவேற்... கவும் விசாரிக்கவும் உப... சரிக்கவும் பிள்ளைகளுக்கு... சொல்லித்தரல் வேண்டு... வீட்டுக்கு வருபவர்களை... கொஞ்சம்கூட சட்... செய்யாமல் தமதுபா... கதியென இருக்கவும் பி... ளைகள் பழகக் கூடா... அளவுக்கு மீறி அதி... பேசிக் கொண்டாட... கூடாது.

# அதன் எதிர்... உங்கள் வளர்...

தாழ்வுமனப்பான்மை... பிள்ளைகளைதொடர்... அவர்களைவிடத் திற... யானவர்களுடன் ஒப்பிட்... கண்டித்து வளர்ப்பது இ... டையான பாதிப்பை... தரும்.

தனது தோல்விக்க... வேதனைப்படும் பிள்... மனது அடுத்தவரை வி... தான் தாழ்ந்தவன் எ... தவிப்பிலும் துடிக்கும்.

**-மு. சிவநேசன்...**

வாழ்க்கையில் வெ... பெற்றவர்களை உதார... புருஷர்களாக நினை... அவர்களைப்போல தா... மூன்னேற வேண்டும் எ... ஊக்க மனப்பான்மை... பிள்ளைகளிடம் ஊ... விடல் வேண்டும்.


தாழ்வு மனப்பான்மை... தன்னைவிட உயர்ந்த... களிடம் இருந்தும், சமூ... தில் இருந்தும் பிள்ளை... ஒதுங்கி நிற்கச் செ... விடும்.

மற்றவர்களோடு ப... அவர்களின் முன்னே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தும் நல்ல பிள்ளை

...கிப் போகத்
...கள் நினைப்
...டியானநேரங்
... முன்னிலை
...ளைக் கேலி
...தை உடை
...ா விடக்
...
...ள வரவேற்
...க்கவும் உப



...ளைகளுக்குச்
... வேண்டும்.
...நபவர்களைக்
... சட்டை
... தமதுபாடே
...க்கவும் பிள்
...க் கூடாது;
... அதிகம்
...ாண்டாடவும்

## ...ர்காலம்
## ...ர்ப்பில்தான்!

...பான்மை
...தொடர்ந்து
...த் திறமை
...ன் ஒப்பிட்டுக்
...ர்ப்பது இரட்
...பாதிப்பையே

...தால்விக்காக
... பிள்ளை
...வரை விடத்
...வன் என்ற
...டிக்கும்.

...நேசன்-

... வெற்றி
... உதாரண
... நினைத்து
...ால தாமும்
...ண்டும் என்ற
...ான்மையைப்
... ஊட்டி
...ம்.
...ப்பான்மை—
... உயர்ந்தவர்
...தும், சமூகத்
... பிள்ளையை
...ச் செய்து

...ாடு பழகி
... முன்னேற்ற

முயற்சியோடு தானும் இணைந்து பாடுபடும் சுபாவத்தை வளர்ப்பதே உகந்தது.

உயர்ச்சி மனப்பான்மை

பிள்ளைகள் திறமையானவர்களாகவோ, வசதியானவர்களாகவோ இருந்து விட்டால் அடிக்கடி பாராட்டுகளைப் பெற்றுவிட்டால்— அடுத்தவர்களைத் தன்னை விடத் தாழ்ந்தவர்கள் என நினைத்துவிடுகி றார் கள். அவர்களோடு கலந்துபழகத் தயங்குகிறார்கள்.

அப்படிப்பட்ட பிள்ளைகள் அளவு அறியாது பேசும் வார்த்தைகள் ஏனையோரின் நெஞ்சங்களில் முள்ளாகத் தைக்கக்கூடும். இதை வீரம் என்றோ, திறமை என்றோ பெற்றவர்கள் பார்த்திருக்கக்கூடாது.

பலரையும் அரவணைத்து —அனுசரித்து— உலகத்தோடு ஒட்டி வாழப்பழகும் மனப்பான்மைதான் பிள்ளையிடம் வளர வேண்டும்.

சண்டையும் கோளும் கோபமும்

சகோதரர்களுடனும் நண்பர்களுடனும் சண்டை என்று வந்துவிட்டால் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு பிள்ளைகளிடம் இருக்காது. அர்த்தமற்ற விடயங்களுக்கெல்லாம் பெரும் மனப்போர் மூண்டுவிடும். இது இயல்புதான் என முதலில் பெற்றோர் நினைக்க வேண்டும்.

உடனே நீதிவிசாரணை, தண்டனை என்றெல்லாம் இறங்கிவிடக்கூடாது. சமாதானம் செய்துவைக்க அவர்களாகவே ஒன்று சேர வைத்துவிடல் வேண்டும்.

அடுத்தவரின் பிள்ளையோடு சண்டைபிடித்து விட்டால் தனது பிள்ளைக்காக நியாயம் கேட்டு பெரியவர்கள் சச்சரவில் குதித்து விடுகிறார்கள். விடயம் பெரிதாகிக் குடும்பச் சண்டையாகிவிடும். மறுநாள் பிள்ளைகள் இணைந்துவிடுவார்கள். பெரியவர்கள் திணறுவார்கள்.

பிள்ளைகள் நல்லாக கோள்சொல்லத்தான் விரும்புவார்கள். அதைக் கேட்டு பெற்றவரோ ஆசிரியரோ செயற்படத்தொடங்கினால் அது கோள்சொல்லும் பழக்கத்தை வளர்க்கவே உதவும். உண்மையை உணரும் அதே வேளை அவசியமின்றிக் கோள் சொல்லும் பழக்கத்தை அறவே ஒழிக்கவே பெரியவர்கள் முயல வேண்டும்.

தங்கள் பிரச்சினைகளைத் தங்களுக்குள்ளேயே தீர்க்கும் மனப்பக்குவத்தைப் பெற—பெரியவர்கள் சமரசம் செய்து வைத்து உதவி செய்தால் கோள் சொல்லும் பழக்கம் அருகி விடும்.

பிள்ளைகளுக்குக் கோபம் பொத்துக் கொண்டுவரும். யாரும் எதிர் நிற்கமுடியாத வகையில் வார்த்தைகள் வெடிக்கும். அவ்வேளை பெரியவர்களை மதிக்காது தூக்கிஎறியும் சுபாவம்தென்படும். உடனே பெரியவர்கள் தந்திரமாகத்தான் சமாதானம் செய்ய வேண்டி வரும். அடக்க முற்படாமல் அடிப்படைப் பிரச்சினையை அணுகிச்சமாளிப்பதே சிறந்தது. அடிக்கடி கோபம் வராமல் பெரியவர்கள்சமாளித்துக்கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் போகுமிடங்களில் கெட்டவார்த்தை பிரயோகங்கள் இருப்பின் அவற்றைச் சுலபமாகப் பொறுக்கி வந்துவிடும். எனவே கண்காணிப்பு அவசியம். பெற்றோர் அறியாமல் பிற இடங்களில் அத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த குழந்தைகள் முயலலாம்.

கேள்விப் பட்டதும் 'மானம் போச்சு' என அலறிப் புடைத்து பெற்றோர் பிள்ளைகளைக் கடிகிறார்கள். அது நிலைமையை மோசமாக்கிவிடும். வார்த்தைகள் வீட்டுக்குள்ளும் விளையாடத் தொடங்கி விடும்.

பிள்ளையோடு பேசி வார்த்தைகளைப் பொறுக்கிய இடங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். அச்சூழலைத் தவிர்க்க இயன்றவரை முயலவேண்டும். வீட்டிலே பெரியவர்கள் பயன்படுத்தாத இப்படியான வார்த்தைகளை நல்ல மனிதர்கள் பாவிப்பதில்லை என்பதைப் பிள்ளைகளுக்கு விளங்கவைத்தல் வேண்டும்.

தேவைகள்

பிள்ளைகளின் தேவைகள் அதிகம். ஆசைகள் அதை விட அதிகம். எந்தப் பொருள் மீதும் அதிகம் ஆசைவைத்தாலும் அது கிடைத்ததும் விரைவில் அது அலுத்துவிடும்.

பாவம்பார்த்துக் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுக்கும்பெற்றோர்பிள்ளையைக் கெடுக்கவே முனைகிறார்கள். நினைத்தது கிடைக்காதபோது பிள்ளை அடம் பிடிக்கத் தொடங்கும்.

இப்படியான சந்தர்ப்பங்களில் கண்டிப்புடன் நடந்து விடுவது பிள்ளையின் மனநிலையைப் பாதிக்கும். தான் வாழவோ அனுபவிக்கவோ கொடுத்துவைக்காத பாவி என்ற மனநிலையை உண்டாக்கிவிடும்.

பிள்ளையின் கோரிக்கையை நிறைவு செய்யஇயலாதபோது இதமாக—பக்குவமாக—அதற்குரிய காரணங்களை விளங்க வைப்பதே உகந்தது. அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை பிள்ளை பெற்றுவிட்டால் மனநிலையில் பாதிப்பு எழாது.

நவீனயுகத்தில் சந்தைக்கு வரும் விதவிதமானபொருள்களில் தேவை—தேவையின்மையை வரையறுப்பதுபெற்றோரைப் பொறுத்தது; அவர்களின் பொருளாதார நிலைமையைப் பொறுத்தது; பிள்ளைகளின் வயதைப் பொறுத்தது; சமுதாயத்தின் அறிவு மட்டத்தையும் பொறுத்தது.

பொழுது போக்குகள்

இன்று பொழுதைப் போக்க வேண்டிய வில்லங்கம் எழுவது குறைவு. அது தானாகவே போய்விடும். எதில் என்பதுதான் கேள்வி.

பாடசாலை, ரியூஷன், விளையாட்டு, ரி. வி., கணனிகள், திரைப்படப் பாடல்கள், வாகனங்கள் எனப்பல சோலிகள் சுற்றிச் சூழ நிறைந்திருக்கையில் பெரியவர்களே எப்படி நேரத்தைப் போக்குவது எனத் தெரியாமல் அதற்கும் இதற்கும் தாவும் நிலையில், பிள்ளைகள் மட்டும் என்ன செய்வர்?

முத்திரை சேகரித்தல் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட இன்று பிள்ளைகளுக்கு ஆறுதலாக நேரம் கிடைப்பதேயில்லை. பாடசாலை நேரத்தில் கிடைக்காதபோது உடற்பயிற்சிக்குக் கூட நேரம் கிட்டுவதில்லை. இதனால் உடல் ஆரோக்கியம் குறைந்த ஒருமனித சந்ததி உருவாகிக் கொண்டிருக்கிறது.

தொடர்ந்து பார்க்கும் காரணத்தால் தொலைக்காட்சித் திரைகளும், கணனித் திரைகளும் கண்ணைக் கெடுக்கவே முனைகின்றன; பெருமளவு நேரத்தை விழுங்கியும் விடுகின்றன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், திரைப்படங்களிலும் வெளிப்படும் வன்முறையும், பாலியல் சீர்கேடுகளும் பிள்ளைகளின் மனதில் படிந்து விடுகின்றன. இதனால் 'டுஷ் டுஷ்' பாணியில் கையைக் காலை தூக்கி கராட்டி போட்டு ஹீரோக்களாகவும், ஆயுதங்களை எடுக்கவும் அவர்கள் முனைகிறார்கள்.

சிறுவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர்மாண்டு வரும் செய்திகள் மேலை நாடுகளில் இருந்து வருகின்றன.

அத்துடன் போதைப் பொருள்களும், மதுபானமும், சிகரெட் போன்றவையும் தாராளமாகக் கிடைப்பதும்— பிள்ளைகளின் கைக்கு அவை சுலபமாக எட்டுவதும் — நிலைமைகளைச் சிக்கல் ஆக்குகின்றன.

இவற்றைப் பற்றிய எச்சரிக்கை உணர்வுகளை இளமையிலேயே ஊட்டி வளர்ப்பது அவசியமாகின்றது. போதை அனுபவம், புரியாமலேயே பிள்ளைக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் அவற்றை யிட்டு மிக விழிப்பாக இருக்க வழிமுறைகள் சொல்லித் தரப்படல் வேண்டும்.

பாலியல் பிரச்சினைகள்

அடுத்த பாரிய பிரச்சினையாக உருவெடுப்பது பாலியல் சிக்கல்கள்தான். பருவ வயதை எட்டும் பிள்ளைகள் இவற்றைப் பற்றிய தெளிவான அறிவையும் எச்சரிக்கை உணர்வையும் பெற்றிராத காரணத்தால் தவறுகளை இழைக்கக் கூடும்.

அல்லது தம்மில் ஏற்படும் மாற்றங்கள், உணர்வுகள், நிகழ்வுகள் பற்றி அஞ்சக்கூடும்.

இது ஓர் இக்கட்டான நிலைமையும் பருவமும் என்பதைப் பெரியவர்கள்புரிந்துகொள்வது அவசியம்.

பிள்ளைகளில் மாற்றங்களை அவதானிக்கும் பெற்றோர் அவர்களின் அந்தரங்க விடயங்களில் கடும் போக்கை எடுத்த எடுப்பில் கடைப்பிடித்துக் கண்டிப்பதோ தண்டிப்பதோ சிக்கலை வலுவாக்கலாம்.

பட்டும்படாமலும் பிள்ளைக்கு அறிவுரைகளைத் தந்திரமாகக் கூறிவரல் வேண்டும். பிள்ளையைப் பருவத்துக்கு தயார்ப்படுத்தும் வகையில் அறிவுரைகளை நீண்டகால நோக்கில் படிப்படியாகக் கூறிவரலாம்.

சூழல் எப்படிப்பட்டது என்பதையும், எதிர்பார்க்கக்கூடிய ஆபத்துக்களையும், எச்சரிக்கை செய்து பிள்ளைக்குப் படிப்படியாக புகட்டி விடுதல்தான் ஒரே வழி.

முடிவாக

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை பிள்ளைகளிடம் வளர்வதற்கு விளையாட்டுக்களில் ஈடுபடுவது சிறந்த பயிற்சியைத் தரும். விதிகளுக்கு கட்டுப்படும் ஒழுக்கத்தையும் அது கற்றுத் தரும். வெற்றி — தோல்விகளை ஏற்கும் மனப்பான்மையை விளையாட்டுக்கள் வளர்க்கும்.

அத்துறையிலும்கூட முறையாகப் பயிற்றப்படாது போனால் அது குரோதங்களையே வளர்க்கும். எனவே கட்டுப்பாடும் கண்ணியமும் கண்காணிப்பும் உள்ள சூழலே அவற்றுக்கும் உகந்தது.

திறமை தென்படும் துறைகளில் பிள்ளைகளை ஊக்குவித்து முன்னணியில் கொண்டுவந்து விடல் வேண்டும். தம்மிடம் உள்ள திறமையையும் — பெறுமதியையும் உணராதவர்களாக அவர்கள் இருக்கலாம்.

பிள்ளைகளிடம் கடும் போக்கைக் கடைப்பிடிக்காது, கட்டுப்பாடுகளை — சட்டங்களை — விதிகளை நிர்ணயிக்கும் போது — அவற்றின் அவசியத்தை — அவர்களின் மனம் ஏற்கும் வகையில் நியாயப்படுத்தல் வேண்டும்.

அந்த அடிப்படை விளக்கம் மனதிலே பதிந்து விட்டால் அவர்கள் அந்த விதிகளை மீறிச் செயற்படப் போவதில்லை; சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வாழ அவர்கள் முற்படமாட்டார்கள்.

அடுத்தவர்களோடு பழகும் பண்புகளை பிள்ளைகளுக்கு விளக்கிவரல் வேண்டும். மற்றவர் மனம்நோக நடக்கும் பழக்கம் தரும் பாதிப்புகளை மனதார உணர்த்தி விட்டால் அவர்கள் அத்தவறினைத் தொடர மாட்டார்கள்.

தான் செய்த தவறை பிள்ளை முதலில் உணரச் செய்வது சிறந்தது. உணரும் போது ஏற்படும் மனத்தாக்கம் — குற்ற உணர்வு — மனதிலே பதியுமானால் அது தானாகவே பிள்ளையைத் திருத்திவிடும்.

அப்படித் தவறை உணர்த்தும் போது பிள்ளை மனதை புண்படச் செய்யக் கூடாது; இனித் திருத்தி விடலாம் எனத் தட்டிக் கொடுக்க வேண்டும்,

அதன் பின்னர் அத்தகயை தவறைச் செய்ய ஒரு போதும் முன்வரமாட்டாது. தவறிழைக்க முற்படும் போது குற்ற உணர்வு அதனைத் தடுத்துவிடும்.

பாடசாலைக் கல்வியும்— வீட்டு நடைமுறையும் — வாழ்க்கைக்காக மனதைத் திடப்படுத்தித் தயார்ப்படுத்தும் வகையிலே அமைதல் வேண்டும்.

இவை இரண்டுமே பிற்காலத்துக்கு அத்திவாரமாக அமைந்து விடப் போகின்றன. பிள்ளையின் எதிர்காலத்துக்கு இவை அத்தியாவசியமானவை.

சகிப்புத் தன்மையும், தகாத வார்த்தைப் பிரயோகத்தை தவிர்த்தலும், அடங்காச் சினத்தைக் கட்டுப்படுத்திக் காத்தலும், விதண்டா வாதத்தை விலக்கலும் போன்ற பண்புகள் இளமையில் இருந்தே ஊட்டப்பட்டால் அன்றி வளர்ந்தபின் விளைய மாட்டா

உலகில் முன்னணியில் திகழ்ந்த — திகழுகின்ற — மகான்களின் வாழ்க்கையிலிருந்து கற்கும் பாடங்கள் பிள்ளைகளுக்கு உணர்த்தப்படல் வேண்டும். அவர்களின் அமைதி, ஆரவாரமின்மை, சலனமற்ற வாழ்க்கை என்பன சிறந்த வழிகாட்டிகள்.

பிள்ளை தனது ஆரம்ப பராயத்திலிருந்தே அடக்கமான வாழ்வு ஒன்றுக்குத் தன்னை இட்டுச் செல்ல இத்தகைய சூழ்நிலை உதவுகிறது.

பதவியிலும் பாராட்டிலும் மயங்காமல், துரும்பு கிடைத்தவுடன் துள்ளிக் குதிக்காமல் வாழும் மனப்பக்குவத்தை ஞானிகளின் வாழ்க்கையில் இருந்து கல்விக் காலத்திலேயே பிள்ளைகளுக்கு ஊட்டி விட வேண்டும்.

அடுத்து,பெற்றோர் தாங்களே உலகினிலே ஓர் உதாரணபுருஷர்களாக வாழ்ந்து காட்டிவிடல் வேண்டும். தவறினால் சந்ததியைத் திருத்தும் அருகதை அவர்களிடம் இல்லாமற் போய் விடுகிறது.

பெற்றோர்களைப் பார்த்தே பிள்ளை நடந்து கொள்கிறது என்பதைபெற்றோர் மறந்து விடலாகாது.

பெற்றவர்கள் பட்ட கடன் பிள்ளைகளைச் சேரும் என்பது பாவ புண்ணியங்களையும் பழக்கவழக்கங்களையும் பொறுத்த வரையில் உண்மை என்பது வாழ்க்கை அனுபவத்தால் உணரப்பட வேண்டிய ஒன்று.

இடத்துக்கு இடம் மாறுபடும் சூழலில் — வேறுபட்ட கலாசாரம் — பழக்க வழக்கங்கள் — பண்பாடுகள் அமைந்துள்ள வேளையில்— பிள்ளை வளர்ப்பிலே நிரந்தரமான விதிகளைப் புகுத்திவிடல் முடியாது.

குடி தடை செய்யப்பட்ட கலாசாரத்தில் அப்பனுக்கு தெரியாமல் மகனும், மகனுக்குத் தெரியாமல் அப்பனும் குடிப்பார்கள். இதைவிட அப்பனும் மகனும் சேர்ந்தே குடிக்கிற குடும்பத்தில் சிக்கல்கள் குறைவாக இருக்கும்.


பெற்றோர்களின் மதிநுட்பமும், கையாளும் திறனும் உத்திகளும்தான் பிள்ளைகளின் ஆரோக்கியமான பண்பாட்டு வளர்ச்சியிலே அடிக்கல் நாட்டி விடுகின்றன என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 47



சொற்சிலம்பம் இல. 47
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 01 — 05 — 1998

**இடமிருந்து வலம்**

1. சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் ஓட்ட வீராங்கனை. 5. நவக்கிரகங்களுள் ஒன்று. 7. மழை காலம். 8. வேள்வி. 9. உகிர். 10. மேடையை மறைப்பது. 11. சடப்பொருள்களின் மூன்று நிலைகளில் ஒன்று. 13. முகத்தில் வருவது. 14. சோதிடம் பார்ப்பதற்கு இதுவும் முக்கியம். 15. படகு வலிக்க உதவுவது. 17. ஒரு நாட்டிய வகை. 20. இதைப் பெருக்கவே இன்று நிதி அதிகம் செலவாகுகின்றது. 21. கணநேரத்தில் தோன்றி, பளிச்சிட்டு மறையும். 22. நவீன. 23. ஒன்றாகச் சேர்க்கப்பட்டதால் வருவது.

**மேலிருந்து கீழ்**

1. கிழக்கிந்தியத் தீவுகளுள் ஒன்று. 2. பிழை அல்ல. 3. ஈகை. 4. சனீஸ்வரனின் வாகனம். 6. பரி. 9. நவீனம் என்றும் வரும்; ஒன்பது என்றும் ஆகும். 10. ஆந்திராவில் உள்ள புனித ஸ்தலம். 12. விசிறி. 13. தூங்கு. 15. சிறிய நீர்த் திவலை. துமி என்றும் கூறலாம். 16. பாம்பில் ஒரு வகை. 18. கொழுவு; முரண்படு. 19. அடைந்தால் அழியாத செல்வம். 21. வறுமை. 22. நாணலும் இந்த வகைத் தாவரமே.

### சொற்சிலம்பம் 45 — முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. பாகவதம். 5. மகா. 7. விரியன். 8. பட்டு. 9. கால். 10. தண்டு. 11. பல. 12. நாரி 13. விடை. 14. துன்பம். 16. பலி 17. சாண். 19. கலப்பு. 21. புதுமை. 23. புழுதி. 24. விதி.

**மேலிருந்து கீழ்**

1. பாவி. 2. கரிகாலன். 3. வயல். 4. தன் 5. மட்டுவில். 6. காடு. 8. பண். 10. தரி. 11. பதுக்கல். 12. நாம். 15. பதிப்பு. 16. பண்பு. 18. அமைதி. 20. புழு. 22. துவி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: பி. றேனுகா,
மேதர் வீதி, மானிப்பாய்.

★ இரண்டாம் பரிசு: ச. ஸ்றெலா,
இல. 99, ப. ம. திட்டம்,
மிருசுவில்.

★ மூன்றாம் பரிசு: செல்வி இ. எழிலரசி,
மே/பா; பொ. தவராசா,
கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம் 46 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

தனித்திருந்தால் பெண் தவறிவிடுவாள் என்ற கருத்தை — அவளுக்குக் கட்டுக் காவல்கள் போடவேண்டும் என்ற எண்ணத்தை — இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தூக்கி எறிந்தவர் வள்ளுவர்.

பெண்ணுக்கு காவல் என்றும், உதவி என்றும் ஆள்வைத்துக் கண்காணிப்பதைச் சிறை என்றார். இச்சிறையால் எந்தப் பயனும் விளையப் போவதும் இல்லை என்றுவிட்டார்.

சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? என்ன லாபத்தை தரும்? அவள் மனச்சிறை உடைத்துப் புறப்பட்ட பின்னே உடலுக்குச் சிறைவைத்துப் பயன் ஏது?

தன்னைத்தான் காக்கும் மனவலிமை உடையள் ஆகிவிட்டால் இப் புறச்சிறைகள் ஏனோ? நிறையென்னும் பண்புடையள் அவளென்றால் — மாசற்ற மனதுடையாள் ஆகிவிட்டால் — நெறிதவறல் தன்னை நினைக்கவே மாட்டாத மனைவியிடத்து ஏனோ வீணான சந்தேகங்கள்?

அசோகவனத்துச் சீதைக்கு என்ன காவல் இருந்தது? அவள் மனவலிமையை உடைக்க இராவணனால் இயலாமற் போய் விட்டதே? எத்தனை அரக்கிகள் சூழநின்று அவள் மனதை மாற்றத் துடித்தனர்!

நிறையின் வலிமைக்கு இதைவிடச் சான்று வேண்டுமா? மனது தவறுசெய்யாத போது பெண்ணின் நிறைவு குறைவுபடாது.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

— 0057

(வாழ்க்கைத்துணை நலம்)
—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [25 - 04 - 1998 முதல் 01 - 05 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வெ சந் புத சனி | *சூ செ | | |
| வி கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| | | | |

மாற்றம்:

25- 4- 1998 இல் மீனஇராசியில் ரேவதி நட்ஷத்திரத்தில் (மீனம்) சந்திரன் நிற்கும். 29- 4- 1998 இல் மீன இராசியில் வெள்ளி மாறும்.

அரசியலில் மாற்றங்கள் சகஜமாகும். உலகளாவிய அபிப்பிராயங்கள் ஏற்படும். பேச்சுவார்த்தைகளுக்கு ஆயத்தங்கள் ஏற்படலாம். இந்தியாவில் அரசியலில் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகரிக்கும். தென்பகுதி அரசியல்வாதிகள் தடுமாறுவர். மத்தியகிழக்கில் திரும்பவும் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். அமெரிக்காவில் அரசியல் உயர்பீடத்தில் அபிப்பிராய பேதமும் மனமாற்றமும் ஜனாதிபதிக்கு பல கஷ்டங்களைக் கொடுக்கும். கிழக்கு நாடுகளில் பொருளாதார நெருக்கடியால் அரசியலில் கொந்தளிப்புக்கள் ஏற்படும்.

மேடம்: உலகில் மனிதர்கள் எல்லாம் நிறைந்தவர்களா? ஏதாவது சில குறைகுற்றங்கள் இருந்துதான் தீரும். அதையெல்லாம் பெரிதுபடுத்திக் கொண்டிருக்காமல் உங்கள் காரியங்களில் செயற்படுங்கள். நீதி நியாயம் பற்றி பேசிப்பார்ப்பீர்கள். சரிவராது எனக்கண்டால் எதிர்த்துப் போராடுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் கொதிப்புடன் காணப்படுவீர்கள். முரட்டுச் சுபாவத்தை விட்டு நிதானத்துடன் செயற்படுங்கள். உங்களை நாலுபேர் பார்த்தபடி இருப்பார்கள். பாசத்தால் வேதனை. சகோதரர் மத்தியில் நேசத்தால் தவிப்பீர்கள். தியாகம் செய்து பெற்றவர்களையும் உங்கள் உதிரத்தவர்களையும் காப்பீர்கள். எதிர்ப்பாலாரால் வேதனை வரத்தான் செய்யும். கொஞ்சம் நிதானத்துடன் செயற்படுங்கள். பெரியவர்களின் ஆலோசனைகளால் நற்பலன்கள் ஏற்படும். சிலருக்கு வயிற்றில் ரோகம், கைகால் பிடிப்பு கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்; புதன்.

இடபம்: ஊருக்கெல்லாம் உதவிகள் செய்வீர்கள். உங்களைப் பற்றி யாரும் சிந்திக்க மாட்டார்கள். உலகம் இப்படித்தான் என சிந்திப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் பலருக்கும் உதவுவீர்கள்; குறையும் கேட்பீர்கள். பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும். பல திட்டங்கள் போடுவீர்கள். கலைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். இருதய நோய்கள், வலிப்பு அல்லது நோ சிலருக்குக் கொடுக்கும். காணி பூமியால் இலாபம் கொடுக்கும். பெரியவர்கள் — தெய்வபக்தி கொண்டவர்களின் உதவிகள் உங்களுக்குக் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:வெள்ளி

மிதுனம்: எதிலும் ஒரு படபடப்பு, அலைச்சல், அளவுக்கு மீறிய கற்பனை, நிதானமற்ற செயற்பாடுகள் என்பன இருந்தபடி இருக்கும். உலகமே உருண்டபடி இருக்கும் பொழுது உங்களை எப்படி நிலையாக நிற்கச் சொல்ல முடியும்? தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் சகஜம். திறமையாக எதையும் சாதித்துக் கொள்ளுவீர்கள். உங்கள் வாய்ச் சாதுரியத்தால் பலரும் உங்களிடம் ஏமாறுவார்கள். எதிர்பாலாரின் ஆலோசனைகள் உங்களுக்கு பல நன்மைகளைக் கொடுக்கும். சளி, வாத உளைவு, வயிற்று நோ சிலரை வருத்தியபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

# சோதிட சஞ்சீவி

கடகம்: எவரையும் மிகவும் உள்ளுணர்வுடன் நோக்கி உண்மைகளை அறிய முற்படுவீர்கள். அடிக்கடி பயந்த சுபாவமுடன் சிரித்துப் பேசுவீர்கள். சில சமயம் — திடீரென படபடவெனப் பொரிந்து தள்ளி மற்றவர்களை ஈடாடச் செய்து வெருட்டி விடுவீர்கள். இரட்டை மனச் சிந்தனைகள் தொழில் ஸ்தானத்தில் இருந்தபடி இருக்கும். உறுதியான பல வருங்காலத்திட்டங்களை கருவாக்கி, உருவாக்கியபடி இருப்பீர்கள். எதிர்பாலாருடன் கருத்து வேற்றுமைப்படாமல் இருக்க முயலுங்கள். நெஞ்சில் சளி, கை கால் பிடிப்பு, உள்உறுப்புக்களில் சிறு ரோகங்கள், தோல் வருத்தங்கள், சலரோகங்கள் என்பனவற்றால் சிலர் வருந்த இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

சிங்கம்; அட்டமத்துச் சனி அடிக்கடி அலைக்கழிக்கும். எதிர் நீச்சல் அடித்து வாழப் பழகுங்கள். உயர்ந்த எண்ணம், உயர்ந்த நோக்கம் உங்களை அடிக்கடி ஆட்கொள்ளும். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் ராஜாதான். எல்லோரும் உங்களின் கருத்துக்களுக்கு தலை ஆட்டியபடி இருப்பார்கள். ஆனால் குடும்பத்தில் எதிர்பாலாருக்குப் பயந்து நீங்கள் தலை சாய்த்தபடி இருப்பீர்கள். வீட்டில் பேச்சு. நாட்டில் கூத்து என்ற நிலைதான். கொஞ்சம் சமாளியுங்கள். பொறுப்புக்கள் அதிகம். உடல் நிலையைக் கவனியுங்கள். அடிக்கடி களைப்பு, கை கால் உளைவு, புதிய பொருள் வரவு ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

## மகாதேவா ஜோதிடம்

கன்னி: உங்களுக்கு கருத்து வேற்றுமைகள் குடும்பத்திலும், தொழில் ஸதானத்திலும் ஏற்படும். புதிய முதலீடுகளை, திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டாம், அவசரமும், ஆத்திரமும், நீடித்த சிந்தனை ஓட்டங்களைத் தரமாட்டா: எதிலும் நிதானமாக நடவாது விட்டால் அதிக இழப்புக்களைச் சந்திப்பீர்கள். சளி, வாத உளைவு, கிருமித் தாக்கம் அடிக்கடி யோசனைகள் என்பன ஏற்பட்டு சிலரை வருத்தலாம். இன ஜன உதவிகள், நண்பர்களின் ஆதரவுகள் அதிக நன்மைகளையும், முன்னேற்றங்களையும் கொடுக்கும். தெய்வ வழிபாட்டுத் தலங்களில் ஆறுதல் அடைவீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

துலாம்: படபடப்பு, திடீர் உணர்ச்சி வசப்பட்ட செயற்பாடுகள் உங்களுக்கு கொடுக்கும் நிலைகள் ஏற்படும். ஆயினும் பொறுமை அவசியமாகும். தொழில்ஸ்தானத்தில் அளவறிந்து பேச வேண்டும். திடீர் வார்த்தைகளைக் கொட்டி விட்டு வேதனைப் படுவீர்கள். எதிர்ப்பாலாரை அனுசரித்து நடவுங்கள். அடிக்கடி உங்களை அழகுபடுத்துவதிலும் நறுமணங்களைப் பூசுவதிலும் காலத்தைச் செலவு செய்வீர்கள். நாலு காசு சேர்க்க நாலு பேரை அனுசரித்து பொறுமையாக நடக்க வேண்டாமா? அடிக்கடி களைப்பு வரும்: ஓய்வு எடுங்கள். சளி, விறைப்பு, நாரி நோ, தலையிடி என்பன சிலரை வருத்தும். தகுந்த வைத்தியம் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்:வெள்ளி.

விருச்சிகம்: இந்த உலகத்தில் எனக்குச் சாதகமானவர்கள் இல்லையா? எல்லாரும் சுயநலக்காரர் — இவர்களுக்கு தகுந்த பாடம் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை முற்றம்

## வந்துற்றாய் வசந்த மாது!

உலகுபுகழ் நலமனைத்தும் உவந்த ளிக்கும்
உலகத்து நாயகியாம் உயர்வு மிக்கோய்
உலர்வுபெறு தருக்களெலாம் ஒருங்கி ணைந்தே
உன்வரவை எதிர்நோக்கி உவந்து நிற்ப
மலர்வுதரு வாழ்வதனை மக்க ளோடு
மற்றுமுள உயிரினங்கள் எண்ணி நிற்ப
நிலவிவளர் துன்பமெலாம் நிலைகெட் டோட
நீணிலத்து வந்துற்றாய் வசந்த மாதே!

சித்திரைப் பெண்ணே மிக்க
சிரிய நலங்கள் தந்தே
இத்தரை போற்ற நல்ல
இனிதுறு வாழ்வு நல்க
உத்தமி நீயே வல்ல
உறுதியோ டிங்குற் றாயே
இத்தனை நாளாய் உற்ற
இடரெலாம் தீர்த்தே வைப்பாய்!

—பொலிகை ச. திருப்பதி—

## தீயாய்த் தகிக்கின்றாள் தீவகத் தாய் வேதனையில்!

பச்சைப் புகையிலைகள் பசுந்தளிராய் நெற்கதிர்கள்
பெரும் நிலப்பரப்பெடுத்த பெருங்குளத்தின் நீர்ப்பரப்பு
வெண்மணலில் சிரித்திருந்த வெள்ளைக் கடற்கரையும்
அபயம் தந்த அன்னை மாதா திருவடியும்
சாகாவரம் பெற்ற 'சாட்டி' நல்லதண்ணீர்க் கிணற்றடியும்
எல்லைச் சண்டையிலே எதிர் எதிராய் அண்ணன் தம்பி
காணிப்பங்கிற்காய் கத்தியுடன் கந்தன் அண்ணை
பங்குனி வெய்யிலுக்கு பந்தலிட்ட ஆலமரம்
வேலையற்றோர் சங்கத்தின் வேப்பமர அலுவலகம்
வட்டன்கள் உட்காரும் கேணியடி மதகு
விளையாட்டுக் களமான வெட்டவெளிக்காணி
வெறிச்சென்றிருக்கிறதே வேகுதே நெஞ்சமென்று
தீயாய்த் தகிக்கின்றாள் தீவகத்தாய் வேதனையில்!

சித்திரையாள் வருநாளில் புத்தாண்டு பூரிக்கும்
''மருதடியான்'' தேரேற மண்கும்பான் வெள்ளைப்
புற்றடியானும்...
இன்று வரும் வழியில் தரித்துநின்று வணங்கவும் வழியில்லை
வடை தேநீர் தந்துதவ குணமண்ணை கடையுமில்லை
முட்கம்பி வேலி முழுநீள அடைப்பு
வெஞ்சிறையில் வாடுகிறான் வெள்ளைப்புற்றடியான்
சமரசத்தில் அரசமரம் பௌத்தமும் சைவமும்
தீயாய்த் தகிக்கின்றாள் தீவகத்தாய் வேதனையில்!

ஆழிசூழும் ஏழுதீவும் அறிவுப்பசிதீர்த்த அன்னை
அரண்கள் புடைசூழ அழுகின்றாள் மறந்து தன்னை
மாமாங்கத் தீர்த்தமென மாரிமழை பொழிய
குண்டுகளில் குதித்தெழுந்த குழந்தைகள் கூட்டமில்லை
நெற்கதிரின் ''குடல்'' உருவி நெடும் வழியில் சுவைபார்த்த
பள்ளிச்சிறுவரில்லை பாளையில்லை சோலையில்லை
தீயாய்த்தகிக்கின்றாள் தீவகத்தாய் வேதனையில்!

எண்ணெயே காணாத தெருச்சிறுவர் தலைபோல
இருபுறமும் தலைசாய்த்த வேலிக்கதியால்கள்
முற்றும் துறந்த முனிவன் தாடியைப் போல்
முதிர்ந்து சிலிர்த்த ஓலையுடன் பனைமரங்கள்
முழங்கால் உயரத்தில் காவோலை கங்குமட்டை
முகங்காட்ட மறுக்கும் எங்கள் முகவரிகள்
புதிதாய் ஆட்சிசெய்ய எருக்கலைகள் நெருஞ்சிகள்
பூமித்தாய் தெரியாமல் பற்றைகள் காடுகள்
தீயாய்த் தகிக்கின்றாள் தீவகத்தாய் வேதனையில்!

—வேலணை ஷணா—

## ஏட்டினில் மட்டுந்தானா?

(''நேற்று எனைக்காத்த தென்மராட்சிக் கிக்கவிதை'' என்னுந் தலைப்பில் 11 - 4 - 98 சஞ்சீவி கவிதை முற்றத்தில் த. ஜெயசீலன் வரைந்த கவிதைக்கு பதில் கவிதை இது.)

புலம்பெயர்ந்து வந்தமர்ந்த புண்ணிய பூமியாம்
தலம் பெருகும் தென்மராட்சித் தையலை மறவாது
நலம் பெருக வேண்டுமென நல்லைநகர் கந்தனிடம்
நலம் வேண்டி நின்றிட்ட நண்பனே வாழிநீ!

வெள்ளம் வந்தணைந்த வேற்றூரின் சோதரரை
உள்ள நிறை உவகையோ டேற்றுநிதம் அவர்க்கு
கள்ளமில் உதவி செய்த கரங்களினை மறவாது
உள்ளன்பாய் வாழ்த்திசைத்த உத்தமனே வாழிநீ!

வந்தாரை வாழவைக்கும் வளம் நிறைந்த தென்மராட்சி
இந்நாளில் ஒளியிழந்து இருக்கின்றதெனக் கூறிநீ
உந்நாவாற் கவியுரைத்து உருகுகின்ற தன்மையிது
எந்நாளும் நிலைத்திடுமா? ஏட்டினில் மட்டுந்தானா?

பாதுகாப்புக் காரணத்தால் பயன் தரும் மரமெலாம்நொடிப்
போதினிலே உயிரழிந்து உருக்குலைந்து போனசோகம்
ஏதுசொல்லி நாமாற்ற எங்குமிக் கொடுமை தானேயித்
தீதின்றி நாம் வாழும் தினமுந்தான் வாராதோ?

மக்கள் தொகை குறைந்தின்று நகரத்து வீதியெல்லாம்
எக்கணமும் வெறிச்சோடி இருக்கின்ற தென்றுநீ
எக்காரணம் பற்றியுரைத்தாய் எம்மூரின் வீதியெல்லாம்
எக்கணமும் இங்கிருக்கும் எளியவர்க் காகவன்றோ?

குருவிக் குஞ்சின்மீது பனங்காயை வைத்தாக்கால்
குருவியது என் செய்யும் குறைவழியில் மாளுமன்றோ
அருவியாய் இம்மண்ணில் ஆதரவு தேடி மக்களெல்லாம்
வருவாரென்று யார்க்கும் வருமுன்னே தெரியாதே?

களையாறிச் சென்றவர்கள் கனவாக நினைத்திட்டார்
கடதாசி போடுதற்கும் கருத்தில்லை அவர்கட்கு
அடநண்பா! நீயாகிலும் இம்மண்ணை நினைத்து
சுவையாகவோர் கவிசமைத்தாய் சுந்தரனே வாழியநீ!

— வயலூரன் —

## எதை நான் கவியாக்க?

கவி ஒன்று வடிக்க
என் கரம் துடிக்கிறது
'கரு' ஒன்றை தேடுகின்றேன்.
என் முன்னே பல 'கருக்கள்'

தொலைக்கப்பட்ட மனிதத்தை
தொலைக்கப்படாத சுயநலத்தை
போட்டி போடும் பொறாமையை
போட்டு இழுக்கும்
கழுத்தறுப்பை
எதை நான் கருவாக்க?

இழந்துவிட்ட அமைதியை
இழக்கப்படாத ஆணவத்தை
அழிக்கப்பட்ட எம் தேசத்தை
அழிக்கப்படாத இனப்பகையை
எதைத்தான் கருவாக்க?

மறக்கப்பட்ட காதலை
மறக்கப்படாத பழிவாங்கலை
மருந்தாகிவிட்ட மனிதமாண்பை
மருந்தாக்க விரும்பாத
படிப்பினைகளை
இவற்றை நான் கருவாக்கவா?

கருக்களே கவிதையாக
நீண்டு கொண்டு செல்கையில்
கவிதை எழுதும் எண்ணமதை
கைவிடல் நன்றென
என் சிந்தையது சொல்லிடவே
திறந்துவிட்ட பேனாவை
மூடியும் நான் வைக்கிறேன்.

—வயவை ஜேன்—

## ஊமைக் காதல்

வார்சிலையோ பளிங்குருவோ
வடித்ததொரு ஓவியமோ
சீரிழையாள் சிவந்தவுடல்
சிந்தனைக்கு விருந்தாக

நீளும் நயனங்கள்
நிகழ்த்தும் நர்த்தனத்தில்
தேன்பொதியும் செவ்விதழ்கள்
செய்யும் சிறுநகையில்

ஓங்கும் பெருமூச்சு
உறுத்தும் ஒலியதனில்
வீங்கும் மென்முலைகள்
வரையும் விளக்கத்தில்

நங்கையின் உள்ளத்தில்
நல்லிசைவின் குறிகண்டு
பங்கமில் வார்த்தைகளால்
பன்மொழியும் பேசலுற்றேன்

செங்கமலப் பாதமன்னாள்
சிற்றுரையுங் கூறாது
மங்கும் நிலவுபோலும்
மலர்முகம் வாடலுற்றாள்

மின்னல் ஒளியமுதை
மேனியிலே தாங்கியவள்
இன்னல் கொண்டவள்போல்
இளைத்து ஏங்கலுற்றாள்

ஆயிரம் உணர்வலைகள்
அகத்தில் தேங்கி நின்றும்
தேர்ந்தெடுக்க மொழியின்றி
தேயும் நிலவானாள்

காதல் மனத்திருந்தும் — உளம்
கலக்க நோக்கிருந்தும்
பேதலித்துஏங்குகிறாள்—பெண்
பேசவொரு வார்த்தையின்றி

கண்கள் சொரிந்ததம்மா
— கன்னியவள்
கன்னம் கறுத்ததம்மா
முன்னமிருந்த நகை
முற்றாய் மறைந்ததம்மா

வாய்மொழியில்
களங்கமென்றால்
வஞ்சி நீ பொறுதியென்றேன்
காதலுனக்கில்லை யென்றால்
கட்டுறுதி சொல்லென்றேன்

நீதியின்றி நின்வழியில்
நிற்பது குற்றமென்றால்
பாதைவிட்டகல்வதற்கு
பரிந்தொரு சொல்
கூறென்றேன்

பவளக் கைவிரலை பக்குவமாய்
உயர்த்தி
உதட்டண்டை காட்டிநின்றாள்
உணர்ந்தேன் அக்கணத்தில்
ஊர்வசியாள் உற்றதுயர்

ஊமையாய்ப் பிறந்துவிட்டாள்
உத்தமியும் இப்புவியில்
போதைதரும் உடல்வனப்பு
[illegible]

— வை. சுந்தரேசன் —

## குழாய் முனிவன் நான்!

ஒருத்தி யுதரத்தில் கருவானேன்
சோதனைக் குழாயில் கருவூட்டப்பட்டேன்!
மற்றொருத்தி யுதரத்தில் சிறையானேன்.
மீண்டு முன்னவ மடியிலுறவானேன்
மாதாக்கள் மூவரெனக்கு!
பிதாவொருவன் தானெனக்கு
குடத்திலுதித்தவன் குடமுனி
குழாயிலுதித்த குழாய்முனிவன் நான்!

—ச. க. சுதர்சனக்குரு—

## வீழ்ச்சியில் எழுச்சி!

இருளிலும் தடங்கிடா எங்களின் பயணம்
எளிதிலே உடைக்க முடியா தெவரும்
அருளினை நாடும் அகதிகள் வாழ்வும்
அடிமையாய்ப் போகின் அழிவுதான் சேரும்!

ஆசைகள் மட்டும் மோசங்கள் செய்யும்
அன்புதான் வாழ்வை அழகுறச் செய்யும்
பூசைகள் மட்டுமே போதுமா சாமி?!
'போற்றி'கள் செய்திடின் வாழுமா பூமி?!

குண்டுகள் வீழினும் குலைந்திடா உறுதி,
கும்பிட வாழ்வது குலத்திற்கே இறுதி!
வண்டுகள் தேனீகள் வந்தெமைக் கொட்டும்
வல்லமை மிக்கவர் வான்புகழ் எட்டும்!

குளிர்கின்ற பனியே எங்களின் போர்வை
கொடுவெயில் தந்திடும் எம்மிடை வேர்வை,
ஒளிர்கின்ற சந்திரன் எங்களின் கூரை
ஒடுங்கிடா தெங்களின் வட்டத்தி னாரை!

முயற்சிகள் யாவும் 'முடிவிலி' ஆகும்
மூதலிலே உலகம் 'அறிவிலி' என்னும்
யயிற்சிகள் பெற்றவர் பாரினை வெல்ல
படையெனத் திரண்டு படுகளம் செல்வம்!

நெருப்பிலே போடினும் நிலைதடு மாறிடோம்
நெஞ்சிலே உறுதியை நிச்சயம் கைவிடோம்
வெறுப்பிலே வாழ்வினை வெறுத்துமே போயிடோம்—அயல்
வேதனை போக்கவே வேலைகள் காட்டுவோம்!

ஊரிலே திண்ணைகள் உதவும் எமக்கு
உடலினைக் காற்றினால் வுருடும் நமக்கு
பாரினில் அன்னைமேல் பாசங்கள் படரும்
பாதைகள் வளைந்திடாப் பயணங்கள் தொடரும்.

—கி. வாயுபுத்திரன்—

## காற்றின் தத்துவம்!

காற்று மிகமிகக் கொடுத்துமே வைத்தது!
மரங்களொவ்வொன்றினும்......இலைக் கதிரைகள்
ஏற்றமர்த்த இருந்திளைப் பாறுது,
பூவின் மெத்தையில் தூங்கி எழும்புது.
கீற்று முகில்களைத் தள்ளி உருட்டுது.
கீதம் பாடுது......எங்கையும் சுற்றுது.
சேற்று நீரில் முழுகுது......அலைகளின்
முதுகிலேறிச் சவாரியும் செய்யுது.

பறவை நீந்தக் கடலென ஆவதும்,
பகலில் வெயிலை ஆத்தி......பொறிஎழும்
தெருவில் காலுக்குச் செருப்புத் தருவதும்
தேகம் மீது பன்னீர்ப் பனித்துளி
இறைப்பதும், எங்கள் வேர்வையை மட்டுமா?.....
மரத்தின் வேர்வையை 'ஆவியுயிர்ப்பென"
உறிஞ்சிச் செல்வதும், மூங்கில் மரங்களை
குழலென்றாதிடும் கண்ணனும்......காற்றடா!

சுதந்திரத்துக்கு உவமைகள் தேடுகையில்
துணைக்கு நிற்பது காற்றுதான்! தீக்குஞ்சு
விதியைத் தீய்த்து வளர......உணவென
நிதம் நிறைவதும் காற்றுதான்! பெண்கனோ
சதங்கை கட்டியே ஆடிடத் தென்றலின்
அசைவு என்கிறோம்! வீரர் விலங்கெலாம்
உதிரப் பொங்கி உலகை நொருக்கினால்
உவமை தேடி புயலிடம் போகிறோம்.

ஒனறுமில்லை போற் தோன்றி வெளியையும்
நிறைத்து...வெற்றிடம் தோன்றா தடைத்திடும்
மண்ணுக்குள் உள்ள நுண்கிருமியும்
உயிர் விளைக்கச் சுவாசம் வழங்கிடும்.
எண்ணிலாப் பல தாக்கம் புரிந்திடும்.
புவியில் ஆயிரம் சேர்வைகள் ஆக்கும்; நாம்
உண்ணும் உணவை மரங்கள் தொகுத்திட
மூலமாகியும்......'மென்மையாய்' தோன்றிடும்.

'மென்மையானதே' வென்றிடும், மென்மையே
எங்கும் இரண்டறக் கலந்து எளிமையாய்
மின்னும்! மென்மையே உயிரென ஆகிடும்.
கனலை நூர்த்து அணைத்திடும்! வன்மைமுன்
மென்மை பொங்கி எழுந்திடில்......பூமியை
புயலழித்தல் போல் தின்றிடும் என்றறம்,
சொன்ன காற்றுன்னில் தெய்வத்தைக் காண்கிறேன்.
வன்மை செத்ததா (கு)ம்! மென்மையை நாடுறேன்.

—தேரடிச்சித்தர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி...

( VIII ஆம் பக்கத் தொடர் )

கொடுக்க வேண்டும் என மனதில் அடிக்கடி பொருமுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் மற்றவர்கள் செய்வது பிடிக்காமல் புகைந்தபடி இருப்பீர்கள். பேசுபவர்கள் பேசட்டும் உங்கள் பாட்டில் கடமைகளைச் செய்து கொண்டு இருங்கள். உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது செயற்படுங்கள். உஷ்ண பீடைகள், இரத்த அழுத்தம், கிருமித்தாக்கங்கள் இருக்கும். தகுந்த வைத்தியம் செய்து வரவும். உங்களைச்சுற்றி இருப்பவர்கள் வேதனை தருவார்கள். எதிர்ப்பாலாருடன் அவதானமாகஇருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள் மத்தியானம், புதன்.

தனுசு: எதையும் தாங்கும் செயற்திறன் உள்ள நீங்கள் எந்தவிஷயத்தையும் பொறுமையுடன் அணுக மாட்டீர்கள். வீடு, மனை, பொருள், வாகனம் என ஓடியாடித் திரிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள், பொருள் புழக்கங்கள் இருந்தாலும் அதிகதிட்டம் உருவாக்கி கையில் காசு சேரவிடாத பலன் உண்டு. வெளிப்படையாகப் பேசி பகைகளைத் தேடிக் கொள்ளாதீர்கள். சளி, குடல், கல்லீரல், சலவியாதி. களைப்பு, செமிபாடு என மாறி மாறி வருத்தலாம். இயற்கை வைத்தியம், சாப்பாட்டு முறையால் நற்பலன்கள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்டநாள்:வெள்ளி.

மகரம்: வாக்குச் சாதுரியம் இருந்தாலும் வெளியில் காட்டமாட்டீர்கள். உலக விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளுவீர்கள். உங்களை எவரும் இலகுவில் கண்டுவிட முடியாது. தொழில் ஸ்தானத்தில் உங்கள் வேலையும், நீங்களும் என்றபடி இருப்பீர்கள். எல்லோருக்கும் உதவுவீர்கள். உதவி பெற்றவர்களே உங்களை மதியாமல் செல்வதைப் பார்த்து வேதனை அடைவீர்கள். எதிர்ப்பாலாரைஅனுசரித்துப்போங்கள். அதனால் குடும்பத்தில் அமைதி ஏற்படும். வயிற்றில் குழப்பம், நரம்புப் பலவீனம், கைகால் தாக்கம், உடல்நோக்கள் சிலரை வருத்தலாம். வைத்தியத்தால் சுகம் கிடைக்கும். இடமாற்றம், செலவு சர்வ சாதாரணமாக கொடுக்கும். நிதானமாகச் செயற்படுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

கும்பம்: நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும். உங்களைப்பார்த்து சிலர் பொறாமைப் படுவார்கள். தொழில் ஸ்தானத்தில் வரவு செலவைச் சமப்படுத்தி வருமானம் வரும். நிதானமாகச் செலவு செய்யவும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். எதிர்ப்பாலாருடன் அடிக்கடி சினக்காமல் இருக்கவும். இருதயநோய், கைகால்வலி, சிரசு, தொண்டைகளில் சிறு சிறு வருத்தங்கள் என்பன கொடுக்கும். இனஜனங்கள் அயலவர்களை நம்பவேண்டாம். பொருளில் கவனமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள்.

மீனம்: விதிவழிப் பலன் நடக்கிறது எனப் பேசாமல் இருக்க முடியுமா? தொழில் விஷயமாக அங்கும் இங்குமாக ஓடி ஓடித்திரியவேண்டி இருக்கும். எப்பொழுதும் எதிர்நீச்சல் அடித்தபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் செல்வாக்கு இருக்கும். ஆயினும் உட்பகைக்கு குறைவிருக்காது. பொருளால் வந்தவேதனை நெஞ்சைத்தட்டியபடியே இருக்கும். சனீஸ்வரனின் தாக்கம் நேரடியாக இருப்பதனால் எந்தவிஷயத்திலும் ஒரு சலிப்புத் தன்மை கொடுத்தபடி இருக்கும். கைகால் விறைப்பு, வாதஉளைவு, வாய்வுத் தொல்லை, நரம்புச் சோர்வு என்பன வருத்த இடமுண்டு. வைத்தியம்செய்யவும். சனீஸ்வரனுக்கு பிரீதி செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்:திங்கள், வெள்ளி.

# அப்புக்குட்டியின்....

(V ஆம் பக்கத் தொடர்)

''...எனது அப்பு மிக மிகக் குறைவாகத்தான் படித்திருந்தார். அவர் நடையாய் நடந்து சாவகச்சேரி, கொடிகாமம், வரணி என்ற இடங்களுக்கெல்லாம் போய் மாடுகளை விலை பேசி அவிட்டுக் கொண்டு மழை வெய்யில் என்றும் பாராது அந்த மாடுகளோடே கால்கடுக்க நடந்து வருவார். இப்படிக் கஷ்டப்பட்டுத்தான் என்னையும் ஒருவாறு ஓரளவுக்குப் படிப்பிச்சு பிறகு வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சார்... நான் அந்த நாளையிலை எவ்வளவு கஷ்டப்பட்டுப் பள்ளிக் கூடத்துக்கு வந்தனான் எண்டு உங்களுக்குத்தான் தெரியுமே... நான் ஊத்தை உடுப்போடு வாறதெண்டு நீங்கள் என்னைச் சேர்க்கிறதும் இல்லை...''

இதை அவர் சொல்லும் பொழுது கடைக்கண்ணால் கண்ணீர் வழிந்து ஓடியது. அந்தக் கண்ணீர் துளி எனது இதயத்துள் கொதி எண்ணைத் துளியாய் விழுந்தது. அந்தக் கண்ணீரை அவர் துடைத்து விட்டு மீண்டும் தொடர்ந்தார்.

''எனது அம்மாவும் அப்படித்தான்.'' மேசையில் கடுதாசி மாலை போட்டு வைக்கப்பட்டிருந்த தனது தாயாரின் படத்தைக் காட்டிக் கொண்டே ''அவவும் சாப்பாட்டுக்கும் உடுபுடவைக்கும் எவ்வளவு கஷ்டப்பட்டவ எண்டு எனக்குத்தான் தெரியும்... ஆனாலும் உள்வீட்டுக் கஷ்டங்களை அடுத்த வீட்டுக்குச் சொன்னது கிடையாது... தனது மனத்திற்குள்ளேயே கஷ்டங்களை யாரு மறியாமல் வைத்து எரித்துச் சாம்பலாக்கி விடுவார். அந்தப் புகைச்சல் பெருமூச்சுகளால் வெளியேறும்... தோட்டுக் குச்சுக்குக்கூட வழியற்றிருந்த எனது அம்மாவுக்கு விதம் விதமாய் நகைகள், சேலைகளெல்லாம் வாங்கிக் குடுத்தன்... அப்புவின்ரை ஞாபகத்திற்காக அந்த சனசமூக நிலையத்தையும் அம்மாவின்ரை நினைவாக அந்த இராப் பள்ளிக் கூடத்தையும் கட்டிக் குடுத்திருக்கிறன்... பகலிலை படிக்க வசதியில்லாததுகளும் இரவில் வந்து படிக்குதுகள்...'' என்றார் மீண்டும் ஒருமுறை மிகவும் சந்தோஷமாக.

எனக்கு தறுமுவை எழுந்து நின்று கும்பிட வேண்டும் போல் இருந்தது. பள்ளிக் கூடத்தில் படிக்கும் போது நாம் அவரை ''ஊத்தையன, மூக்குச்சளி வழிக்கிறவன்'' என்றெல்லாம் சொல்லிதள்ளி வைத்திருக்கின்றோம். அதை இப்பவும் ஞாபகத்தில் வைத்திருந்தாலும், எள்ளளவும் பொருட்படுத்தாது, என்னை வீட்டிற்குக் கூட்டிச் சென்று உபசரித்தாரே. அதைவிட தனது சமூக மக்கள் இன்னும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக சனசமூக நிலையம், இராப் பள்ளிக் கூடங்கள் என்று எல்லாம் கட்டிக் கொடுத்தவனின் சிந்தனைப் போக்கு... தறுமு எனது மனத்திற்குள் எட்டாத உயரத்தில் எங்கோ... எங்கேயோ உயர்ந்து நிற்கின்றார்.

நான் அவரைச் சந்தித்து விட்டு வரும் பொழுது என்னை வாசல் வரை கொண்டு வந்து விட்டுச் சென்றார். நான் படிகளால் இறங்கி வரும் பொழுது அவரது ''ரு இன் வண்'' றேடியோவில் மைக்கல் ஜக்ஷனின் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

# புத்தரும் கொலைகாரனும்

புத்தர் வாழ்ந்த காலத்தில் பயங்கரமான கொலைகாரன் ஒருவன் இருந்தான். கொலை — கொள்ளை என்று அவன் ஏகப்பட்ட பாவங்களைச் செய்தவன். அவனுக்குத் திடீரென்று ஒரு நாள் ஓர் ஆசை தோன்றியது.

அது என்ன ஆசை தெரியுமா?

'புத்தரைப் பார்க்க வேண்டும்!'—ஆம் இதுதான் அவன் ஆசை.

இருந்தாலும் புத்தரை எப்படி பார்ப்பது?

இவனைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆதலால் நேரடியாக இவன் சென்று, ''நான் புத்தரைப் பார்க்க வேண்டும்'' என்று கேட்டால் யாரும் இவனை அனுமதிக்க மாட்டார்கள்.

என்ன செய்வது? யோசனை செய்தான்.

'யாருக்கும் தெரியாமல் சுவர் ஏறிக் குதித்து புத்தர் இருக்கும் மடத்திற்குள் செல்வது...' என்று முடிவு செய்தான்.

தன்னுடைய அந்த யோசனையை செயல்படுத்தினான்.

மடத்திற்குள்ளே போய்ப் பார்த்தால்... யாரையும் காணவில்லை. ஆள் நடமாட்டமே இல்லை. புத்தர் வெளியே பிக்ஷை எடுக்கப் போயிருந்தார்.

இவன் ஒருமாதிரியாக அங்கேயும் இங்கேயும் தேடி அலைந்து சமயத்தில் ஒருவரிடம் மாட்டிக் கொண்டான்!

அவர், ''என்னவிஷயம்?'' என்று விசாரித்தார்.

அதற்கு இவன் ''ஐயா... நான் திருடுவதற்காக இங்கே வரவில்லை... என்னைத் தவறாக நினைக்காதீர்கள். புத்தரைப் பார்க்கத்தான் வந்தேன்... வாசல் வழியாக வந்தால் நீங்கள் என்னை உள்ளே விடமாட்டீர்கள்... அதனால் சுவர் ஏறிக்குதித்து உள்ளே வந்தேன்... எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். புத்தரைப் பார்க்கவேண்டும்: அவ்வளவுதான்'' என்று கூறினான்.

உடனே அந்தச் சீடர் தம்மைவிட உயர்ந்தவராகிய சாரிபுத்ரரிடம் இந்தத் திருடனை அழைத்துச் சென்றார்.

சாரிபுத்ரருக்கும் அவருடன் இருந்த மற்ற துறவிகளுக்கும் — திருடனை அந்த இடத்தில் பார்த்தது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது:

''என்னப்பா... இங்கே எதற்காக வந்தாய்?'' என்று சாரிபுத்ரர் அவனிடம் கேட்டார்.

''புத்தரைப் பார்க்க வந்தேன்'' என்றான் திருடன்.

சாரிபுத்திரர்: ''எதற்காக நீ புத்தரைப் பார்க்க வேண்டும்?''

திருடன்: ''எனக்கு எல்லாமே வெறுத்துப்போய் விட்டது... என்னுடைய பாவங்களிலிருந்து நான் விடுபட வேண்டும்... அதற்குப் பிராயச்சித்தமாக நான் சந்நியாசி ஆகிவிட வேண்டும். மக்கள் தொண்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.''

அங்கிருந்தவர்கள் எல்லோரும் திருடன் கூறியதைக் கேட்டு மிகவும் வியப்படைந்தார்கள்.

'இவன் கொலை செய்தவன்... கொள்ளையடித்தவன்... நிறைய பாவங்கள் செய்தவன். சந்நியாசி ஆவதற்குரிய தகுதி இவனுக்கு உண்டா?' என்ற நியாயமான சந்தேகம் அவர்களுக்குத் தோன்றியது. அதை ஜோதிடம் மூலமாக அறிந்து கொள்ள அவர்கள் விரும்பினார்கள்.

'எந்தப் பிறவியிலாவது இவன் கொஞ்சம் ஏதாவ புண்ணியம் செய்திருந்தால் கூட போதும்...' என்று நினைத்து சாரிபுத்ரர் அவனது ஜாதகத்தைப் பார்க்க ஆரம்பித்தார்.

அப்போது மடத்தில் இருப்பவர்களுக்கு ஒரு விவரம் தெரிய வந்தது. அதாவது பழைய பிறவிகளெல்லாம் இவன் இதைவிட மோசமாக இருந்திருக்கிறான்! ஒரு துளி கூட நல்லது செய்ததில்லை! அதனால் இவனுக்கு விமோசனமே கிடையாது—என்ற முடிவுக்குத் தான் அவர்கள் வந்தார்கள்.

அது மட்டுமல்ல...

''இப்படியும் ஒரு ஜென்மமா...இவனை உடனடியாக வெளியே துரத்துங்கள்...''



(XI ஆம் பக்கம் பார்க்க)

# அர்த்தமுள்ள.....

(Vஆம் பக்கத் தொடர்)

''நீங்கள் இரண்டு பேரும் சொல்லுறது சரிதான். இந்தப் பேயனுக்கு வேறு தொழில் ஒன்றும் கிடைக்கவில்லையே...உதை விட்டு விட்டு றோட்டிலை துண்டு விரிச்சுக்கொண்டு இருக்கலாம்''

இப்படியாக மூன்று பேராலும் சிவசுந்தரம் பலவிதமாகப் பேசப்பட்டான்: இறுதியில் ''இப்ப சிவசுந்தரம் சந்தையால் வருவான். மறித்து அவனுக்குப் புத்தி சொல்லலாம்'' எனத் தீர்மானம் போட்டார்கள் ஊர்ப் பெரியவர்கள். அவர்கள் தீர்மானம் போடவும் சிவசுந்தரம் வரவும் கணக்காய் இருந்தது.

பாடம் தொடங்கியது.

''ஏன்ரா, தம்பி உனக்கு இந்த வேலை? ஒரு நல்ல சாதிக்காரன் செய்யிற வேலையா நீ செய்யிறாய்? ஏன் சாதியைவித்து தொழில் செய்யவேணும். இதால எங்கட ஆட்கள் எல்லோருக்கு மெல்லே வெட்கம். உதை விட்டிட்டுவேறேதும் தொழில் செய்...ஏனெண்டால் பிறகு உன்னை எங்கடை சபை சண்டியில் அண்டாயினர்''

சிவசுந்தரத்துக்கு ஆத்திரம் மேலிட்டது. கைகால்கள் துடித்தன. 'இவர்கள் நான் சாப்பிட வழியில்லாமல் கிடந்தபோது எட்டிப் பார்க்காதவர்கள். பிள்ளைக்கு வருத்தம் வந்தபோது ஒரு செப்புச் சல்லி உதவி செய்யாதவர்கள். இவர்களுக்கா கௌரவம் இருக்கின்றது.'?

சிவசுந்தரம் நிதானமாகப் பேசத் தொடங்கினான்.

''வன்னியால் வந்தபோது யார் எனக்கு இருக்க இடம் தந்தீர்கள்? தோட்டம் செய்ய ஒரு துண்டு நிலம் கேட்டேன். யார் தந்தீர்கள்? என்ரை பிள்ளைகள் பசியாலும், வருத்தத்தாலும் துடிச்சாங்களே! யாராவது எட்டிப் பார்த்தீர்களா? ஒரு தொழிலும் இல்லாமல் இருக்கேக்கை யாராவது உதவி செய்தீங்களா? என்ரை சாதி எனக்கு சாப்பாடு போடேல்லை. ஆற்றையோ சாதிதானே சாப்பாடு போடுது''

சிவசுந்தரம் சிறிது நிறுத்தினான்.

''இல்லைத்தம்பி எங்கட குலம்...'' என்று வாத்தியார் இழுத்தார்.

''சரி அப்படியெண்டால் நீங்கள் மூன்று பேரும் எனக்கு ஒரு ஐம்பதாயிரம் ரூபா தாருங்கோ...நான் சந்தியில் ஒரு கடைபோட்டுப் பிழைக்கிறன். இந்த தொழிலை விடுறன்''

புத்திரசிகாமணிகள் மூன்று பேரும் திடுக்கிட்டார்கள். ஐம்பதாயிரம் எண்டால் எவ்வளவு வட்டி? இவனிட்டை கொடுத்திட்டு எப்ப திரும்பி வாங்கிறது? மூன்று பேரும் அசடு வழிந்தார்கள்; நெளிந்தார்கள்.

''அதுவந்து தம்பி இப்ப ஐம்பதாயிரம் எங்க புரட்டுறது''

மூன்று பேருக்கும் ஏன்ரா இவனிடம் பேச்சுக் கொடுத்தோம் என்றாகி விட்டது.

''என்னவோ தம்பி உன்ரை அறிவுக்கெட்டியபடி செய்'' மூன்று பேரும் நாயி விருந்து உண்ணி கழண்ட மாதிரி அந்த இடத்தை விட்டு நழுவினார்கள்.

சிவசுந்தரத்துக்கு கண்கள் கலங்கின. இவர்கள் மனிதர்களா? கடற்கரையில் கடனுக்கு மீன் தருபவன் மேல் சாதியா? ஆத்திரத்துக்கு தண்ணீர் தராத இவங்கள் மேல்சாதியா?

சாதி குலத்தில் இல்லை. குணத்தில்தான் இருக்கின்றது என்பது இவர்களுக்குப் புரியுமா?

இவர்கள் இருக்குமட்டும் நாட்டுக்கு விமோசனம் இல்லை. சிவசுந்தரம் மனதுக்குள் எண்ணினான்.

சைக்கிளில் ஏறி வீட்டை நோக்கிப் புறப்பட்டான். பின்னால் பெட்டிக்குள் கடைக்குட்டி மனோவுக்கு வாங்கிய ''லக்ரோசன்'' பால்மாப் பெட்டியை திரும்பிப் பார்த்தான். கடைக்குட்டி மனோ கன்னத்தில் குழிவிழ சிரிக்கும் கபடமில்லாத முகம் ஞாபகத்தில் வந்தது.

''எனக்கு சாதி பெரிசில்லை. என்ரை பிள்ளையள் தான் பெரிசு'' தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் முகத்தில் நம்பிக்கை ஒளி தென்பட்டது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர கால.....

(11 ஆம் பக்கத் தொடர்)
வில்லை என்பது மட்டும் நிச்சயம்.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றில் விசேட கவன ஈர்ப்புப் பிரேரணையைக் கொண்டு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி கூட, ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரிய பலன் கிட்டா விட்டால் பாதுகாப்புப்பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவோம் என்று அறிவித்திருந்தது.

ஆனால் அந்தச் சிக்கலில் எல்லாம் மாட்டாமல் —

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது, கொழும்பில் தமிழர்கள் கைதாகும் விடயம் குறித்து நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தந்த பதில் அறிக்கை தமக்கு திருப்தி தருவதாகக் குறிப்பிட்டு, விடயத்துக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்து விட்டது. ★

# விரைந்து வரும்.....

(1 ஆம் பக்கத் தொடர்)
பலலட்சம் மைல்களாக இருந்தது தெரியவந்தபோது முதல் நிம்மதி பிறந்தது.

ஆய்வு தொடர்ந்தது.

2028 ஆம் ஆண்டு பூமியை நெருங்கி வரவுள்ளதாகக் கணிக்கப்பட்ட ஆய்வுத் தகவல்களின் நம்பகத் தன்மையை நிரூபிப்பதற்காக—

1990 இல் எக்ஸ். எவ். 11 பூமியை நெருங்கியபோது காணப்பட்ட அதன் தூரம், வேகம், தாக்கம் சுற்றுப் பாதை போன்றன தொடர்பான கணனிக் கணிப்புக்கள் இப்போதைய பிந்திய கணிப்புக்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டன.

அப்போதுதான் திருப்திகரமான முடிவை கணனிகள் வெளியிட்டன.

2028 ஆம் ஆண்டு 'எக்ஸ். எவ். 11' பூமியுடன் மோத வாய்ப்பில்லை. அதன் தாக்கம் பூமியை அழித்துவிடாது என்று கணனிகள் விடுத்த அறிவிப்பு பீதிகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தது.

பூமிக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலும், பூமியின் ஈர்ப்பு எல்லைக்குள் வந்து விடாமலும் அது பூமியை நெருங்கிச் செல்லும் என்ற விவரத்தை விளக்கப் படங்களுடன் கணனிகள் வெளியிட்டன.

''இந்த முறை பூமி தப்பிப் பிழைத்தது'' என்ற தகவல் உடனடியாக உலகெங்கும் அறிவிக்கப்பட்டது. அடி வயிற்றில் புளிகரைத்த பீதியில் இருந்து விடுபட்டது உலகம்.

கணனி ஆய்வுகள் நிம்மதியைத் தந்தாலும் இது போன்ற ஆபத்துக்களில் இருந்து பூமியை நிரந்தரமாகப் பாதுக்கமுடியுமா என்றகேள்வி தொடர்கிறது.

பூமியை இலக்குவைத்து சுமார் 4 ஆயிரம் விண்கற்கள் அண்டவெளியில் சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவை ஒவ்வொன்றும் தனக்கென ஒரு சுற்றுப் பாதையைக் கொண்டியங்கினாலும் அடிக்கடி பாதைமாறி விடுகின்றன.

பாதைமாறிப் பயணமாகி பூமியை நோக்கி வரும் விண்கற்களில் பெரும்பாலானவை பூமியின் ஈர்ப்பு எல்லைக்குள் வந்ததும் அதன் சக்தியை எதிர்கொள்ள முடியாமல் அழிந்துபோகின்றன. ஆனால் லட்சத்தில் ஒரு தடவையில் அந்த சக்தியையும் மீறிவரும் சில விண்கற்கள் பூமியைப் பதம்பார்த்து விடலாம்.

650 லட்சம் வருடங்களுக்கு முன்னர் இத்தகைய விண்கல் ஒன்று பூமியில் மோதியதால் டைனோசர் என்ற ஆதிக்கம் மிகுந்த விலங்கு இனம் மண்ணோடு மண்ணாகி அழிந்தது சரித்திரம்.

அமெரிக்காவின் அரிசோனாவில் விண்கல் ஒன்று மோதியதால் ஏற்பட்ட பல மைல்கள்நீளஅகலம்கொண்ட பாரிய பள்ளத்தை இன்னும் காணலாம். உலகின் பல இடங்களில் சிறு விண்கற்கள் அவ்வப்போது வீழ்ந்ததற்குச் சான்றுகள் உள்ளன.

பூமியை மட்டுமன்றி பிற கிரகங்களையும் விண்கற்களும், வால் வெள்ளிகளும் தாக்கி விடுகின்றன. 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ''சூமேக்கர் லெவி'' என்ற வால் நட்சத்திரம் வியாழன் கிரகத்துடன் மோதி ஏற்படுத்திய அனர்த்தத்தை வார்த்தைகளில் வடிக்க முடியாது.

செக்கனுக்கு 4 ஆயிரம் கிலோ மீற்றர்கள் என்ற வேகத்தில் வியாழனுடன் மோதிய அந்த வால் நட்சத்திரம் வியாழன் கிரகத்தில் நமது பூமியின் அளவுடைய பள்ளத்தை ஏற்படுத்தியது.

பூமியை நோக்கிச் சுழலும் 4 ஆயிரம் விண்கற்களில் 108 ஆவது நிரலில் உள்ளதுதான் ''எக்ஸ். எவ். 11''. இதை விட இன்னும் எத்தனை விண்கற்கள், அவற்றில் எது, எப்போது பூமியை பதம் பார்க்கும் என்பது தெரியாது. மனித அறிவியல் அவற்றைக் கண்டுபிடித்து விட்டாலும் அவற்றிடம் இருந்து பூமியைப் பாதுகாக்கும் வலிமை மனித குலத்திடம் உண்டா?

இந்தப் பூமிப் பந்து என்றைக்கும் மனித குலத்துக்காய் தப்பிப் பிழைத்திருக்குமா? ★

# புத்தரும்....

(X ஆம் பக்கத் தொடர்)
என்று சத்தம் போட்டார்கள்.

இவனுக்கு அதைக் கேட்டதும் கோபம் வரவில்லை... ஆனால் மனதிற்குக் கஷ்டமாக இருந்தது... 'புத்தரை நெருங்கக்கூட நமக்குத் தகுதி இல்லை என்னும் போது நாம் எதற்காக உயிர் வாழவேண்டும்?' என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. ஆதலால் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்துடன் அவன் வெளி மதில் சுவரில் தலையை மோதி உடைத்துக் கொள்ள ஆரம்பித்தான்.

அந்தச் சமயம் புத்தர் வெளியேயிருந்து உள்ளே வந்துகொண்டிருந்தார். தலையிலே ரத்தத்தோடு இருக்கும் இவனைப் பார்த்தார். தடுத்து நிறுத்தினார்.

புத்தரைப் பார்த்ததும் அவனுக்குப் பரவசம்...அவரது காலில் விழுந்து அழுதான்.

புத்தர் ஆறுதல் சொன்னார்.

''என்ன நடந்தது?'' என்று அவனை விசாரித்தார்.

அவன், தான் தற்கொலை செய்துகொள்ள முயன்றதைக் கூறினான்.

''ஏன் இவனை விரட்டினீர்கள்?'' என்று மடத்தில் இருந்தவர்களிடம் புத்தர் வினவினார்.

அவர்கள் அவருக்கு விவரம் கூறினார்கள்.

''இவனை ஒரு வாரத்தில் தகுதி உடையவனாக ஆக்கி விட முடியும்!'' என்றார் புத்தர்.

ஆனால் சீடர்களுக்கு அதில் நம்பிக்கை வரவில்லை.

இவனைப் பார்த்து. ''நீ என் கூடவே இருந்துகொள்'' என்றார் புத்தர்.

இவனுக்கு மிகவும் மகிழ்ச்சி...ஒரு வாரத்தில்... இவன் புதிய மனிதனாக மாறிவிட்டான். அடக்கம், அமைதி, சாந்தம் எல்லாம் இவனுக்கு வந்துவிட்டது. சந்நியாசி ஆவதற்குரிய தகுதியும் வந்துவிட்டது!

# விடைகள்

IV ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

## கண்டு பிடியுங்கள்

மிருகங்கள்:- சிங்கம், புலி, மான், கரடி, மாடு, நாய், பன்றி.

பறவைகள்:- கிளி, புறா, காகம், மைனா, குயில், ஆந்தை, வாத்து.

## உங்களால் இயலுமா?


1. பண்டம்.
2. பாடசாலை. 3. மந்திரி.
4. சந்ததி. 5. அவலம்.

## வார்த்தை விளையாட்டு

கஞ்சு, கஞ்சி, கரி, கசை, கதை, தை, சிசு, சிரி, சிதை, மஞ்சு, மரி, மசி, மஞ்சை, சுரி, சுதை, பஞ்சு, பசி, பசை, பரி, பசு, பதை, பரிசு.

## உங்களால் முடியுமா?

படகுகள் செல்வதற்கான வழி இதுதான்.




# ஏன் வந்து பிறந்தனையோ?

புத்தம் புதுப் பொன்மகளாய் ஆண்டாண்டு உனையழைத்த
அக்காலந் தனைநினைந்து சோகமுறும் எங்களிடம்
சித்திரைப் புதுமகளே ஏன் வந்து பிறந்தனையோ?

தித்திக்கும் தீன்பண்டம் புத்தாடை பட்டாசு
குதூகலம் இனியெப்போ எனஏங்கும் எங்களிடப்
சித்திரைப் புதுமகளே ஏன்வந்து பிறந்தனையோ?

சொத்திழந்து சுகமிழந்து சொந்த உறவிழந்து
இன்றும் அகதியென அலைகின்றோம் எங்களிடம்
சித்திரைப் புதுமகளே ஏன்வந்து பிறந்தனையோ?

யுத்தத்தில் குருதியோடி கண்ணீரால் நனைவுற்று
இன்றுவரை ஈரமுள்ள எம்மண்ணில் எங்களிடம்
சித்திரைப் புதுமகளே ஏன் வந்து பிறந்தனையோ?

சுத்திவரத் துப்பாக்கிக் குழாய்களின் வேலியுள்ளும்
சப்பாத்துக் கால்களுள்ளும் சிறையிருக்கும் எங்களிடம்
சித்திரைப் புதுமகளே ஏன்வந்து பிறந்தனையோ?

சோத்துடன் சலுகைகளும் மின்சாரம் இதுதவிர
இனியென்ன சுதந்திரம் என்றுவாழும் எங்களிடம்
சித்திரைப் புதுமகளே ஏன்வந்து பிறந்தனையோ?

சத்தியமாய் என்னவளே சோதனைகள் நீங்கியொரு
பொற்காலம் உருவாகும் அப்போது எங்களிடம்
சித்திரைப் புதுமகளே நீ வந்து பிறந்திடுவாய்?

— கவரி —

# சூரியமூர்த்திக்கு சுந்தரத் தூது

ஏழு வர்ணக் குதிரை பூட்டி
எழுந்தருள்வாய் தேரிலேறி
மால் வண்ணம் மகிமை காட்டி
மயக்குதே வானமெங்கும்
தோள் வண்ணம் திசைகளெட்டும்
தெறிக்குதே மின் அலைகளாக
மூவுலகும் உய்யவைக்கும்
முதற் பொருளே சூரியமூர்த்தி.

மானுடமும் விலங்குமீங்கு
மகிமை பெற்றுய்வதுன்னால்
மரம் செடி கொடிகள் யாவும்
மகத்துவம் பெற்றதுன்னால்
நீரையும் நீயே வார்த்தாய்
நிலத்தையும் நீயே யாத்தாய்
காற்றையும் நீயே போர்த்தாய்
கடலையும் நீயே கோர்த்தாய்.

தீயினும் கொடிய வெம்மைத்
திகழொளி பரப்பும் தேவே
நேரமும் நாளும் உன்னால்
நெடுவருடமும் யுகமுமுன்னால்
காலத்தாற் பொய்யாதுய்யக்
காத்தருள் தேவதேவே
பக்தியுடன் பணிந்தோம் நின்னை
பதற்றமும் தீர்த்தருளுவாயே!


— மாவை செங்கோனை —

# உலகப் புகழ் பெற்ற சிற்பம்

இத்தாலி நாட்டில் தோன்றிய உலகப் புகழ் பெற்ற சிற்பி மைக்கேல் ஏஞ்சலோ.

அவர் ஒரு சமயம் வெண் சலவைக் கற்கள் வியாபாரம் செய்யும் கடைவீதி வழியாகச் சென்று கொண்டிருந்தார்.

அங்கு ஒரு கடையில் நீளமான பெரிய ஒரு சலவைக் கல் கிடந்தது. ஆனால் அந்தக் கல்லைச் சுற்றிலும் ஏராளமான அழுக்குப் படிந்திருந்தது.



மைக்கேல் கல்லை உற்றுக் கவனித்தார். பிறகு அதன் கடைக்காரரிடம் அவர், ''இந்தக் கல்லின் விலை என்ன?'' என்று கேட்டார்.

பல ஆண்டுகளாக விலைக்குப் போகாமல் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் ஒரு கல்லை, இப்போது ஒருவர் விலைக்குக் கேட்கிறார் என்பதில் கடைக்காரருக்கு மகிழ்ச்சி.

''நீங்கள் இதற்கு விலை என்று எதுவும் தர வேண்டாம். இந்தக் கல்லை முதலில் நீங்கள் இங்கிருந்து எடுத்துச் சென்றாலே போதும்!'' என்றார் கடைக்காரர்.

ஒரு வருடம் கழிந்தது.

ஒரு நாள் மைக்கேல் ஏஞ்சலோ கடைக்காரரைத் தமது வீட்டிற்கு அழைத்திருந்தார். அங்கே அவர் கடைக்காரருக்கு பால் வெண்ணிற அழகிய ஒரு சிலையைக் கட்டினார்.

அது என்ன சிலை தெரியுமா?

சிலுவையிலிருந்து இயேசுவை இறக்கி அவரை அன்னை மேரி தமது மடியின் மீது அமர்த்தியிருக்கும் காட்சியைச் சித்திரிக்கும் அழகிய சிலைதான் அது.

அவர்கள் இருவரும் கற்சிலைகள் என்பது கூர்ந்து கவனித்தால்தான் புரிந்து கொள்ள முடியும். அந்த அளவுக்கு சிலை ஜீவ களை பொருந்தியதாகவும், தத்ரூபமாகவும் அமைந்திருந்தது.

சிலையைப் பார்த்து பிரமித்து, வாயடைத்துப்போய் நின்ற கடைக்காரரைப் பார்த்து மைக்கேல் ஏஞ்சலோ கூறினார் —

''அன்றைய தினம் நீங்கள் என்னிடம் கொடுத்தீர்களே, அதே கல்தான் இது.''

''ஆமாம், அழுக்கு மண்டியிருந்த அதே கல்தான். நான் அந்தக் கல்லைப் பார்த்த போது இவர்கள் இருவரும் என்னிடம், 'நாங்கள் நீண்ட நாள்களாக இந்தக் கல்லுக்குள் அடைப்பட்டிருக்கிறோம், எங்களை நீங்கள் சற்று கவனிக்கக் கூடாதா?' என்று என்னைக் கேட்பது போல் எனக்குத் தோன்றியது.

''நான் அவர்களைச் சுற்றியிருந்த வேண்டாத பகுதிகளை நீக்கினேன், இதோ அவர்கள்...'' என்றார்.

சிற்பிதான் ஞானகுரு; மாசு படிந்த கல் மனிதன்; அழகிய உருவச்சிலை என்பது நமது ஆன்ம வெளிப்பாடு; மாசு என்பது அஞ்ஞானம். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதீய ஜனதா கூட்டணி அரசுக்கு நெருக்கடி

# தந்து வரும் ஜெயலலிதா!

## அவரின் குறுகிய அரசியல் நோக்கம் ஸ்திரமின்மைக்கே வழிவகுக்கும்

இந்தியாவின் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் பூட்டா சிங் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பூட்டாசிங்கை பதவி நீக்கம் செய்தது மூலம் பாரதீய ஜனதா கூட்டணி அரசியலில் ஏற்பட்ட நெருக்கடிக்கு பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாய் தற்காலிகமாகத் தீர்வு கண்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை அனைத்திந்திய அ. தி. மு. க. தலைவர் செல்வி ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். கூட்டணி அரசில் நெருக்கடி ஏற்பட இதுவே காரணமாக அமைந்தது.

மத்திய அமைச்சர்களான பூட்டாசிங், ராம்ஜெத் மலானி, இராமகிருஷ்ண ஹெக்டே ஆகிய மூவரும் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும்—



வாஜ்பாய்

அப்படி அவர்களை நீக்கா விட்டால் சேடப்பட்டி முத்தையாவை அமைச்சரவையில் மீண்டும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும்— செல்வி ஜெயலலிதா தமது கடிதத்தில் கேட்டிருந்தார்.

அளவுக்குமிஞ்சிய சொத்து சேர்த்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற விசாரணையை எதிர் நோக்கியுள்ள சேடப்பட்டி முத்தையா நிர்ப்பந்தம் காரணமாக சமீபத்தில் அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார்.

### கூட்டணிக்குள் ஏற்பட்ட முதலாவது நெருக்கடி

மத்தியில் பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணி அரசு பதவிக்கு வந்தபின்னர் கூட்டணிக்குள் ஏற்பட்ட முதலாவது அரசியல் நெருக்கடியாக ஜெயலலிதாவின் கோரிக்கையும் பூட்டாசிங்கின் பதவி நீக்கம் கருதப் படுகிறது.

ஏற்கனவே மத்தியில் பாரதீய ஜனதா அரசு அமைப்பதற்கு ஆதரவுக் கடிதம் வழங்குவதை தாமதப்படுத்தி நெருக்கடியை உருவாக்கியவர் செல்வி ஜெயலலிதா.

பின்னர் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக சில அமைச்சர் பதவிகளை அவர் கேட்டுப்பெற்றிருந்தார். அ. தி. மு. க. உறுப்பினர் தம்பித்துரைக்கு வழங்கப்பட்ட சட்டத்துறை அமைச்சர் பதவியும் இத்தகையதே.

மு. கருணாநிதி தலைமையிலான தி. மு. க அரசை கலைப்பது, தம் மீதும் தமது சகாக்கள் மீதுமான வழக்குகளில் இருந்து விடுபடுவது ஆகியவையே செல்வி ஜெயலலிதாவின் பிரதான நோக்கம் என்பதில் சந்தேகமில்லை.

இதனை அடைவதற்கு அவர் எவருடனும் கூட்டுச் சேரத்தயார் என்பதையே அவரின் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

பூட்டாசிங், இராமகிருஷ்ண ஹெக்டே, ராம்ஜெத்மலானி ஆகிய அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்ய வற்புறுத்தி பிரதமர் வாஜ்பாய்க்கு செல்வி ஜெயலலிதா எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜெயலலிதாவின் கடிதம்

''வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக சேடப்பட்டி முத்தையா மீது தமிழக அரசு வழக்குப் பதிவு செய்துள்ளது. அமைச்சராக மார்ச் 19 ஆம் திகதி முத்தையா பொறுப்பேற்ற போதே இந்த விவகாரம் பிரதமருக்குத் தெரியும். குற்றச்சாட்டை முழுமையான ஆதாரமாகக் கொள்ள முடியாது என்பதால் முத்தையாவும் அவரைப்போன்ற வேறு சிலரும் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டனர்.

''முத்தையாமீது சென்னை சிறப்பு நீதிமன்றம் இம்மாதம் 6 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இதனை அடுத்து அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யுமாறு முத்தையாவை நான் கேட்டுக்கொண்டேன். அதை ஏற்று முத்தையா உடனடியாக புதுடில்லி சென்று சில மணி நேரங்களில் ராஜினாமாவைச் சமர்ப்பித்தார். முத்தையா மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து 24 மணி நேரத்துக்குள் இவை எல்லாம் நடந்து முடிந்தன.

''உங்களது நல்லாட்சி, நிர்வாகத் தூய்மை ஆகியவற்றை கருத்திற் கொண்டு முத்தையா ராஜினாமாச் செய்தார். ராஜினாமாவை ஏற்பதில் நீங்கள் காட்டிய வேகம் அரசாங்கத்தின் நன்மதிப்பைக் காப்பாற்றுவதில் உள்ள அக்கறையை வெளிப்படுத்தியது. ஆனால் இதே வேகத்தை இதே போன்ற நிலைமையில் உள்ள மற்றைய அமைச்சர்கள் விடயத்தில் நீங்கள் காட்டாதது துரதிர்ஷ்டமானது; விநோதமானது.

''முத்தையா இவர்களை விட சாதாரண குற்றங்கள் தொடர்பாக வேண்டுமென்றே அரசியல் பழிவாங்கலுக்காக தொடரப்பட்ட வழக்குக்காக அமைச்சர் பதவியில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளார். வேறு சில அமைச்சர்கள் மீதும் குற்றச் சாட்டுக்கள் உள்ளன. அமைச்சரவை விடயத்தில் ஒரே சீரான நிலையான அணுகுமுறையைக் கடைப் பிடிக்கவேண்டும்.

''குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கும் அமைச்சர்கள் உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டும். அவர்கள் விலகாவிட்டால் நீங்கள் அவர்களை விலக்க வேண்டும். அப்படி செய்வதன் மூலம் நீங்கள் பிரசாரம் செய்யும் லட்சியங்களை நிலைநாட்ட முடியும்.

''வெறும் முறைப்பாடுகள் ஆதாரங்கள் ஆகா என்று நீங்கள் நினைத்தால் முத்தையாவை அமைச்சரவையில் சேர்ப்பது நியாயமானது. அதைச் செய்ய முன்வரவேண்டும்''

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

செல்வி ஜெயலலிதாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள மூன்று அமைச்சர்களிலும் பூட்டாசிங்மீதே குற்றச் சாட்டுக்கள் அதிகமாக உள்ளன.

மற்றைய இரு அமைச்சர்களான ராம்ஜெத்மலானி, இராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோர் மீது செல்வி ஜெயலலிதா தனிப்பட்ட குரோதங்களைக் கொண்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஏற்கனவே பெங்களூரில் நடைபெற்ற லோக் சக்தி மாநாட்டில் செல்வி ஜெயலலிதாவை இவர்கள் இருவரும் தாக்கிப் பேசி இருந்தனர்.

### பூட்டாசிங்

மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் பூட்டா சிங் மற்றும் அவரது குடும்பத்தவர்களிடம் ரூ. 10 கோடி (இந்தியரூபா) மதிப்புள்ள கணக்கில் வராத சொத்துக்களை வருமான வரித் துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

கணக்கில் வராத சொத்தில் அந்நிய செலாவணி பரிமாற்றம் குறித்து முதற்கட்ட விசாரணை நடைபெற்று வருவதாக டில்லி செயலகப் பிரிவு இயகுநர் பெஸ்பருவா தெரிவித்துள்ளார்.



ஜெயலலிதாவின் தயவு இல்லாமல் பாரதிய ஜனதா கூட்டணி அரசு நீடிக்க முடியும் என்றும் அ. தி. மு. க. அமைச்சர்களை வெளியேற்றி அக்கட்சியுடனான உறவைத் துண்டித்து விடும்படியும் மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ராம்ஜெத் மலானி பிரதமர் வாஜ்பாயைக் கேட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் பின்னால் இருந்து செயற்படும் சுப்பிரமணிய சுவாமி மீதும் ராம் ஜெத்மலானியின் பாய்ச்சல் திரும்பியுள்ளது.

''சுவாமி நோய்வாய்ப்பட்ட பூச்சி. அதை நசுக்குவதோடு மட்டும் அல்லாது கவனமாக எரித்து சாக்கடையில் வீச வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் சாக்கடையிலேயே வாசம் புரிந்து வரும் அது மீண்டும் வளர்ந்து விடும்'' என்று ராம்ஜெத் மலானி தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி பரிமாற்றம் தொடர்பாக பூட்டாசிங்கின் மகன்கள் சம்ப் ஜோத்சிங், அரவிந்தர் சிங் ஆகியோருக்கு செயலகப்பிரிவு நான்கு 'சம்மன்' களை அனுப்பி உள்ளது. ஆனால் இதுவரை அவர்களிடம் இருந்து பதில் எதுவும் இல்லை.

ஹவாலா வழக்கு விசாரணையின் போது குற்றஞ் சாட்டப்பட்ட அனைவரது வருமானம் குறித்தும் விசாரிக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து ஹவாலாவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பூட்டாசிங்கின் வருமானம் குறித்து வருமானத்துறை ஆய்வு செய்தது. அதன்படி 1996 நவம்பரில் பூட்டாசிங்வீட்டில் சோதனை நடத்தி கணக்கில் வராத வருமானங்களுக்குரிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. [illegible] மாரின் வெளிநாட்டு பணப் பரிமாற்றத்துக்குரிய ஆவணங்களும் சிக்கின. இந்த ஆவணங்களின் அடிப்படையில் ரஷ்யா, மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் பூட்டாசிங்கின் மகன்மாரின் வர்த்தக நடவடிக்கைகள் குறித்து தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறது.

பூட்டாசிங்கின் மகன் அரவிந்தர்சிங் நடத்தி வரும் நிறுவனத்துக்காக ரஷ்ய நிறுவனத்திடமிருந்து ஆழ் கடல் மீன் பிடிப்படகுகள் வாங்கப் பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் 83 லட்சம் ரூபா ஆகும்.

மற்றொரு மகன் நடத்தி வரும் ஸோரோவர் வனஸ்பதி நிறுவனப் பங்குகளை வாங்குவதற்கு 41 லட்சம் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை வைப்புச் செய்தது யார் என்பது இன்னும் தெரியவரவில்லை.

இதே போன்று பல்வேறு வகையில் மொத்தம் 10 கோடி ரூபா சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வருமான வரித் துறையினர் நடவடிக்கையை எதிர்த்து பூட்டாசிங் மேன்முறையீடு செய்துள்ளார்.

ஆனால் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. அந்நிய செலாவணி பரிமாற்றம் தொடர்பாக செயலாக்கப் பிரிவின் 'சம்மன்' களுக்கு பூட்டாசிங்கின் மகன்மார் பதில் அளிக்கத் தவறினால் கிரிமினல் வழக்கு தொடரப் படும் சாத்தியம் இருந்து வருகிறது.

அத்துடன் ஜார்க்கண்ட் முக்தி மோட்சா எம்பிக்களுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும் பூட்டாசிங் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### இராமகிருஷ்ண ஹெக்டே

கர்நாடக முதல்வராக இராமகிருஷ்ண ஹெக்டே இருந்த சமயம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து 110 ஏக்கர் நிலத்தை தனது மருமகன் முறையான மனு நிச்சான் என்பவருக்கு அளித்தார் என்று குல்தீப் கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் கமிஷனின் முடிவை மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டு விட்டது.

இதே போன்று இராமகிருஷ்ண ஹெக்டே 25 லட்சம் ரூபா ஊழல் புரிந்ததாகவும் பொலீஸார் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த விஷயத்தை மத்திய அமைச்சரவை 1996 ஆம் ஆண்டிலேயே ஏற்றுக் கொண்டு விட்டது. சி. பி. ஐ. முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ய இருப்பதால் இராமகிருஷ்ண ஹெக்டே மீது வழக்கு வர இருப்பது தவிர்க்க முடியாதது ஆகும்.

### ராம்ஜெத் மலானி

ராம்ஜெத் மலானி வெளிநாட்டில் இருந்த சமயம் இரண்டு லட்சம் அமெரிக்க டொலர்களை சட்ட விரோதமாக வாங்கியதாக மும்மை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். இது அந்நிய செலாவணி மீறல் குற்றம் ஆகும். செயலாக்கத் துறை இந்த விடயத்தில் தானாகவே முன்வந்து நடவடிக்கை எடுத்துள்ளது. வழக்கு தொடர்வதற்கு பிரதமரின் அனுமதியையும் செயலாக்கத்துறை எதிர்பார்த்தவாறு உள்ளது.



ஜெயலலிதா

### நெருக்கடி தொடருமா?

பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணி அரசில் பாரதீய ஜனாதாக்கட்சிக்கு அடுத்ததாக இரண்டாவது பெரிய கட்சி அ. தி. மு. க.; மத்தியில் 18 உறுப்பினர்களை கொண்டுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி. மு. க., ஜனதாக்கட்சி, பாரதீய ஜனதாக் கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்து கடந்த லோக சபைத் தேர்தலில் 30 இடங்களை அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணி பெற்றிருந்தது.

தனித்து அ. தி. மு. கவின் 18 உறுப்பினர்கள் மாத்திரம் அரசுக்கு எதிராக வாக்களித்தாலேயே ஆட்சியைப் புரட்ட முடியும் என்ற நிலைமை இருப்பதால் செல்வி ஜெயலலிதாவின் நெருக்குதல்கள் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை என்பதே பெரும்பாலான அரசியல் அவதானிகளின் கருத்து.

### பின்னணியில் சுவாமி

தற்போதையநெருக்கடியில் ஜெயலலிதாவுக்கு பின்னால் நிற்பவர் ஜனதாக் கட்சித் தலைவர்சுப்பிரமணியசுவாமி என்று நம்பப்படுகின்றது.

ஏற்கனவே பாரதீய ஜனதா அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின் போது வாக்களிப்பில் கலந்து கொள்ளாது விலகிக் கொண்டவர் சுப்பிரமணிய சுவாமி.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள சுப்பிரமணிய சுவாமியை காங்கிரஸ் ஒரு கருவியாகப் பயன்படுத்த முனைவதில்ஆச்சரியம்இல்லை

சபாநாயகர் தெரிவின் போது சம்பிரதாயத்தை மீறி போட்டி வேட்பாளர் ஒருவரை காங்கிரஸ் நிறுத்தியது.

இதன் மூலமே பாரதீய ஜனதாக்கட்சி கூட்டணி அரசைக் கவிழ்க்கும் நம்பிக்கையை காங்கிரஸ் இன்னும் இழந்து விடவில்லை என்பது தெளிவாகிறது.

குறுகிய அரசியல் நோக்கங்களைக் குறிக்கோளாகக் கொண்டு பாரதீய ஜனதாக் கூட்டணியில் அ. தி. மு. க. இணைந்து செயற்படுவது எதிர்த்தரப்புக்கு வாய்ப்பான சூழ்நிலையை உருவாக்கி வருகிறது. ★

உலக உலா

என்.பி.சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org